# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 1 சனிக்கிழமை (13.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 079


# பொன்சேகாவின் அடிப்படை உரிமை மீறல் மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது

## 23ஆம் திகதி இடைக்கால நிவாரணம் குறித்து ஆராயும்

கொழும்பு, பெப்ரவரி 13

**கைது செய்யப்பட்டு இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எதிரணிப் பொதுவேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில், அரசுத் தரப்பினால் தெரிவிக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனைகளை, அது சம்பந்தமான விரிவான விசாரணைகளின் பின்னர் உயர்நீதிமன்றம் நிராகரித்தது. மனுவை முழு விசாரணைக்கு ஏற்பது என்றும் அது தீர்மானித்தது. அதேசமயம், மனுவில் மனுதாரர்கள் சார்பில் கோரப்பட்டுள்ள இடைக்கால நிவாரணங்கள் குறித்து எதிர்வரும் 23 ஆம் திகதி விசாரணை நடத்தவும் உயர்நீதிமன்றம் முடிவு செய்தது.**

பிரதம நீதியரசர் அசோகா என். சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தன, சந்திரா ஏக்கநாயக்கா ஆகியோர் கொண்ட ஆயமே இந்த முடிவுகளை நேற்று எடுத்தது.

ஜெனரல் பொன்சேகா கைதுசெய்யப்பட்டமையை ஆட்சேபித்து அவரது மனைவி அனோமா பொன்சேகா மற்றும் பொன்சேகாவின் கட்சியான புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் சட்டத்தரணி ஜமீலா பெரேரா ஆகியோரின் பெயர்களை மனுதாரர்களாகக் குறிப்பிட்டு கடந்த புதன்று உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(23ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பின்போது...

## ஜே.வி.பியின் மூத்த தலைவர்களும் கைதாகலாம் என அச்சம்!

கொழும்பு,பெப்.13

ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களைக் கைது செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என கட்சி வட்டாரங்கள் அச்சம் வெளியிட்டுள்ளன.

இவ்விடயம் குறித்து அக்கட்சியின் உயர் பீடம் நேற்று அதன் வழக்கறிஞர்களுடன் ஆராய்ந்துள்ளது எனவும் தெரிகின்றது.

ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்கள்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு ரணில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து வற்புறுத்து

### ஆனால் இராணுவ விசாரணையின் பின்னர்தான் முடிவாம்

கொழும்பு,பெப்.13

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிராக இராணுவத்தினர் ஆரம்பித்துள்ள ஆரம்பக் கட்ட விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னரே அவரை விடுவிப்பது குறித்து தீர்மானிக்க முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு கோருவதற்காக வெள்ளிக்கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சந்திப்பதற்குத் தம்மை

(23ஆம் பக்கம் பார்க்க)

## எந்தச் சட்டங்களின் கீழ் பொன்சேகாவை அரசு தடுத்துவைத்திருக்கிறது எனக் கேட்கிறது அமெரிக்கா

கொழும்பு,பெப்.13

முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிட்டவருமான ஜெனரல் சரத் பொன்சேகா எந்தச் சட்ட அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெளிவுபடுத்துமாறு அமெரிக்கா இலங்கை அரசைக் கோரியுள்ளது.

வியாழக்கிழமை வாஷிங்டனில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பொதுவிவகாரத் திணைக்களத்திற்கான உதவி அமைச்சர் பிலிப்

(23ஆம் பக்கம் பார்க்க)

## சரத்தின் மனு நீதிமன்றத்தில் ஏற்கப்பட்டதை தொடர்ந்து தலைநகரில் பாதுகாப்பு இறுக்கம்

கொழும்பு,பெப்.13

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சார்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்க முடிவுசெய்யப்பட்டுள்ளதை அடுத்து தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு இறுக்கமாக்கப்பட்டுள்ளது என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சதி முயற்சிக் குற்றச்சாட்டின் கீழ் சரத் பொன்சேகா கைதுசெய்யப்பட்டதையடுத்து அரசுக்கு எதிராக போராட்டங்களை எதிர்க்கட்சிகள் நடத்தின. அந்தப் போராட்டங்களின் போது வன்செயல்கள் வெடித்தன.

அந்தச் சூழலிலேயே ஜெனரல் சரத் பொன்சேகா சார்பில் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனு விசாரணைக்கு எடுக்கப்படவிருப்பதைத் தொடர்ந்து பதற்ற நிலை ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுவதால் முன்னேற்பாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சட்டம், ஒழுங்கை உறுதிசெய்ய விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்று பொலிஸ்

(24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான விசாரணை மார்ச் மாதம் ஐ.நா. சபையில்!

கொழும்பு,பெப்.13

இலங்கை அரச படையினர் வன்னியில் போர்க்குற்றங்கள் மேற்கொண்டதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஐக்கிய நாடுகள் சபையில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, இந்த விசாரணையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத் தடுக்கும் நோக்கிலேயே மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழு, ஜெனிவா சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்ட

(24ஆம் பக்கம் பார்க்க)

## யானைச் சின்னத்தில் போட்டியிட ஐ.தே.க. முடிவு செய்தமை குறித்து ஜே.வி.பி. விசனம்

### மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறான தீர்மானம் என ஆட்சேபம்

கொழும்பு,பெப். 13

ஐக்கிய தேசியக்கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதன் மூலம் பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்பை அக்கட்சி முறியடித்துள்ளது என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

இக்கருத்தை ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் அனைத்து சக்திகளும் ஒரே முன்னணியில் இணைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமது கட்சி போட்டியிடவுள்ள முறைமை குறித்து சில தினங்களில் அறிவிக்கப்படும் எனவும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா, நோர்வே நிதி உதவியதென்ற குற்றச்சாட்டைக் கைவிட இலங்கை முடிவு

### வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம தகவல்

கொழும்பு, பெப்.13

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா போட்டியிட்ட வேளை, அமெரிக்கா, நோர்வே ஆகியவை அவருக்கு நிதியுதவி வழங்கின என்ற விடயத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு நிதி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டினை மறுத்து இரு நாடுகளின் தூதரகங்களும் அறிக்கை விடுத்துள்ளன.

"இதன் காரணமாகத் தொடர்ந்தும் இந்த விடயத்தை முன்னெடுக்க நாம் விரும்பவில்லை. இதனை இத்தோடு கைவிட

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரெலிக்கொம் நிறுவனத்தில் நீண்ட காலமாக வாடிக்கையாளர்களாக இருந்தவர்களுக்கும் அதிகவருமானத்தை ஈட்டிக்கொடுத்தவர்களுக்கும் 'பிரஸ்ரீஜ்' அட்டைகளை வழங்கும் நிகழ்வு நேற்று ரெலிக்கொம் நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ரெலிக்கொம் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவானந்தன் உரையாற்றுவதையும், வடக்கு-கிழக்கு மகாண வாடிக்கையாளர் சேவை பிரதிப் பொது முகாமையாளர் எம். பத்மசுதன், வாடிக்கையாளர் சேவை பொதுமுகாமையாளர் யூ.ஜெயக்கொடி, ரெலிக்கொம் நிறுவன பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அஜந்தசெனவிரத்ன, நுகர்வோர் விற்பனைப் பொது முகாமையாளர் பீ.றொபேட்சன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும், வாடிக்கையாளர் ஒருவருக்கு 'பிரஸ்ரீஜ்' அட்டையை பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி அஜந்த செனவிரத்ன வழங்குவதை இரண்டாவது படத்திலும், வாடிக்கையாளர்கள் அமர்ந்திருப்பதை இறுதிப்படத்திலும் காணலாம். *(படங்கள்: நந்தன்)*

# பளைப் பிரதேச சபை அலுவலகம் மீண்டும் சொந்தக் கட்டடத்தில்

## நேற்று முதல் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.13

பளைப் பிரதேச சபை மீண்டும் பளையில் உள்ள சொந்தக் கட்டடத்தில் நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

புனரமைக்கப்பட்ட பிரதேச சபை கட்டடத்தில் முதல் நாள் நிகழ்வுகளை கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பளைப்பிரதேச படை அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பளைப்பகுதியில் உள்ள அரச அலுவலகங்கள் ஒவ்வொன்றாக இயங்க ஆரம்பித்துள்ளன.

பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கத்தின் விற்பனைப் பிரிவு போன்றவை கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-207)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்.பெப்.13

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் 'கணக்காய்வும் கூட்டுறவு அபிவிருத்தியும்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் இளைப்பாறிய அதிபர் இ.சுப்பிரமணியம் எழுதியுள்ள இந்நூலின் வெளியீட்டு விழா யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்

இந்த விழாவில் பிரதமவிருந்தினராக மக்கள் வங்கியின் உதவி பிராந்திய முகாமையாளர் சு.ஹென்றி கலந்து கொள்வார்.

ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் நிகழ்த்துவார். (ஒ-6)

## சமூக சேவையாளருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.13

சமூக சேவையாளரும், வர்த்தகருமான மாணிக்கம் சுப்பிரமணியத்தின் 70ஆவது அகவை நிறைவை முன்னிட்டு அவருக்கான பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா பாராட்டு விழா நூலை வெளியிட்டு வைப்பார்.

இந் நிகழ்வில் சமூக சேவையாளருக்கு பட்டம் வழங்கி கௌரவிப்படவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இவ் விழாவில் மற்றும் பலர் உரையாற்றவுள்ளனர்.

(ஒ-6)

## செஞ்சிலுவைச் சங்க கணனிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்.பெப்.13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய் பிரிவில் புதிய கணனிப் பயிற்சிநெறி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் தவ றாது சமுகமளிக்குமாறு சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-6)

# தென்மராட்சி பிரதேச ஆலயங்களில் விக்கிரகங்கள், பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் திருடர்கள் கைவரிசைகளைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

கடந்த சில தினங்களில் ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி வடக்கில் உள்ள குமரக்கோட்டம் முருகன் ஆலயத்தில் வெண்கலச் சிலைகள் உட்பட ஒன்பதரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும், மீசாலை நெல்லியடி முருகன் கோவிலில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஒலிபரப்புச் சாதனங்களும், வேம்பிராய் கலட்டி பிள்ளையார் ஆலயத்தில் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான விக்கிரகங்களும் பொருள்களும் திருட்டுப்போயுள்ளன.

இச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)

## வேலை ஆள்கள் தேவை

* இயந்திர தச்சு வேலை (பட்டறை)யில் அனுபவம் நிறைந்த வேலையாள் தேவை.
* சிட்டை எழுதுநர் தேவை(பெண்).

தொடர்பு:
லிங்கேஸ் ஹாட்வெயார்,
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.
தொ.பே 0779749345, 0213213955

## S.L.A.S இறுதிக்கருத்தரங்கு

பரீட்சை அடுத்த சனி (20/02), ஞாயிறு (21/02) நடைபெற உள்ளது.

வகுப்பு ஆரம்பம்:- சனி (இன்று) 1.30மணி

* சனி, ஞாயிறு 1.30-5.30 ஏனைய நேரங்கள் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு, யாழ் போதனா வைத்தியசாலை எதிரே.

## உடனடி வேலை வாய்ப்பு

நெல்லியடியில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கனேடிய கிளை நிறுவனத்திற்கு உதவி முகாமையாளர், முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.

வெற்றிடங்கள் 12மட்டுமே உள்ளன.

தொடர்புகளுக்கு: 0771363797, 0214905001

(91047)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதியும் நீண்ட காலங்களாக எமது பாடசாலையின் பா.அ.ச. செயலாளராகவும் இருந்து பாடசாலையின் வளர்ச்சியின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக திகழந்தவருமான

திருவாளர் கந்தையா தேவராஜா

அவர்கள் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு இறை ஆசியுடனும், நற்சுகத்துடனும் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென யா/புனித ஜோண் பொஸ்கோ குடும்பத்தினர் மனமார வாழ்த்துகின்றோம்.

(C/564855)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

## தவறிவிட்டது

VF - 2062 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு நேற்று (12.02. 2010) வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புக்கு:

தொ.பே 0779172696.

(சன்மானம் வழங்கப்படும்)

(94774)

## சாரதி தேவை

விற்பனை அனுபவமுள்ள சாரதி தேவை. தகுதி உடையவர்கள் 859/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு வரவும். இன்றும் நாளையும் பி.ப. 2மணி முதல் 5மணி வரை.

(94769)



# VACANCIES

## Management Trainees

A Company which specialises in printing, IT Education & Marketing is in need of talented, intelligent & market oriented young dynamic males between the age of 22-26 as Management Trinees.

Attractive allowances will be paid during the period of Training.

Please apply before 17.02.2010 to the following address.

**ADVT No: 3979,**
**C/o: *Uthayan - Jaffna.***

## பேடன்பவல் தினப் போட்டி நாளை மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம்.பெப்.13

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் தினப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் சகல சாரணர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் க.செபஸ்ரி [illegible] (ஒ-6)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் மயில்வாகனம் (ஆசாரியார்-காந்தம்)



அம்மன் வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மயில்வாகனம் நேற்று (12.02. 2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
சு.கந்தசாமி (மருமகன்).
தொ.பே 0213008377

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

(94773)

## சின்னையா தம்பியையா

**(இளைப்பாறிய ஆசிரியர், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்)**



துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தம்பியையா நேற்று (12.02.2010) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-இளையபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கோப்பாய் மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி S.V.சின்னப்பா தம்பதிகளின் மருமகனும், றோசலின் இராசமலரின் (இளைப்பாறிய ஆசிரியை, கோ/நாவலர் வித்தியாலயம்) அன்புக் கணவரும், தேவநேசன் (UK), திருமதி மீரா நிமல்ராஜ் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமினி தேவநேசன் (UK), பேட்ரணட் நிமல்ராஜ் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், றேச்சல், ஏரன், றூத், நயோமி (UK), ஜெரமி தேவறூபன் (மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி), கிறிஸ்ரீனா, தேவறூபி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற தெய்வானை மற்றும் மயில்வாகனம், காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் சரஸ்வதி, ஆனந்தராஜா, காலஞ்சென்றவர்களான Rev.A.C.துரைராஜா, A.C.செல்வராஜா, A.C.ஜெயராஜா, A.C.முத்துராஜா, A.C.கனகராஜா மற்றும் திருமதி கிறேஸ் சற்குணசிங்கம், திருமதி மேசி இராஜநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிமல்ராஜ்.(மருமகன்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி)

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
தொ.பே: 0776304951

(94776)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஒற்றையாட்சிக்கு சாமரம் வீசும் தேசிய ஒருமைப்பாட்டுத் தமிழர்கள்

போரின் பேரழிவுகளாலும் தொடர்ந்து முகம் கொடுத்த அடக்குமுறைகளாலும் துவண்டு போய்க் கிடக்கின்றது தமிழினம்.

நொந்து, நொடித்துப் போய் சருகாகிக் கிடக்கும் தமிழினத்தை நோண்டிப் பார்க்கும் - சுரண்டிப் பார்க்கும் - கைங்கரியத்தில் தங்களைத் தமிழர்கள், தமிழ் ஆர்வலர்கள் என்று பெருமிதத் தோடு கூறிக் கொள்பவர்களும் கூட ஈடுபடுகின்றமை மிகுந்த வேதனைக்குரியதாகும்.

இனி என்ன என்பது தெரியாமல் - எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையில் - தமிழினம் இன்று துவண்டு கிடக்கின்றது.

தமது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாதா? அதற்கான மார்க்கம் என்ன? - என்பவை தெரியாமல் தமிழ்மக்கள் மட்டுமல்லாமல், அவர்களின் தலைமைகளே தடுமாறி நிற்கின்றன.

சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தி நிற்கும் ஒற்றையாட்சி என்ற அரசியல் கட்டமைப்புக்குள் தமக்கு நியாயமான தீர்வு - தங்களது நீதியான அபிலாஷைகளை நிறைவு செய்யும் அதிகாரப் பகிர்வு - சாத்தியமானதல்ல என்பதே தமிழர்களின் ஒரே நிலைப்பாடாகும்.

தமிழர் தரப்பின் பங்குபற்றுதலின்றி, முற்று முழுதாகத் தென்னிலங்கை அரசியல் தலைமையின் மேலாதிக்கச் சிந்தனையின் வடிவமாகக் கொண்டு வரப்பட்டு 1972இல் தமிழர்களின் தலைமீதும் சேர்த்து வல்வந்தமாகத் திணிக்கப்பட்டதே தற்போதைய இந்த ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பாகும். அது இத்தேசத்தில் கடந்த 37 ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

தென்னிலங்கைப் பெரும்பான்மை இனத்தவரின் மேலாண்மை அதிகாரத்தை வலுப்படுத்தி, சிறுபான்மையினர் மீது அந்தச் செல்வாக்கை அழுத்தமாக உறுதிப்படுத்தி நிற்கும் இந்த ஒற்றையாட்சி என்ற கட்டில் இருந்து - தளையில் இருந்து - வெளிப்படாமல் தமக்கு நீதி கிடைக்காது என்பதே பெரும்பாலான தமிழர் தலைவர்களின் தெளிவான கருத்தாகவும், உறுதியான நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

ஆனால் தமது அடுத்த ஏழாண்டுகளுக்கான ஆட்சியைத் தேர்தல் பெருவெற்றி மூலம் உறுதிப்படுத்தியிருக்கும் நாட்டின் அரச தலைவரோ, அதற்கு இம்மியளவு இடங்கொடுத்து இணங்குபவராக இல்லை; ஒற்றையாட்சி என்ற மேலாதிக்கச் சிந்தனையை விட்டுக்கொடுப்பவராக இல்லை.

அவருக்குத் தென்னிலங்கையில் உள்ள அரசியல் நெருக்கடிகள் அதற்குக் காரணமாக இருக்கலாம். அதற்கு இப்போது இணங்குவது இன்றைய நிலையில் அவருக்குத் தேர்தல் பாதிப்புகளைத் தருவதாகவும் இருக்கக்கூடும்.

எனினும் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் தமிழர்களின் பிரதிநிதிகளாக வரக்கூடிய தரப்புகளுடன் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய தமது கலந்துரையாடல்களை அவர் ஆரம்பிக்கும்போது அந்தப் பேச்சு மேசையில் பிரதான விடயமாக ஆராயப்படப் போகின்ற அம்சம் இந்த ஒற்றை யாட்சி என்ற தளையில் இருந்து விடுபட்டு எவ்வாறு முன் நகர்வது என்பதாகத்தான் இருக்கும் என்பதை இப்போதே இலகுவாக ஊகித்து விட முடியும்.

தமிழர்களின் முக்கிய கருத்தாக இருக்கும் இத்தகைய ஒற்றையாட்சி முறைமை என்ற பிரச்சினையை சில தமிழ்ப் பிரமுகர்கள் - கொழும்பைத் தளமாகக் கொண்ட வசதியான பிரமுகர்கள் - தமது நோண்டல்களுக்கு வளமாகப் பயன்படுத்தியிருக்கின்றமைதான் வேதனைக்குரியது.

தமிழ்ப் பிரமுகர் தெய்வநாயகம்பிள்ளை ஈஸ்வரனைத் தலைவராகக் கொண்டு கொழும்பில் தேசிய ஒற்றுமைப் பாட்டுச் சம்மேளனம்(Council For National Unity) என்ற அமைப்பு இயங்குவதாகக் கூறப்படுகின்றது. கடந்த மே மாதம் புலிகள் மீதான இலங்கை அரசின் இராணுவ வெற்றியை அடுத்தே இந்த அமைப்பின் செயற்பாடு சூடு பிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முற்றிலும் தமிழ்ப் பிரமுகர்களைக் கொண்ட இந்த அமைப்பின் அங்கத்தவர்கள் தாங்கள் ஐக்கிய இலங்கையை வலுவாக ஆதரித்து நிற்பவர்கள் என்பதைக் காட்டவோ என்னவோ தமது அமைப்புக்கு தேசிய ஒருமைப்பாட்டைப் பெயராக வைத்துக் கொண்டனர். அது இங்கு பிரச்சினையல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெருவெற்றியீட்டிய ஜனாதிபதி ராஜபக்ஷவை பல்லாண்டு, பல்லாண்டு நோயற்ற வாழ்வு வாழ வாழ்த்தி அவர்கள் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் பெரிய விளம்பரங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அதுவும் கூட பிரச்சினையல்ல. ஜனாதிபதியை வாழ்த்துபவர்களாக அந்த விளம்பரம் மூலம் தங்களைத் தங்களது அமைப்பின் பெயருக்கு அப்பால் தலைவர், செயலாளர், உபதலைவர், காப்பாளர், பொருளாளர், உறுப்பினர்கள் என்ற பதவி நிலை களோடு பெயர் குறிப்பிடுவதன் மூலம் அந்த இருப்பத்தி யேழு பிரமுகர்களும் ஏதோ ஒரு கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்த - பகிரங்கப்படுத்த - முன்வந்தமையிலும் நாம் குற்றம் காண விழைவில்லை. அப்படித் தங்களை அடையாளப்படுத்தி மகிழ்வதன் மூலம் கிட்டக்கூடிய பெறுபேறு - பலன் - விளைவு - அவர்களுக்குரியதாகவே இருந்து விட்டுப் போகட்டும்.

ஆனால் அந்த விளம்பரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூற்றாக அவர்கள் மெச்சி வெளிப்படுத்திய வாசகம்தான் பொதுவாகத் தமிழர்களின் மனதை நோகடிக்க வைப்பதாகும்.

'தனித்து ஒற்றையாட்சி கொண்ட இலங்கைக்குள் சகல மக்களுக்கும் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலைமையை ஏற்படுத்தும்' ஜனாதிபதியின் கூற்றை அவர்கள் மெச்சி, மேற்கோள்காட்டி, போற்றியிருக்கின்றார்கள்.

வெற்றி பெற்ற ஜனாதிபதியைப் பாராட்டுங்கள். வாழ்த்துங்கள். உங்கள் பெயரைப் போட்டு வாழ்த்திப் புளகாங் கிதம் அடையுங்கள். அதன் பயனையும் சம்பாதியுங்கள். அது உங்கள் விருப்பம். நாம் அதைத் தவறு என்று கூறவோ விமர்சிக்கவோ முன்வரவில்லை. அது உங்கள் சுதந்திரம்.

ஆனால், அதற்காக 'ஒற்றையாட்சிக்குள்தான் எதுவும்' என்ற கொழும்பு ஆட்சிப் பீடத்தின் மேலாதிக்கப் பிடிக்கு சாமரம் வீசி, சேவகம் பண்ணி, சாதகம் பெற முயலாதீர்கள்.

'ஒற்றையாட்சி' என்ற மேலாதிக்கப் பிடிக்கு, அரசியல் சாராத தமிழ்ப் பிரமுகர்களாக உங்களைக் காட்டிக் கொண்டு காரியம் பண்ணும் நீங்களே அங்கீகாரம் வழங்க எத்தனிப்பது தமிழரைப் பொறுத்தவரை, தம் கண்ணைத் தாமே குத்திக் கொள்வது போன்றதாகும்.

சம்பந்தப்பட்டோருக்குப் புரிந்தால் சரி!

# வடக்கு, கிழக்கில் சுயதொழிலை ஊக்குவிக்க இலங்கை வங்கி புதிய கிளைகளைத் திறக்கிறது.

கொழும்பு,பெப்.13

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுயதொழிலை ஊக்குவிக்க புதிய கிளைகளைத் திறப்பதற்கு இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் எதிர்காலத் திட்டங்கள், இலக்குகள் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு 5 பில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. ஐம்பதினாயிரம் ரூபா முதல் இரண்டரை மில்லியன் ரூபா வரை கடன் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. மீனவர்கள், விவசாயிகள் உள்ளிட்ட தொழிற்துறையினருக்கு அவர்களின் தொழில் முயற்சியை மேம்படுத்த கடன் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, மல்லாவி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் ஏற்கனவே இயங்கிய கிளைகளை மீளத் திறப்பதுடன் புதிய கிளைகளையும் ஆரம்பிக்கவுள்ளோம். தற்போது வடக்கில் 30 கிளைகளும் கிழக்கில் 34 கிளைகளும் உள்ளன.

மேலும் 30 கிளைகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இலங்கை வங்கி கடந்த 60 ஆண்டு காலமாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது.(சி)

# பிரிட்டிஷ் கவுன்ஸிலின் பணியகத்தை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்க ஏற்பாடு

## பொருத்தமான இடத்தை தேடுகின்றனர் வணிகர் கழகத்தினர்

யாழ்ப்பாணம், பெப்.13

பிரிட்டிஷ் கவுன்ஸிலின் கிளையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியகத்தைத் திறக்கத் தேவையான பொருத்தமான இடத்தை குத்தகைக்கு வழங்க பொதுமக்கள் முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

வணிகர் கழகத்தின் பிரதிநிதிகள் நேற்றுப் பிற்பகல் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் தெரிவித்தவை வருமாறு:

பிரிட்டிஷ் கவுன்ஸிலின் பணியகத்தினால் கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மூன்றாவதாக இந்த வகுப்புக்களை யாழ்.நகரில் ஆரம்பிக்க வேண்டுமென வர்த்தக சங்கத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து பிரிட்டிஷ் கவுன்ஸிலால் இந்த வகுப்புக்கள் யாழ்.நகரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வரு கின்றது.

வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய எமது இளைஞர், யுவதிகள் கொழும்பில் தங்கியிருந்து இப்பாடசாலையின் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தே செல்ல வேண்டிய தேவை உள்ளது. இதனால் அவர்கள் பெரும் தொகையான பணத்தை செலவிட வேண்டியுள்ளது. அத்துடன் பல அசௌகரியங்களையும் எதிர்நோக்க நேரிடுகின்றது. இங்கு இந்த வகுப்பு நடைபெறத் தொடங்கியதும் இவ்வாறான சிரமங்களையும் வீண் செலவீனங்களையும் தவிர்க்கமுடியும்.

முற்றுமுழுதாக வெளிநாட்டு ஆசிரியர்களால் இந்தக் கற்கை நெறிகள் கற்பிக்கப்பட இருப்பதுடன் 7வயதிலிருந்து உயர் கல்வி கற்கும் மாணவர்கள் வரை இதனால் பயன்பெற முடியும்.

எனவே யாழ்.நகரில் இக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படுவது யாழ்.மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இதுவரை காலமும் பண வசதி படைத்தவர்கள் மட்டுமே கொழும்பு, கண்டி ஆகிய பகுதிகளில் சென்று தங்கியிருந்து தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

எனவே மேற்படி நன்மைகளைக் கருத்தில் கொண்டு யாழ்.நகரில் சகல வசதிகளும் கூடிய இடத்தை பொதுமக்கள் வழங்கி உதவ முன்வரவேண்டும் என யாழ்.வணிகர் கழகத்தினர் கேட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-1-16)

## விளையாட்டு விழா

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுவிழா இன்று காலை 8 மணிக்கு புங்குடுதீவு சிவலைப்பிட்டி அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வாக கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியன நடைபெறவுள்ளன.(ஒ-6-188)

# கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி இம்மாத இறுதியில் ஆரம்பமாகிறது

## எதிர்வரும் 22ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.13

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர், சாதாரண, கனிஷ்ட பிரிவுகளுக்கான பயிற்சிகளுக்கு கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் வெளிவாரி மாணவர்கள் ஆகியோர் இணைந்துகொள்ளமுடியும் என்று யாழ்.பயிற்சி கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்படி பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விவரங்களையும் யாழ்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இப்பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 22ஆம் திகதி என்றும் கல்லூரி அதிபர் திருமதி செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஒ)

# யாழ்.நகரில் அடுத்த மாத இறுதியில் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும் அடுத்த மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

வடக்கு மற்றும் தென்பகுதி வர்த்தகர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் நடைபெறவிருக்கும் இந்த வர்த்தகக் கண்காட்சியில் வடபகுதி மற்றும் தென்பகுதி மக்களின் கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இக்கண்காட்சி பற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்பு யாழ்ப்பாணம் வணிகர் சங்கத்தினால் நேற்று யாழ்.வணிகர் கழக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விடுக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியில் உள்ளூர் மற்றும் வெளியூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்த முடியும். இதில் முக்கியமாக உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் தமது வர்த்தகப் பொருள்களைக் காட்சிப்படுத்த விரும்பும் உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகர்கள் தமக்கான இட ஒதுக்கீடுகளை யாழ்ப்பாணம் வணிகர் சங்கம், 165 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு மேற்கொள்முடியுமென யாழ்.வணிகர் சங்கத் தலைவர் எஸ்.ஜனக்குமார் அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களுக்கு 021 2222367 மற்றும் 0212228595 ஆகிய தொலைபேசி இலங்கங்களுடன் தொடர்புகொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நிவாரணக் காசோலைகள்

நவாலி,பெப்.13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் கொடுப்பனவுக்கான காசோலைகள் சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உடன் வந்து காசோலைகளைப் பெற்றுச் செல்லுமாறு சமூக சேவைகள் உத்தியோகத்தர் அருந்தவராசா கேட்டுள்ளார்.

காசோலைகளிற்குரியவர்களின் பெயர் விவரம் வருமாறு: பா.கிருஷ்ணன் (கல்வளை), அ.ஜெனிஷ்வரன் (மடத்தடி), செ.சுமதி (மடத்தடி), சு.பிறேமறஜனி (மடத்தடி), அ.சந்திரன் (உயரப்புலம்), கே.குணவதனி (கலாவீதி, பண்டத்தரிப்பு), நா.ஆனந்தராஜா (கல்வளை), ந.பரமேஸ்வரன் (சுதுமலை மேற்கு), வ.சவீகரன் (கல்வளை) (ஒ-100)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் எக்ஸ்-ரே பிரிவு இயங்குகிறது

யாழ்ப்பாணம்,பெப்.13

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை எக்ஸ்-ரே பிரிவு நேற்றுமுன்தினம் தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளது.

எக்ஸ்-ரே இயந்திரத்திற்குரிய உபகரணங்கள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டு பொருத்தப்பட்டதை அடுத்து அந்தப் பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்தப் பிரிவுக்கென ஏற்கனவே கதிரியக்க உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதால் எக்ஸ்-ரே பிரிவு உடனடியாகவே இயங்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, மந்திகை ஆகிய வைத்தியசாலைகளுக்கு மட்டுமன்றி வவுனியா, கிளிநொச்சி, மல்லாவி ஆகிய வைத்தியசாலைகளுக்கும் எக்ஸ்-ரே இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-207)

## நாளை

| | |
|---|---|
| மாசி 02 | 14.02.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | மு.ப. 8.34 |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | மு.இ. 07.15 வரை |
| சுபநேரம்: | 09.33-11.03 வரை |
| ராகுகாலம்: | 05.03-06.33 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவரைத் தாக்கியது இலங்கைக் கடற்படை?

மண்டபம், பெப்.13

இலங்கைக் கடற்படையினர் தாக்கியதில், மண்டபம் மீனவர்கள் பலர் காயமடைந்துள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மண்டபம் வடக்குக் கடல் பகுதியிலிருந்து 500 இற்கும் அதிகமான விசைப்படகுகள் கடந்த புதனன்று மீன்பிடிக்கச் சென்று, நேற்றுமுன்தினம் கரை திரும்பின. நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் வலைகளை நாசம் செய்து, மீனவர்களை தாக்கினர். இதில், மீனவர்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

ஆனால், கியூப் பிரிவுப் பொலிஸாரின் கெடுபிடிக்குப் பயந்து காயமடைந்தவர்களின் பெயர்களை மீனவர்கள் கூற மறுத்தனர் எனத் தமிழக நாளேடு தெரிவித்துள்ளது.

# ஜெ.யின் கூட்டணிக் கருத்துக் குறித்து கட்சித் தலைமைதான் முடிவு செய்யும்

## காங்கிரஸ் செயலர் சாந்தாராம் நாயக் தெரிவிப்பு

சென்னை,பெப்.13

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்கத் தயார் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ள விடயம் தொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் தலைமைதான் முடிவு செய்யும். இதுபற்றி நான் கருத்து கூற விரும்பவில்லை - காங்கிரஸ் செயலாளர் சாந்தாராம் நாயக் கூறினார்.

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை உடைக்க முடியாது என்றும் கூறினார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணி முடிந்துவிட்டது. உறுப்பினர்கள் சரிபார்க்கும் பணி 30 மாவட்டங்களுக்கும் 12, 13, 14 ஆகிய திகதிகளில் சத்தியமூர்த்தி பவனில் நடைபெறவுள்ளது. இதையடுத்து வாக்குச்சாவடி அடிப்படையில் தேர்தல் தொடங்குகிறது.

ராகுல்காந்தி முயற்சியால் தமிழ்நாட்டில் அதிகமான இளைஞர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு வலிமையுள்ள இயக்கமாக காங்கிரஸ் மாறியுள்ளது - என்றார்.

இதன் பின்பு அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதிலும் வருமாறு -

கே - காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்கத் தயார் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளாரே?

ப - இதுபற்றி அகில இந்திய காங்கிரஸ் தலைமைதான் முடிவு செய்யும். இது குறித்து நான் மேலும் எதுவும் சொல்வதற்கு விரும்பவில்லை.

கே - காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியை உடைக்க வேண்டும் என்றும் அந்தக் கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஜெயலலிதா இவ்வாறு கூறியிருக்கிறார் என்று கருதுகின்றீர்களா?

ப - இப்படிப்பட்ட கருத்துக்களை ஜெயலலிதா சொல்வதின் மூலமாக, தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை உடைத்துவிட முடியும் என்பதிலோ பிரித்துவிடமுடியும் என்பதிலோ எனக்கு நம்பிக்கை இல்லை. காங்கிரஸ் - தி.மு.க. உறவு மிகவும் வலிமையாக இருக்கிறது.

கே - பீகார், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் ராகுல்காந்தி சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிறகு அந்த மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி வலிமை பெற்றுள்ளது. இதேபோல ராகுல்காந்தி தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த பின்பு காங்கிரஸ் தனித்து போட்டியிட வாய்ப்புள்ளதா?

ப - காங்கிரஸ் கட்சியின் கொள்கையை ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்கு மட்டும் சொல்ல முடியாது. காங்கிரஸ் கட்சியின் கொள்கை என்பது எந்தெந்த மாநிலங்களில் காங்கிரஸ் தனியாக நிற்க முடியும் என்று நினைக்கின்றோமோ அந்த மாநிலங்களில் எல்லாம் தனியாகத்தான் போட்டியிடுகிறோம். சில மாநிலங்களில் கூட்டணி என்ற நிர்ப்பந்தங்கள் காரணமாக, கூட்டணி சேர்ந்து போட்டியிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதே நேரத்தில் தனது வலிமையின் மூலமாக தனித்து போட்டியிட வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாகும் - என்றார்.

### காதல் ஜோடிகளுக்கு மிரட்டல் விடுத்ததால்

# ராமசேனைத் தலைவரின் முகத்தில் மை பூசித் தாக்குதல்; 6 பேர் கைது!

பெங்களூர்,பெப்.12

காதலர் தினத்தைக் கொண்டாடும் ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைப்போம் என்று எச்சரிக்கை விடுத்த ராமசேனை அமைப்பின் தலைவர் பிரமோத் முதாலிக்கின் முகத்தில் கறுப்பு மை பூசிய 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

பெப்ரவரி 14 ஆம் திகதி கொண்டாடப்படும் காதலர் தினம் மேலை நாட்டுக் கலாசாரமாகும். எனவே, அன்று பூங்கா, ஹோட்டல்களில் காதலர் தினத்தைக் கொண்டாடும் காதல் ஜோடிகளைப் பிடித்து அவர்களுக்கு திருமணம் செய்து வைப்போம் என்று ராமசேனை அமைப்பு புதன்கிழமை எச்சரிக்கை விடுத்தது.

மேலும் காதலர் தினத்துக்கு எதிராக பெங்களூர் உள்ளிட்ட நகரங்களில் விழிப்புணர்வுப் பிரசாரம் நடத்துவோம் என்றும் அந்த அமைப்பைச் சேர்ந்த பொதுச் செயலாளர் கிருஷ்ணா கூறியிருந்தார்.

அதன்படி பெங்களூர் ஜே.சி. வீதியிலுள்ள ரவீந்திர கலாசேத்ரா அருகே உள்ள ரங்க மந்திரா மைதானத்தில் நேற்றுமுன்



தினம் வியாழக்கிழமை மாலை காதலர் தினம் தொடர்பான விவாத மேடைக்கு தனியார் தொலைக்காட்சி நிலையம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த விவாத மேடையில் பிரமோத் முத்தாலிக் கலந்துகொண்டு விவாதம் செய்து கொண்டிருந்தபோது திடீரென சில இளைஞர்கள் எழுந்து பிரமோத் முத்தாலிக்குக்கு எதிராக குரல் எழுப்பியபடி அவரை நோக்கி ஓடினர். அவரைச் சூழ்ந்து கொண்டு கீழே தள்ளி முகத்தில் மை பூசினர்.

திடீரென நடந்த இந்த நிகழ்ச்சியால் கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பொலிஸார் ஓடிச்சென்று முத்தாலிக்கை சூழ்ந்து கொண்டு அவரது முகத்தில் மை பூசிக் கொண்டிருந்த இளைஞர்களை விரட்டிச் சென்றனர். மேலும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் அந்த இளைஞர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

பொலிஸார் இரு தரப்பினரையும் அடித்து விரட்டினர். அதன்பிறகு அங்கு அமைதி ஏற்பட்டது. இதுதொடர்பாக 6 பேரை கைது செய்திருக்கின்றனர் என பொலிஸ் துணைக் கமிஷனர் ரமேஷ் தெரிவித்தார். அவர்கள் யார், இந்த சம்பவத்துக்கு யார் காரணம் என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது என பொலிஸார் தெரிவித்தனர்.

# பொது இடங்களில் ஆபாசம் கூடாது காதல் ஜோடிகளுக்கு கடும் எதிர்ப்பு

## இந்து மக்கள் கட்சி எச்சரிக்கை

கோவை,பெப்.13

காதலர் தினத்தன்று பூங்கா மற்றும் பொது இடங்களில் ஆபாசமாக நடந்து கொள்ளும் காதல் ஜோடிகளைப் பிடித்து பொலிஸில் ஒப்படைப்போம்.

ஆனால், உண்மையான காதலர்களுக்கு திருமணம் செய்து வைக்கவும் தயாராக உள்ளோம் - என்று இந்து மக்கள் கட்சியின் மாநில தலைவர் அர்ஜூன் சம்பத் கூறினார்.

காதலர் தினத்துக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் கோவையில் இந்து மக்கள் கட்சியினர் காதலர் தின அட்டையை எரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை கலெக்டர் அலுவலகம் எதிரே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இந்து மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜூன் சம்பத் தலைமை தாங்கினார்.

தொண்டர்கள் பலர் திரண்டு வந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு காதலர் தின வாழ்த்து அட்டைகளை எரித்தனர்.

இந்து மக்கள் கட்சியின் மாநில தலைவர் அர்ஜூன் சம்பத் கூறுகையில் -

காதலர் தினத்தை கொச்சைப்படுத்தும் வகையில் நடந்து கொள்பவர்களை தண்டிக்க வேண்டும். காதலர் தினத்தன்று பூங்கா மற்றும் பொது இடங்களில் ஆபாசமாக நடந்துகொள்ளும் காதல் ஜோடிகளைப் பிடித்து பொலிஸில் ஒப்படைப்போம். உண்மையான காதலர்களுக்கு திருமணம் செய்து வைக்கவும் தயாராக உள்ளோம் - என்றார்.

# தமிழரின் பிரச்சினையைத் தீர்க்கக்கோரி பிரி. தூதரகத்தில் 'புதிய தமிழகம்' மனு

கோவை,பெப்.12

சுதந்திரத்துக்கு முன்பு பல்வேறு நாடுகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரி பிரிட்டிஷ் தூதரகத்திடம் மனு கொடுக்கப்படும் - என்று புதிய தமிழகம் கட்சியின் நிறுவுநர் கே.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து கோவையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு-

உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் மலேஷியாவிலிருந்து ஏராளமானோர் பங்கேற்றனர்.

மாநாட்டு அரங்கம், கண்காட்சி அரங்கம் எனது பொறுப்பில் இருந்தன. மாநாட்டுப் பந்தலில் படங்கள், சி.டிக்கள் விற்பனை செய்தனர் எனச் சிலரைக் கைது செய்து, என் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கை தேவையற்றது.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது தமிழகத்தில் இருந்து இலங்கை, மலேஷியா, பர்மா, பிஜி தீவு உள்ளிட்ட நாடுகளுக்கு கடுமையான வேலைகளுக்காக தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

தற்போது அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர். இதற்கான பொறுப்பை பிரிட்டிஷ் அரசே ஏற்க வேண்டும்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கோரி உலகத் தமிழர் பாதுகாப்பு மையம் சார்பில் முதல்கட்டமாக சென்னையில் உள்ள பிரிட்டிஷ் துணைத் தூதரக அலுவலகத்தில் ஏப்ரலில் மனு கொடுக்க உள்ளோம்.

இதேபோல, பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழகர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள தூதரக அலுவலகங்களில் மனு கொடுப்பர் - என்றார்.

# இந்தியச் செய்திகள்

## இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்: ரூ.46 லட்சத்தில் மேம்பாட்டுப் பணி

பவானிசாகர், இலங்கைத் தமிழர் இடைத்தங்கல் முகாமில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூபா 46 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பழைய வீடுகளைப் புதுப்பித்தல், பழுதுநீக்கம் செய்தல், புதிய கழிவறைகள் கட்டுதல், பழைய கழிவறைகளைப் பராமரித்தல், கூடுதலாக தெருவிளக்குகள் அமைத்தல், புதிய கழிவுநீர் கால்வாய் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மேம்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆர்.சுடலைக்கண்ணன் கடந்த புதன்கிழமை ஆய்வு செய்தார். பணிகள் அனைத்தையும் விரைவில் முடிக்கவேண்டுமென அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

# சீனாவின் ஆயுதத் தயாரிப்புகளை கூர்ந்து கவனிக்கின்றது இந்தியா

## பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி பேட்டி



புதுடில்லி, பெப். 13

சீனாவின் ஆயுதத் தயாரிப்பு நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வருகிறோம் - என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடந்த ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு இது குறித்து அவர் பேசியவை வருமாறு -

சீனாவின் ஆயுதத் தயாரிப்புகள் குறித்து தொடர்ந்து ஆ[illegible]றோம். அதற்கேற்ப நாமும் தயார் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் சீனாவுடனான பேச்சையும் முன்னேற்றத்தில்தான் இருக்கிறது.

இருநாட்டுக்கும் இடையே நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நாம் தயாரித்துள்ள 3,500 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்க வல்ல அக்னி - 3 ரக ஏவுகணை எந்த நாட்டுக்கு எதிராகவும் தயாரிக்கப்பட்டதல்ல. ஒவ்வொரு நாடும் தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது வழமை. அந்த நோக்கத்தில்தான் நாமும் நமது எல்லைப் பகுதியைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம்.

நமது பாதுகாப்பு கொள்கை எந்த நாட்டையும் தாக்கும் நோக்கம் கொண்டதல்ல. நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கோடுதான் செயற்பட்டு வருகிறோம். அணுகுண்டை சுமந்து செல்லவல்ல அக்னி-3 ஏவுகணை, பாகிஸ்தான் மற்றும் சீனாவின் பீஜிங் நகரம்வரை சென்று தாக்கும் வல்லமை படைத்தது. அணு ஆயுதங்கள் உலகம் முழுவதும் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை நாம் எப்போதும் ஆதரிக்கிறோம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**16.07.1988**

* திட்டமிட்ட காலத்துக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த அரசு நட வடிக்கை எடுக்கக் கூடும் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் ஊகம் தெரிவிப்பு.
* நான்கு நாடாளுமன்றத் தொகுதிகளில் இடம் பெற்ற இடைத் தேர்தல்களில் மூன்று தொகுதி களில் ஐ.தே. கட்சியும் ஒரு தொகுதியில் சுதந்திரக்கட்சியும் வெற்றி.

**17.07.1988**

* யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் நாம் நேசக்கரம் நீட்டும் போது அதனை எமது பலவீனம் எனக் கருதி இந்திய அரசு உதாசீனம் செய்கிறது என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசி யல் பிரிவு தெரிவிப்பு.
* இந்திய அதிகாரிகள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புக்களிடையே இடம் பெறும் பேச்சுவார்த்தை விவரங்கள் மற்றும் அத் தரப்புக்களது கருத்துக்களை உள்ளது உள்ளபடி தமிழ்நாட்டு மக்களுக்கு மத்திய அரசு தெரியப்படுத்த வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு.
* ஐ.நா.ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பு.

**18.07.1988**

* யாழ்ப்பாண மக்களின் நிலை மிகவும் கவலைக்கு இடமானது எனவும், இனிமேலும் அவர்களால் இன்னல்களைத் தாங்க முடியாது எனவும் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள பி.பி.ஸி கொழும்புச் செய்தியாளர் தெரிவிப்பு.
* வன்னிக் காடுகளில் இந்திய அமைதிப் படையின் ஒப்பறேசன் 'செக்மேற்' நடவடிக்கை தொடரும் அதே வேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தரை நிலைமை பற்றி இந்தியா புதிதாக மதிப்பீடு செய்யவுள்ளதாக இந்திய வட்டாரங்கள் தெரிவிப்பு.
* இலங்கைத் தமிழர்களை தமது நாட்டில் வைத்திருந்தால் ஆண்டொன்றுக்கு 212கோடி ரூபா செலவாகும். அதே வேளை அவர்களைத் திருப்பி இலங்கைக்கு அனுப்பினால் 36 கோடி ரூபாவே செலவாகும் என்பதால் தமது அரசு 27ஆயிரம் இலங்கைத் தமிழர்களைத் திரும்பி அனுப்பத் தீர்மானித்துள்ளதாக மேற்கு ஜேர்மன் அரசு தெரிவிப்பு.

**19.07.1988**

* ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கோரிக்கையை ஏற்று யுத்த நிறுத்தம் செய்ய ஈரான் இணங்கியுள்ளதால் கடந்த எட்டு வருடகால வளைகுடா யுத்தம் முடிவுக்கு வரும் சாத்தியம் தோன்றியுள்ளதாக உலக நாடுகள் மகிழ்ச்சி தெரிவிப்பு.
* தென் இலங்கைத் தீவிரவாதிகளின் ஆயுதக் கிடங்குகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அரசு தெரிவிப்பு.
* 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெலிக்கடைச்சிறைச்சாலையில் இடம் பெற்ற தமிழ்க் கைதிகள் படுகொலைச் சம்பவத்தை நினைவுகூரும் விதத்தில் ஜூலை 25 ஆம் திகதியைத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுவேண்டுகோள் விடுப்பு.

**20.07.1988**

* ஈழத் தமிழ் பிரதேசங்களில் இந்திய மத்திய அரசு போர் நிறுத்தம் செய்யாததை ஆட்சேபித்து ஜூலை 29ஆம் திகதி தமிழ் நாடு முழுவதிலும் மாவட்ட ரீதியாகப் பேரணிகளை நடத்தப் போவதாக தி.மு.க. கட்சி தீர்மானம்.
* காலி பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வட பகுதி இளைஞர்களை சந்தித்துப் பேச அவர்களது பெற்றோர்களை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் அழைத்துச் செல்ல நடவடிக்கை.

**21.07.1988**

* சுவிட்சர்லாந்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளில் சுமார் மூவாயிரம் பேரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப இங்கு விஜயம் செய்துள்ள சுவிஸ் அதிகாரிகள் குழு சிபாரசு செய்யுமெனத் தெரிவிப்பு.
* தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு இந்திய அமைதிப் படையால் இன்னமும் முடியவில்லை என அமைச்சர் காமினி திஸநாயகா குற்றச்சாட்டு.
* முல்லைத் தீவு, வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளில் இந்திய அமைதிப் படையினர் மேலதிக முகாம்களை அமைத்து வருவதாகத்தெரிவிப்பு.

**22.07.1988**

* வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கென யூ. எஸ். எயிட் (U.S.Aid) ஸ்தாபனம் புதிதாக ஒரு கோடி அமெரிக்க டொலரை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க முடிவு.
* ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் என்பன ஒத்திவைக்கப் படமாட்டாது என அமைச்சர் காமினி திஸநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.
* இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தென்பகுதி இராணுவத்தடுப்பு முகாம்களில் சிறை வைக்கப்பட்டு விடுவிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் தெரிவிப்பு.

**23.07.1988**

* யாழ். நகரில் திடீரென ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டதால் பொதுமக்கள் பெரும் பதற்றம். இந்திய அமைதிப்படையின் நகரக் கொமாண்டர் அலுவலகத்துக்கு அருகில் அடுத்தடுத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதன் எதிரொலி இது எனத் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் திட்டமிட்ட படி ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் என இந்திய அமைதிப் படையின் பலாலித் தலைமையகம் அறிவிப்பு.

**24.07.1988**

* திருகோணமலை பட்டினப் பகுதியில் நேற்று முழுநாளும் ஊரடங்கு அமுல். இந்தப் பகுதியில் இனக்கலவரம் மூளும் அபாயத்தைத் தடுக்கவே முன்னேற்பாடாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பு.
* இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம் முடிந்தபோதிலும் வெலிக்கடை போன்ற வதை முகாம்களில் தமிழ் இளைஞர்கள் அடைபட்டிருப்பது வேதனைக்குரியது என ஈரோஸ் இயக்கம் கவலை தெரிவிப்பு.

**25.07.1988**

* இலங்கையிலிருந்து தமிழர்கள் இந்தியா செல்லப் புதிய கட்டுப்பாடு விதிப்பு. வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு மேல் விஸா வழங்குவதில்லை எனக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் முடிவு.
* அமைதி உடன்பாடு, மாகாணசபைச் சட்டம் என்பன இலங்கைத் தமிழர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தும் எண்ணம் அரசுக்குக் கிடையாது என ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

**26.07.1988**

* வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனிமேல் புதிதாக நிவாரணம் எதுவும் வழங்குவதில்லை என புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* தென்மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவின் வீட்டிற்குள் புகுந்த இனந் தெரியாத கோஷ்டியினரால் வீட்டிலிருந்த நான்கு பேர் சுட்டுக்கொலை.
* விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு நாம் எவ்வளவோ வாய்ப்புக்கள் வழங்கியும் அவர்கள் அதனை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தத் தவறி விட்டனர் என இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.

**27.07.1988**

* சாத்தியமானால் விடுதலைப் புலிகளுடன் சமரசத்துக்கு வருவது இல்லையேல் அவர்களைப் புறம்தள்ளி இந்திய இலங்கை ஒப்பந்தம் அமுலுக்கு வகை செய்வதென இந்திய அரசு புதிய சிந்தனையுடன் செயற்படுவதாக 'இந்து' நாளிதழ் விமர்சிப்பு.
* வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை இன்னும் சில வாரங்களில் நடத்த முடியுமெனத் தாம் நம்புவதாக ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.
* யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 'எயிட்ஸ்' பரிசோதனைக் கருவியொன்றை வழங்க கொழும்பு மேகநோய் தடுப்பு நிலையம் நடவடிக்கை.

**28.07.1988**

* வன்செயல்கள் இடம்பெறலாம் என எதிர் பார்த்து முன்னோடி நடவடிக்கையாக நாட்டின் சகல பகுதிகளிலும் முப்படைகளும், பொலிஸாரும் உஷார் நிலையில் வைப்பு.
* இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம் பூர்த்தியாகும் தினமான ஜூலை 29ஆம் திகதியன்று தமிழீழம் எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுமக்களுக்கு அழைப்பு.
* இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்துக் ஹர்த்தால் நடத்துமாறு ஜே.வி.பி. கோரியிருப்பதால் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம், தூதரக அதிகாரிகள் வசிக்கும் இல்லங்கள் என்பவற்றுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**31.07.1988**

* இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு பூர்த்தியான ஜூலை 29ஆம் திகதியும் மறுநாளும் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் பெரும் வன்முறைகள் வெடிப்பு. ஜே.வி.பியினர் 20 பேர் கொல்லப்பட்டனர். பொதுச்சொத்துக்கள் பெருமளவில் நாசம்.
* இலங்கையில் இந்திய அமைதிப்படை யின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து தமிழகத்தில் பலஇடங்களில் ஆர்ப்பாட்டப் பேரணிகள், பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
* அடுத்த ஜனவரி அல்லது பெப்ரவரியில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தெரிவாகும் புதிய ஜனாதிபதிக்குப் பொது மக்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டுமென ஜனாதிபதி ஜே.ஆர். வேண்டுகோள்.

# புத்தக சாலை




## ஞானச் சுடர்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' புதிய ஆண்டின் தைமாத இதழ் வெளிவந்துள்ளது.

சைவசமயத்தின் தொன்மைகளையும், அதன் தத்துவக் கருத்துக்களையும் எடுத்தியம்பும் நூலாக "ஞானச்சுடர்" மாதாந்தம் வெளி வந்து கொண்டிருக்கின்றது.


இம்முறையும் வழமையான அம்சங்களைத் தாங்கியவாறு 'ஞானச்சுடர்' வெளிவந்துள்ளது.

## ஒரு சோம்பேறியின் கடல்

நா. அஜந்தகுமாரின் 'ஒரு சோம்பேறியின் கடல்' கவிதைத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.

சமூகத்தின் மீதான பார்வைகளையும் ஈழத்தவர்களின் வலிகளையும் தனது உணர்வுகளில் வரித்துக் கட்டிய படி கவிதைகளை வடித்திருக்கிறார் த. அஜந்தகுமார்.

"அம்பலம்" குழுமத்தின் வெளியீடாக "ஒரு சோம்பேறியின்கடல்" கவிதைத் தொகுப்பு வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.







## சிவதொண்டன்

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தின் வெளியீடான ஆண்டு மலரான "சிவதொண்டன்" நூல் வெளிவந்துள்ளது.

சைவசமயம் சார்ந்த கட்டுரைகளையும் நாயன்மார்களது வரலாற்றுக் குறிப்புகளையும் மற்றும் "சிவதொண்டன்" நிலையத்தின் சமயப் பணிகளையும் உள்ளடக்கியதாக "சிவதொண்டன்" இதழ் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## வெற்றிலை நினைவுகள்

ஜோ. ஜெஸ்ரினின் "வெற்றிலை நினைவுகள்" கவிதைத் தொகுப்பு நூல் வெளி வந்துள்ளது.

"வெற்றிலை நினைவுகள்" கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைத் துண்டங்கள் அவரது சமூக நேசிப்பை, மானிட நேயத்தை, தேசப்பற்றைப் புலப்படுத்துவனவாக அமைகின்றதென அணிந் துரையில் யோ. யோண் சன்ராஜ்குமார் குறிப்பிட்டிருப்பது மிகப் பொருத்தமானதாகவே அமைகின்றது. கைக்கடக்கமான முறையில், அழகிய படங்களுடன் கூடிய உணர்வு சொட்டும் வரிகளைத் தாங்கி இந்நூல் ஆக்கப் பட்டுள்ளது.

கொழும்பு புரவலர் புத்தகப் பூங்காவின் வெளியீடாக இந்நூல் வெளிவந் துள்ளது.






மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழுவின் விழா அண்மையில் கொழும்பில் உள்ள அலரி மாளிகையில் இடம்பெற்றது.

அதில் வலி.மேற்கு பிரதேச சபையின் சங்கானை மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் வைரமுத்து சிவபாலனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



எந்த வேலையையும் பின்பு செய்வோம் என தள்ளிவைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். தற்செயலாக நடக்கும் சில விடயங்களால் உங்களுக்கு சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றைக் குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். சிலர் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவர்.

### இடபம்



தடுமாற்றங்கள், குழப்பங்களைச் சந்திப்பீர்கள். நண்பர்கள் சிலருக்கு தொழில் ரீதியாக நல்ல யோசனைகள் சொல்வீர்கள். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நன்மைதரும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. உறவினர் ஒருவரால் மன உளைச்சல், சங்கடங்களுக்கு ஆளாகலாம்

### மிதுனம்



சில பொருள்களை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைந்து திரியலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது. திட்டமிட்ட வேலை ஒன்றில் திடீரென மாற்றங்கள் செய்யலாம். எந்த வேலையும் விறுவிறுப்பாக முடியாமல் கடுமையாக இழுத்தடிக்கலாம்.

### கடகம்



பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய நண்பர்களைத் தேடிச்சென்று பார்ப்பீர்கள். வெளியூர் பயணங்களின் போது முக்கிய நபர் ஒருவரைச் சந்திக்கலாம். பிள்ளைகள் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்

### சிங்கம்



போட்டிகள், எதிர்ப்புகள் விலகி நினைத்ததைச் சாதிக்கும் நாள். வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். பல நாள்களாக வராமல் இருந்தபணவரவு ஒன்று, இன்று கைக்கு கிடைக்கும். உறவினர்களின் அன்புக் கட்டளைக்கு ஆள்படுவீர்கள்

### கன்னி



சில விடயங்களில் முடிவுகள் எடுக்கமுடியாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது ஏதோ ஒரு வகையில் கோபம் கொள்ளலாம். மற்றவர்களுக்காக நீங்கள் சிலரிடம் உதவி கேட்கலாம். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். தண்டச் செலவு நேரும்.

### துலாம்



வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும் நாள். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

நீண்ட தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். கடினமாக முயற்சித்தும் சில விடயங்களில் பலன் கிடைக்காமல் போகலாம். சிலருக்கு கடன் கொடுக்கலாம்.

### விருச்சிகம்



நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். பெண்களால் மகிழ்ச்சியான, சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் ரீதியாக ஒப்பந்தம் போடலாம்.

### தனுசு



என்னதான் பொறுப்போடு செயல்பட்டாலும் ஏதாவது ஒரு வகையில் பிரச்சினைகள் உருவாகலாம். பண விடயங்கள் தொடர்பாகச் சிலருடன் வாக்குவாதம் செய்வீர்கள்.

நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத சிலர் வரலாம். குடும்பச் செலவுகள் திட்டமிட்டதைவிட அதிகமாவதால் கவலை அடையலாம்.

### மகரம்



தொட்ட காரியங்கள் துரிதமாக நடக்கும் நாள். மற்றவர்கள் செய்ய வேண்டிய சில வேலைகளையும் சேர்த்து நீங்கள் செய்யலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். பரபரப்பாகச் செயல்படும் நாள்

### கும்பம்



ஆரவாரம் இல்லாமல் அமைதியாகச் செயற்பட வேண்டிய நாள். மற்றவர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைத்து விட்டு அது எப்படியாகுமோ என, கலக்கம் அடையலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவிகளை நாடி வரலாம்.

### மீனம்



உறவினர்கள் சிலரை தொடர்புகொண்டு முக்கிய விடயங்களைப் பேசுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை நண்பர்கள் மூலம் முடிப்பீர்கள். வாய்ப்புகள் தேடி வரும் நாள். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். மனைவி உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம்.

---

## கண்ணீர் அஞ்சலி



எமது கிராம அலுவலர் J/80 பெரியகடை, யாழ்ப்பாணம் S.R.சிவானந்தன் அவர்களின் சிரேஷ்ட புத்திரன்

**நதீஸ்**

அவர்கள் அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**J/80 பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்க நிர்வாகமும், அங்கத்தவர்களும்.** (92439)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் தில்லைநாதன்



வல்வெட்டி, மல்லியோடையைப் பிறப்பிடமாகவும் இணுவில் ஆஸ்பத்திரியடியை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் தில்லைநாதன் 11.02.2010 வியாழக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் மதுவந்தியின் (யா/வேம்படி மகளிர் கல்லூரி, க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவி) பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் ஏழாலை வடக்கு கதிராசிப்பிள்ளையின் பாசமிகு மருமகனும் பேரின்பமலர் (மலர்- சுதுமலை), சிவமலர் (கோண்டாவில்), இரவிச்சந்திரன் (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தியாகேசன் (யா/செங்குந்தா இந்துக் கல்லூரி), சிவதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் குமணன், கதீபன், டினோஜா, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2010) சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகத் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.
தொ.பே: 0214921286 (92443)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கந்தையா பொன்னுப்பிள்ளை

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுப்பிள்ளை 09.02.2010 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையாவின் அன்பு மனைவியும் பூலோகசிங்கம் (சுவிஸ்), சிவபாலசிங்கம் (கனடா), சிவர்ராசலிங்கம் (கனடா), தவராசலிங்கம் (கனடா), பாலசுப்பிர மணியம் (கனடா), காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2010) சனிக்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன்-சு.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்).

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. (சி/564848)

## வீடு, வளவு விற்பனைக்கு

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையில், சண்முகநாத மகாவித்தியாலயச் சுற்றாடலில் இரு வீடு, வளவுகளும், பாடசாலைக்கு அருகேயுள்ள வெறுங் காணியும் விற்பனைக்கு உண்டு.

**ஆ.சபாரத்தினம்**
தொ.பே: 077 617 6623
021 222 5493
(92437)

## தவறிவிட்டது

காரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த சோமசுந்தரம் தூர்க்கா என்பவரது தே.அ.அ.(855802163V) 02.02.2010 அன்று ஓமந்தைக்கும் வவுனியாவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது தொடர்புகொள்க

**Tulsi கேபிள் TV**
6/1, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773144991 (92445)

## மண்டைதீவில் நெற்பயிர்ச் செய்கை: கலந்துரையாடல் நாளை

நல்லூர்,பெப்.13

அரசாங்கத்தின் தேசிய திட்டத்தின் கீழ் மண்டைதீவில் கடந்த இரு தசாப்தங்களாக நெற்செய்கைக்கு உட்படாதிருந்த நெற்காணிகளை இந்த ஆண்டில் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை மண்டைதீவில் நடைபெறவுள்ளது.

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய முன்றலில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் காலை 10.30 மணிக்கு மேற்படி கலந்துரையாடல் இடம்பெறும்.

'2010 ஆம் ஆண்டில் மண்டைதீவில் நெற்பயிர்ச்செய்கை' பற்றியே இக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருப்பதால் நெற்காணிச் சொந்தக்காரர்கள், நெற்செய்கையை மேற்கொள்ள விரும்புபவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செய

## மரண அறிவித்தல்

### இராமநாதன் நேசமலர்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் நேசமலர் 10.02.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராமநானின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்தம்பர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இராசமலர், இராசரத்தினம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் அன்னமலர், கனகவேல் (ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர்), தங்கவேல் (ஓய்வுபெற்ற வைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திராணி, அருணகிரிநாதன், தில்லைநாதன், யோகநாதன், பராசக்தி, அருந்ததி ஆகியோரின் பாசமிகு தாயும் வடிவேல், பத்மலோசனி, சசிகலா, வசந்தி, சரவணபவானந்தன், இரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் கலைவாணி (ஆசிரியை, யா/பன்னாலை சேர்.கனகசபை), திருக்குமரன், சிந்துஜா, ரணவலன், ராகலவன், சஞ்சயன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்மளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வேல்வில்லா",
அருணாசலம் பாடசாலை வீதி,
அளவெட்டி தெற்கு. (92448)

தகவல்:
குடும்பத்தினர்.


**வெள்ளிவிழாவை முன்னிட்டு**

அனைத்து கணினி பாடநெறிகளுக்கும் CSC வழங்கும்

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

25 YEARS

மேலதிக விபரங்கள் எமது பயிற்சிமையங்களில்

**ASIAN COMPUTER EDUCATION**

...வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களிடையே பிரதேசவாதத்தை ஏற்படுத்தாதீர்; மலையக அரசியல்வாதியின் கூற்று வேதனையானது!

## ஐ.தொ.கா. உபதலைவர் வேணியன் தெரிவிப்பு

கண்டி, பெப்.13

இலங்கையில் வாழ்ந்துவரும் தமிழ்ச்சமூகங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள இக்காலகட்டத்தில், மலையக அரசியல்வாதியொருவர் பிரதேசவாதத்தைத் துண்டும் விதத்தில் கருத்துக் கூறியுள்ளார். அவரது கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததுடன், வேதனை தருவதாகவும் அமைந்துள்ளது என ஜனநாயக தொழிலாளர் முன்னணியின் உபதலைவரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான வேலணை வேணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகள் தமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பார்க்க வேண்டுமேயன்றி மலையகத் தமிழ்மக்கள் விடயத்தில் தலையீடு செய்கின்றமையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என மலையக அரசியல் கட்சியொன்றின் ஆலோசகர் ஒருவர் கருத்து தெரிவித்திருக்கின்றமை குறித்து வருத்தமடைந்தேன்.

இன்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி முதல் ஏனைய அரசியல் தமிழ்த் தலைவர்கள்வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழக்கூடிய தமிழ் மக்கள் தமது தொப்புள்கொடி உறவுகளே என்று பகிரங்கமாகக் கூறி வருகிறார்கள்.

மலையகத் தலைவர்கள் உணரும்வகையில் அங்கு வாழக்கூடிய எமது சகோதர, சகோதரிகள் எமக்காகக் குரல் கொடுத்து வருகின்றமையை வரவேற்கின்றோம். மலையகத்தில் மட்டுமல்ல. இலங்கையில் எங்கு தமிழ் மக்கள் வாழ்ந்தாலும் அம்மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய மனிதாபிமானப் பண்புகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

மொழியால் - இனத்தால் - இணைந்து வாழவேண்டிய நாம் எம்மிடையே பிரிவினை வாதத்தை வளர்த்துக்கொள்ளக்கூடாது. சமூகங்கள் மத்தியில் கசப்பு உணர்வுகள் வளர நாம் இனியும் இடம்கொடுப்பதனைத் தவிர்த்துக் கொள்வது இன ஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

எனவே, எம்மத்தியிலும் இனரீதியாக எம்மைப் பிரித்துக் காட்டிக்கொள்ளாது நாம் வாழும் பிரதேசங்களில் எமது உரிமைகளைப் பேணிக் காப்போம்- என்று அதில் கூறியுள்ளார். (ஏ)

# ரூ.4லட்சத்தைக் கொள்ளையிட முனைந்த நபர் மடக்கிப்பிடிப்பு

கண்டி, பெப்.13

அவிசாவளை மக்கள் வங்கிக்கிளைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டர் சைக்கிளில் தயார் நிலையில் இருந்த நபர் ஒருவர் வங்கியில் பணத்தை வைப்பில் இடுவதற்காக வந்த வாடிக்கையாளரின் பையைப் பறித்துக் கொண்டு தப்பியோட முனைந்தபோது மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளார்.

பணத்தைப் பறிகொடுத்தவர் இட்ட கூக்குரலால் அயலில் நின்றவர்கள் மோட்டார் சைக்கிளை நகரவிடாமல் மடக்கிப்பிடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரை அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபரால் பறிக்கப்பட்ட பையில் நான்கு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணம் இருந்தது என்றும் மற்றொருவரைத் தேடிப்பிடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.(ஏ)




# கழிவுத்தேயிலை வியாபாரத்தால் உற்பத்தியாளர்களுக்கு அசௌகரியம்

## ஊவா பெருந்தோட்டச் சமூகம் விசனம்

கண்டி, பெப்.13

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள தேனீர்ப் பிரியர்களால் மிகவும் சிலாகிக்கப்படும் ஊவா பெருந்தோட்டங்களில் விளையும் தேயிலை, கழிவுத் தேயிலையின் ஊடுருவலால் தனது கீர்த்தியை இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது என ஊவா பெருந்தோட்ட தேயிலை உற்பத்தியாளர்கள் விசனிக்கின்றனர்.

இது குறித்து மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

நாடெங்கும் உற்பத்தியாகும் தேயிலையின் விலை அதிகரித்துள்ளதால் ஒரு சில மோசடி வியாபாரிகள் தேயிலைத் தொழிற்சாலைகளில் ஒதுக்கப்படும் கழிவுத் தேயிலையையும், ஹோட்டல்களில் எறியப்படும் பாவித்த தேயிலையையும் சேகரித்து அவற்றுக்கு இரசாயன சாயமேற்றி சந்தையில், விசேடமாக ஹோட்டல்களுக்கு விற்று வருகின்றனர்.

இதன் இன்னொரு பரிணாமமாக தேயிலைத் தோட்டங்களில் களவாடப்படும் கொழுந்துகளைக் காயவைத்து உரல்களில் இடித்து, வறுத்து ஹோட்டல்களுக்கு விநியோகம் செய்யும் இன்னுமொரு வர்த்தகமும் சட்டவிரோதமாக நடந்து வருகின்றது.

இன்றைய நிலையில் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் தரமான தேயிலை கிலோவொன்று உள்நாட்டில் 500 ரூபா தொடக்கம் 600 ரூபா வரை விலை போகிறது. கழிவுத் தேயிலை இதைவிட மிகமிகக் குறைந்த விலையில் கிடைக் கிறது. எனினும், அது உடல் நலனுக்குத் தீங்கானது.

எனவே, தரமான தேயிலையை நம்பிக்கை வாய்ந்த வியாபாரிகளிடம் மட்டும் கொள்வனவு செய்யுமாறு ஊவா மாகாணத் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், பொதுமக்களிடம் விசேடமாக ஹோட்டல் உரிமையாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஏ)

# ஆளுங்கட்சி சார்பில் களமிறங்கும் இ.தொ.காவுக்கு ஒன்பது இடங்கள்

## அதன் பிரமுகர் முத்துசிவலிங்கம் அறிவிப்பு

கொழும்பு, பெப்.13

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சி சார்பில் போட்டியிடும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு ஒன்பது இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஒன்பது வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர் என அக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடவுள்ள தமது கட்சிக்கு ஒன்பது இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், முன்னாள் பிரதியமைச்சர்களான முத்து சிவலிங்கம், எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தமது கட்சிக்கு நுவரெலியா மாவட்டத்தில் மூன்று இடங்களும், பதுளையில் இரண்டு இடங்களும், மாத்தளை, இரத்தினபுரி, கண்டி, மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தலா ஓர் இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஏ)

# 60 மாணவர்களுக்கு தரம் 1 அனுமதி மறுப்பு எகலியகொடவில் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,பெப்.13

எகலியகொட பிரதாமிக மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் முதலாம் தரத்துக்கான அனுமதி மறுக்கப்பட்ட 60 மாணவர்களின் பெற்றோர் வித்தியாலயத்தின் முன்பாக கண்டனப் போராட்டமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் பட்டாசுகளைக் கொளுத்தியதால் சிறுபிள்ளைகள் அச்சமுற்றனர் எனவும், உடனடியாக பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தகுதிபெற்ற அறுபது மாணவர்களின் அனுமதி மறுக்கப்பட்டமை நியாயபூர்வ மற்ற செயலெனக் கண்டனக் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இதுபற்றிப் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டபோது, இந்தக் கண்டனப் போராட்டம் நியாயமற்றது எனவும், தகுதி அடிப்படையில் சகல விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு எட்டு வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.அதற்கு மேல் ஒரு அனுமதியையும் வழங்க வசதியில்லை என்றும் கூறப்பட்டது.

பாடசாலைக்குப் போதிய கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தர மாகாண சபை நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இருக்கும் இட வசதிக்கேற்ப உச்ச கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தின்போது குறிப்பிட்ட 60 பிள்ளைகளும் பாடசாலைகளுக்குள் வலுக்கட்டாயமாக நிறுத்தப்பட்டு இருந் தனர். சுமார் 10.30 அளவில் பெற்றோர்கள் அவர்களை அழைத்துச் சென்றனர் என்று பாடசாலை நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது். (ஏ)

# தமிழர்கள் இருக்கும் இடமெல்லாம் ஆட்சிமாற்றம் வலியுறுத்தப்பட்டது!

## மலையகம் விதிவிலக்கல்ல; இ.தொ.ஐ.மு. அமைப்பாளர் தெரிவிப்பு

பதுளை,பெப். 13

ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்கள் ஆட்சிமாற்றம் ஒன்றை எதிர்பார்த்தே வாக்களித்தனர். அதனால் அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தலைகளின் கோரிக்கையை மக்கள் ஏற்கவில்லை. தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் ஆட்சிமாற்றம் வலியுறுத்தப்பட்டுள்ளமையை தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் ஊவா மாகாண அமைப்பாளர் இரா.சலோபராஜா தெரிவித்தார்.

பதுளையில் நடைபெற்ற கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொர்ந்து கூறியவை வருமாறு:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எமது மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிப்பதை நிராகரித்துவிட்டு அரசியல் மாற்றமொன்றை ஏற்படுத்தும் வகையில் வாக்களித்துள்ளனர். தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் அரசியல் மாற்றத்தை எதிர்நோக்கி வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

அரசுடன் இணைந்திருக்கும் தோட்டத் தொழிற்சங்கங்களின் தலைமைகள் எமது மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்கள் அனைத்தையுமே எமது மக்கள் நிராகரித்துள்ளமையை தேர்தல் முடிவுகள் வெளிப்படையாக்கி விட்டுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்துள்ள தோட்டத் தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து எமது அமைப்பும் பெருந்தோட்ட மக்களிடம் விடுத்த கோரிக்கையை எமது மக்கள் பூரணமாக ஏற்றுள்ளனர்.

எமது பெருந்தோட்டத்துறை மக்கள் "யானை" சின்னத்திற்கே வாக்களிக்கப் பழக்கப்பட்டவர்கள் என்பதை மாற்றி 'அன் னம்' சின்னத்திற்கு வாக்களித்திருக்கின்றனர் என்றால் அவர்கள் எவ்வளவு புத்திசாதூரி யமாக நடந்துள்ளனரென்பது தெளிவாகின்றது.

அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலிலும், எமது மக்கள் அரசியல் மாற்றமொன்றினை நோக்கியே தமது வாக்குகளை வழங்குவார்களென்பதில் சந்தேகமில்லை. மத்திய மாகாணசபையில் எமது தலைவரும், பொதுச்செயலாளரும் உறுப்பினர் களாக இருந்து வருகின்றனர். இவ்வரசியல் ரீதியிலான அங்கீகாரத்துடன் நாடாளுமன்றம் மற்றும் ஊவா மாகாணசபை என எமது அமைப்பின் அரசியல் அங்கீகாரம் தொடர்ந்து கொண்டேபோகும். எமது இவ் எழுச்சியை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது- என்றார். (ஏ)

# ஐ.ம.சு.வேட்பாளராக கலாநிதி சுனில்நவரத்ன

கேகாலை, பெப்.13

தேசிய இளைஞர் சேவைகள் சபை, இலங்கை சமுர்த்தி அதிகாரசபை ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளர் நாயகமும், மலையக அபிவிருத்தி மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளருமான கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன எதிர்வரும் பொதுத்தேர்தலில் கேகாலை மாவட்டத்துக்கான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு வேட்பாளராக நியமிக்கப்படுவார் எனத் தெரிய வருகின்றது.

கலாநிதி நவரத்ன நிர்வாகத்துறையில் சிறந்த நிபுணத்துவம் பெற்றிருப்பதுடன் அரச மற்றும் தனியார் துறைகளில் மிகுந்த அனுபவம் கொண்டவராவார்.

இவர் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் பிரபலமான [illegible] என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஏ)

# குரங்கை விரட்டுவதற்குச்சென்ற சிறுவனுக்குத் துப்பாக்கிச்சூடு

கொழும்பு ,பெப்.13

மாத்தளை உஸ்கிரிய கந்தையில் உள்ள சேனையில் குரங்குகளை விரட்டச்சென்ற தந்தைக்கு உதவியாகச் சென்ற பத்து வயதுச் சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மாத்தளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை உஸ்கிரியவில் வசித்துவரும் 10 வயதுச் சிறுவனே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இத்துப்பாக்கிச் சூடு எவ்வாறு ஏற்பட்டதென இதுவரை தெரியவில்லை என்றும், குரங்குகளை விரட்டச் சென்ற தந்தையிடம் துப்பாக்கி இருந்ததா அல்லது கட்டுத் துவக்கு வெடித்ததா என்பதைப் பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர். (ஏ)

# கேகாலை மாவட்டத்தில் பாரிய தொழிற்பேட்டை


கேகாலை மாவட்டத்திலுள்ள கலிகமுவ தொகுதியில் 20 தொழிற்சாலைகளைக் கொண்ட பாரிய தொழில்பேட்டை அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன எனத் தெரியவருகின்றது.

பிரதி நிதியமைச்சரும், கலிகமுவ தேர்தல் தொகுதியின் ஸ்ரீல.சு.கட்சி அமைப்பாளருமான ரஞ்ஜித் சியம்பலாபிட்டியவின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுவரும் குறித்த தொழிற்பேட்டையில் இயங்கவுள்ள இருபது தொழிற்சாலைகளிலும் 24 ஆயிரம் பேர் வரை தொழில் வாய்ப்புப் பெறவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டதும் கலிகமுவ, கேகாலை, டெடிகம, றம்புக்கன ஆகிய தொகுதிகள் அபிவிருத்தியாவதுடன், இத்தொகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத்தரமும் மேலோங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஏ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இராஜேஸ்வரன் இராஜ்குமார் இராஜ்குமார் நிதுஷா

30.08.1981: மண்ணில் : 11.01.2003

விண்ணில்: 13.02.2009

அன்பெனும் மலர்தூவி
ஆசைமொழி பேசி
என் இதயத்தில் குடிகொண்டவர்களே!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை என் இதயம்– தினந்தினம்
அழுகிறேன் உமை நினைத்து
அன்பே ஆருயிரே அப்பா–உமைவிட்டு
ஒரு கணமேனும் பிரியாதென்னை
தவிக்கவிட்டுச் சென்றதேனோ? கொடிய போர்
உம்மிருவர் உயிரையும் பறித்ததுவே
உம்முகம் தெரியாத உங்கள்
மகள் [தங்கை] அப்பா,அக்கா என
அழைக்கின்றாள் ஒருகணம் வந்து
பதில் கூறுவீரோ– என் செல்லமே நிதுகுட்டி
உம் பாதம் மண்ணில் படாமல் தூக்கி வளர்த்தாவே
உன் அம்மம்மா
கடைசி நேரம் உம்மிருவர் முகம்
காணவில்லை என்று வருந்துகிறார்

ஒருமுறை உம் திருமுகம் காட்டிச் செல்வீரோ?
மம்மி என் செல்லம் என்று
கட்டி அணைத்து முத்தமிடுவாயே
அந்தவொரு காலம் மீண்டும் வராதா?
வரும் செல்வங்களே...
எம் உடலை விட்டு வெகுவிரைவில்
உயிர் பிரிய வேண்டும் என்று
தினந்தினம் வேண்டுகிறேன்
அவ்வேளை தனில் மீண்டும்
ஒன்று சேருவோம்

**என்றும் உங்கள் நினைவுடன்:**
மனைவி, மகள், மம்மி, தங்கை,
ஆர்.கலைச்செல்வி (செல்வி),
ஆர். டேபோரா நிதுஷனா (நிது),
அம்மம்மா, மாமி
பி.தேவிமலர் (தேவி).

யாழ்ப்பாணம்.
தொ.பே: 0771293677 (92395)

# சைவ சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.13

உரும்பிராய் கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினரால் சிவாரத்திரி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

பிரிவு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**எழுத்தறிவுப் போட்டி**

கீழ்ப்பிரிவு - செல்வி மு.தர்ஷகா (வயாவிளான் ம.ம.வி), செல்வி எஸ்.ஜான்சி (வயாவிளான் ம.ம.வி), செல்வன் இ.பிரியந்தன் (வயாவிளான் ம.ம.வி).

மத்தியபிரிவு - செல்வி சி.காயத்திரி (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி), செல்வி துர்சிகா (வயாவிளான் ம.ம.வி), செல்வி சி.தர்சனா (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி.).

**பேச்சுப்போட்டி**

மத்தியபிரிவு - செல்வி ஜெ.பவித்திரா,செல்வி த.ஆரணி, செல்வி ச.நிரோஜா.

மேற்பிரிவு - செல்வி ஸ்ரீ.லக்சனா, செல்வன் க.ராஜ்குமார், செல்வன் யோ.மதுசன்.

அதிமேற்பிரிவு - செல்வன் தே.ஜனார்த்தனன்.

**பண்ணிசைப் போட்டி**

மத்தியபிரிவு - செல்வன் ப.சிவசங்கரன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), செல்வன் மு.சுலக்ஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

கீழ்ப்பிரிவு - செல்வி ச.நிறோஷா (வயாவிளான் ம.ம.வி.), செல்வி செ.ஜசிந்தா (வயாவிளான் ம.ம.வி.), செல்வன் பா.சதுர்சன் (யாழ்.இந்துக்கல்லூரி). (1-16-253)

# புதிய வீடு விற்பனைக்கு

*யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆலயச் சூழலில் (நாவலர் வீதியில்) 1½பரப்புக் காணியில் நன்னீர்க் கிணறு, சுற்றுமதில், 4படுக்கை அறைகள், இரண்டு Bath Room, முற்றிலும் Tiles பதிக்கப்பட்டு அமைந்த ஆடம்பர, நவீன வீடு விற்பனைக்கு உண்டு.*

தொடர்பு: 0778543106, 0772470590
இல. 09, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (92403)

# 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 18 ★ 08 ★ 1934



மறைவு 14 ★ 01 ★ 2010

## அமரர் சோமசுந்தரம் சுப்பிரமணியம்

கடந்த 14.01.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதியபோசனமும் இன்று (13.02.2010) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தவமான வாழ்வுதனில் திளைத்திருந்த ஐயாவே
'சிவமே' உம் சிந்தையிலே சிறந்திருக்கக் கண்டிருந்தோம் - உம்
கீதம் அடங்கி இன்று மாதமொன்று ஆனதென்ற
வேதனையில் துடிக்கின்றோம்! வருவீரோ ஐயா..

மந்துவில் மேற்கு, கொடிகாமம். (91043)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# முதன் முறையாக யாழ் மாநகரினிலே

BCHS

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES & Computer Express

ஆகிய இரு நிறுவனங்கள் எம் மக்கள் அனைவரினதும் நன்மை கருதி
அவர்களின் ஆங்கில , கணனி அறிவினை மேம்படுத்துவதற்காக

# 100 % புலமைப்பரிசில்களுக்கான மாபெரும் போட்டிப்பரீட்சை

இப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும்
**10** மாணவர்களுக்கு
**P4** கணனிகள்
பரிசாக வழங்கப்படும்.



**இப்போட்டிப்பரீட்சைக்கு தோற்றத்தகுதியுடையோர்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், அரச, தனியார்துறையில் வேலை செய்பவர்கள், எதிர்காலத்தில் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் படிப்பினைத் தொடரவுள்ளோர், ஏனையோர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 24.02.2010**

போட்டிப்பரீட்சையில் ஆங்கிலம், கணனி அறிவினை பரிசோதிக்கும் இரண்டு வினாத்தாள்கள் வழங்கப் படும். இவை ஒவ்வொன்றும் ஒரு மணித்தியால நேர எல்லையைக் கொண்டது ஆங்கில வினாத்தாளில் மாணவர்கள் பெறும் புள்ளிகளிற் கேற்ற வகையில் புலமைப்பரிசினை பெற்றுக்கொண்டு அவர்கள் lower level, Intermediate level, Upper level எனப்பிரிக்கப்பட்டு, அடிப்படையிலிருந்து ஆங்கிலப் பயிற்சியினை British Council நிறுவனத்தின் ஆங்கில கற்கை நெறிகளிற்கு இணையாக நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய Audio, visual முறையில் துறைசார் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாமினால் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வில் வளமான எதிர் காலத்தினை ஆளுமை விருத்தியுடன் அடைவதற்கு 100% உறுதிப்பாடு வழங்கப்படும்.

போட்டிப்பரீட்சையில் கணனிப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பெறும் புள்ளிகளிக்கேற்ற வகையில் அனைத்து Diploma, Advanced Diploma கற்கை நெறிகளில் 100% புலமைப் பரிசினை பெற்றுக் கொள்வதோடு நிகழ்கால தொழிற்துறையில் கணனித் தேவைப் பாட்டிற்கமைவாக அவர்கள் அதிநவீன கணனி ஆய்வுகூடத்தில் நடைமுறையிலுள்ள வினைத்திறன்மிக்க மென் பொருளினூடாக நீண்டகால அனுபவம் மிக்க புலமைசார் விரிவுரையாளர்களால் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பரீட்சை நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| யாழ் மத்திய கல்லூரி | 27.2.2010 | 10.00 - 12.00 |
| இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |
| நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 28.2.2010 | 10.00 - 12.00 |
| சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |

பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை எமது British College Of Higher Studies, Computer Express நிறுவனங்களிலும்,பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு எவ்வித முன்கட்டணமும் அறவிடப்படமாட்டாது

**பரீட்சார்த்திகள் கவனத்திற்கு** பரீட்சார்த்திகள்/பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கீழே காணப்படும் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து அதன் பிரதியை நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ BCHS அல்லது Computer Expressக்கு அனுப்பிவைப்பதுடன் அதன் மூலப்பிரதியுடன் பரீட்சை நிலையத்திற்கு நேரடியாக சமூகமளிப்பதனூடாக பரீட்சைக்கு தோற்ற முடியும்.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
Second Floor,
No 15 Sirampiyady Lane,
Off Stanley Road. Jaffna.
Tel: 021 2224550 / 0714299935
0777585913 Email: info@bchs.lk
(ஆரியகுளம்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்)

**Computer Express**
No 167, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021 2228250 / 0777222422
(உதயன் பணிமனை
அருகாமை நாவல[illegible]

**Application Form**

Full Name :.................... Phone No.:....................
Address :.................... Mail ID :....................
Center :.................... Date....................
Sex :.................... N.I.C.No.:.................... Signature ....................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலுக்கு புதிய வியூகங்கள்


இரா. சம்பந்தர்

அடுத்து நடக்கப் போகும் பொதுத் தேர்தலில் இந்த முடிவு (ஜனாதிபதித் தேர்தல்) கனமான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது.

கூட்டணிகள் அமைப்பதில் இருந்து கொள்கைகளை வரைவது வரைக்கும் இந்தத் தாக்கம் அமையலாம். ஜானதிபதித் தேர்தல் பொதுவாக அனைத்துக் கட்சிகளுக்குமே பல விடயங்களைக் கற்றுக் கொடுத்திருந்தது.

அதாவது பொருந்தாத கூட்டணி என்று வாக்காளர்களால் அடையாளம் காணப்பட்டவற்றில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தமது முடிவை மீள்பரிசீலனை செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த வாரமே பல கட்சிகள் தமது முடிவுகளை மாற்றியமைத்துள்ளன.மேலும் பல கட்சிகள் அதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளன.

முதலாவது ஐ.தே.க- ஜே.வி.பி கூட்டணி. அடுத்த பொதுத்தேர்தலின்போதும் இது நீடிக்கும் என்றே முன்னதாக எதிர்பார்க்கப்பட்டது.

ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் அவரது அன்னப்பறவை சின்னத்தில் இரு கட்சிகளும் இணைந்து வேட்பாளர்களை நிறுத்தலாம் என்ற ஆலோசனைகள் இடம்பெற்றிருந்தன.


டக்ளஸ் தேவானந்தா

இதற்கான அடிப்படைப் பேச்சுக்கள் கூட நடந்திருந்தன.ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் இந்த இரு கட்சிகளும் அமைத்த கூட்டுக்கு வரவேற்புக் கிடைக்கவில்லை. முன்னதாக 2004 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து கூட்டணி அமைத்த போது அதற்கு கணிசமான ஆதரவு கிடைத்தது. ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கும் அளவுக்கு அது வரவேற்பு நிறைந்ததாக இருந்தது. ஆனால், ஐ.தே.க.வும் ஜே.வி.பி.யும் இணைந்து உருவாக்கிய கூட்டணிக்கு பலத்த அடி தான் விழுந்தது.

இரு கட்சிகளும் தனித்தனியாகப் பெறக்கூடிய வாக்குகளே சரிந்து போயிருந்தன. கடந்தமுறை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் மலையகக் கட்சிகளினது ஆதரவுடன் மட்டும் போட்டியிட்டபோது கிடைத்த வாக்குகள் கூட இந்தக் கூட்டணிக்குக் கிடைக்கவில்லை.

அப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு 47,06,366 வாக்குகள் கிடைத்த போதும், கடந்த தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு கிடைத்ததோ வெறும் 41,73,185 வாக்குகள் தான். ஜே.வி.பி, மங்கள சமரவீரவின் ஸ்ரீ.ல.சு.க. மக்கள் அணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு- இவற்றையெல்லாம் விட ஜெனரல் சரத் பொன்சேகாவின் தனிப்பட்ட செல்வாக்கு, அதுமட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டு பலரும் வழங்கிய ஆதரவு எல்லாம் கிடைத்த போதும் சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் குறைந்து போயுள்ளன.

ஜே.வி.பி. தென்னிலங்கையில் தமது வாக்கு வங்கியை இழந்து போனதும், ஐ.தே.க.வுக்கும் இது சரிவுகளை ஏற்படுத்தியிருப்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. இதனடிப்படையில் இந்தக் கட்சிகள் தனித் தனியாகவே அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளன.

அடிப்படைப் புரிந்துணர்வுகள் இருந்தாலும், தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு இரு கட்சிகளும் முடிவு செய்துள்ளன. அதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.க.வுடன் கூட்டணி அமைக்குமா என்பது தெரியவில்லை. ஆனால் இந்த இரு கட்சிகளினதும் கூட்டணிக்கு ஆபத்து ஏற்படாது என்றே தெரிகிறது.


மனோ கணேசன்

ஏனென்றால், இந்தக் கூட்டணிக்கு முஸ்லிம் மக்களிடத்தில் ஆதரவு கிடைத்துள்ளது.

மனோ கணேசனின் நிலையும் அதுவாகவே இருக்கும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் சரத் பொன்சேகாவை வெற்றி பெற வைத்த போதும், அதன் வேண்டுகோள் தமிழ்மக்களால் முற்றுமுழுதாக ஏற்கப்படவில்லை. எனவே பொதுத்தேர்தலில் தனித்துக் களமிறங்க அது முயற்சிக்கிறது.


சந்திரகாந்தன்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் புரிந்துணர்வுடன் செயற்படும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருப்பினும் இணைந்து போட்டியிடும் முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் விளைவாக ஏற்பட்டிருக்கின்ற மற்றுமொரு முக்கிய மாற்றம் வடக்கில் ஈ.பி.டி.பி தனித்துப் போட்டியிடப் போவதாக எடுத்துள்ள முடிவாகும்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இடம்பெற்றுள்ள ஈ.பி.டி.பி.யை கடும் அழுத்தங்கள் கொடுத்து, யாழ்.மாநகரசபைத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியி டுவதற்கு இணங்க வைத்தது அரசாங்கம். அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கி வேலை செய்வதற்கு அச்சத்துடன் இருந்த நேரம். அந்தத் தேர்தலில் ஆளும்கட்சி- ஈ.பி.டி.பி. கூட்டணிக்கு வெற்றி கிடைத்தது.


ரவூப் ஹக்கீம்

ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிக வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து, அவரை வெற்றிபெற வைக்கும் முயற்சியில் ஈ.பி.டி.பி.க்கு தோல்வி ஏற்பட்டுள்ளது. இது ஈ.பி.டி.பி.க்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தமது அடையாளம் பறிக்கப்பட்டு- மக்களிடத்தில் செல்வாக்கு இழந்து போய் விடுவோமோ என்ற பயம் ஏற்பட்டுள்ளது. அதனால் மீளவும் வீணைச் சின்னத்தில் போட்டியிட அது முடிவு செய்துள்ளது.

**- கபில் -**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலேயே இருக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிவுகளுக்கு நடுவில் இலங்கை ஒற்றுமையைத் தேடும் நிலை

சிறீலங்காவில் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலைத் தொடர்ந்து அங்கு பிரிவினைகள் மேலும் அதிகரித்துள்ளன. ஆனால் தற்போது தான் சிறீலங்கா தனது ஒற்றுமையை தேடுகின்றது என 'த அல்ஜசீரா' செய்தி நிறுவனம் தன் செய்தி ஆய்வில் தெரிவித்துள்ளது.

அதன் தமிழ் வடிவம் வருமாறு:

சிறிலங்காவின் நெருக்கடிகளை குறைப்பதற்கு சிறுபான்மை தமிழ் மக்கள் உதவ வேண்டும் என சிறிலங்கா அரச தலைவர் தனது சுதந்திரதின உரையில் கேட்டுக்கொண்டுள்ளார். உள்நாட்டு போர் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற முதலாவது சுதந்திரதினம் இதுவாகும்.

கண்டியில் உரையாற்றிய மஹிந்தா தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப்படமாட்டாது என தெரிவித்துள்ளதுடன், தமிழ் மக்கள் அரசுடன் இணைந்து இயங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்கள் மூலம் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என அவர் தமிழ் மொழியில் தெரிவித்திருந்தார்.

ஆனால் மஹிந்தவின் இந்த கோரிக்கையை நிராகரித்துள்ள பிரித்தானிய தமிழ்ப் பேரவையின் மூத்த உறுப்பினர் சுரேன் சுரேந்திரன், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மஹிந்த இதனை எப்போதும் தெரிவித்து வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மிகவும் மோசமான, இனவேற்றுமை கொண்ட அரச தலைவ ராக மஹிந்த தன்னை உறுதிபடுத்தியுள் ளார். தமிழ் மக்கள் சிறீலங்காவின் சுதந்திரதினத்தை கொண்டாடவில்லை. வடக்கு - கிழக்கில் அவர்கள் மஹிந்தவுக்கு வாக்களிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவை அரச தலைவராக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் மஹிந்த பங்குபற்றிய முதலாவது வெளிப்படையான நிகழ்வு இதுவாகும். ஆனால் அவருக்கு எதிராக போட்டியிட்ட பொன்சேகாவை அவர் தாக்கி வருகின்றார்.

சுதந்திரதினத்திற்கு முன்னர் 5,000 இற்கு மேற்பட்ட பொன்சேகாவின் ஆதரவாளர்கள் கொழும்பில் உள்ள வீதிகளில் இறங்கி தேர்தல் முடிவுகளுக்கு எதிராக பேரணி ஒன்றை நடத்தியிருந்தனர்.

அரச தலைவரை தேர்ந்தெடுக்கும் மக்களின் உரிமைகளை மஹிந்த கொள்ளையடித்துள்ளார் என பொன்சேகா அங்கு பேசும் போது தெரிவித்திருந்தார். அவர் உரையாற்றும் போது அவருக்கு ஆதரவாக அளிக்கப்பட்டு பின்னர் எரிந்த நிலையில் குப்பைத் தொட்டியில் இருந்து மீட்கப்பட்ட வாக்காளர் அட்டைகளையும் அவர் காண்பித்தார்.

**- ஆர்த்தி-**

என்ன விலை கொடுத்தாவது உங்களின் உரிமைகளை நாம் பெற்றுத்தருவோம். திருடிய வெற்றியை கொண்டாட நாம் அவர்களை அனுமதிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் தேர்தல் முடிவுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸாநாயக்கா மறுத்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் பிரச்சாரங்களின் போது நடைபெற்றவை தொடர்பில் நான் நிறைவடையவில்லை, ஆனால் தேர்தல் தினம் அமைதியாக இருந்ததுடன் முடிவுகளும் உண்மையானவை என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட உள்ளூர் மற்றும் அனைத்துலக கண்காணிப்பாளர்கள் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்ட காலம் வன்முறை மிக்கதாக இருந்ததாக தெரிவித்துள்ளனர். அதன்போது 5 பேர் கொல்லப்பட்டிருந்தனர். ஆனால் தேர்தல் தினம் அமைதியாக இருந்ததாகவும், சிறு சம்பவங்களே நடைபெற்றன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் மேற்கொண்டு அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்த மஹிந்த முயன்று வருகின்றார்.

-மஹிந்தவின் அடுத்த 6 வருடங்களுக்கான பதவிக்காலம் இந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக உயர் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை தெரிவித்துள்ளது. மஹிந்தர் இரு வருடங்களுக்கு முன்னர் தேர்தலை நடத்தியிருந்தார்.

ஊடகத்துறையினர் மீது வன்முறைகள் மேற்கொள்ளப்படு கின்றன என மஹிந்த அரசு மீது குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. தேர்தலின் பின்னர் பல இணையத்தள ஊடகங்கள் மீது தடைகள் கொண்டுவரப்பட் டுள்ளன. ஒரு ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டுள்ளார், ஒருவர் காணாமல் போயுள்ளார். ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். பலருக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

தற்போது அரச தலைவர் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார், ஆனால் மிக அதிகளவிலான குற்றச்சாட்டுக்களுக்கு அரசு உட்பட்டு வருகின்றது என நியூயோர்க்கை தளமாக கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியா பிராந்திய பணிப்பாளர் பிராட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு மறுநாள் சில அதிகாரிகள் தமது அதிகாரங்களை தவறாக பயன்படுத்த முனைந்திருந்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மஹிந்த அரசு 14 மூத்த இராணுவ அதிகாரிகளை பதவி விலக்கியுள்ளது. அவர்கள் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் என அரசு கூறுகின்றது. அவர்களால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

"முன்னாள் இராணுவ அதிகாரிகள் 15 பேர் உட்பட 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அரச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. கடந்த சனிக்கிழமை பொன்சேகாவின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போதும் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

டசின் கணக்கான படை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அரசுக்கு சார்பானவர்கள் பதவி

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுகளுக்கு நடுவில்....

*(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

உயர்த்தப்பட்டுள்ளனர். தேர்தலுக்கு மறுநாளில் இருந்து பொன்சேகா மீதும் அவரின் ஆதரவாளர்கள் மீதும் அரசு பல குற்றங்களை சுமத்தி வருகின்றது. அவர்கள் அரச தலைவரை கொலை செய்ய முயன்றனர் எனவும், இராணுவப்புரட்சியை மேற்கொள்ள முயன்றனர் எனவும் அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

ஆனால் தேர்தல் முடிவுகளை நீதிமன்றத்தின் மூலம் பெறப்போவதாக பொன்சேகா தெரிவித்து வருகின்றார். ஆனால் அதற்கான செயல்திட்டங்களை அவர் இன்றுவரை ஆரம்பிக்கவில்லை.

''மஹிந்த நேர்மையாக வெற்றிபெற்றிருந்தால் ஏன் என்னை கண்டு அஞ்சுகிறார்? ஏன் எங்களின் சுதந்திரமான நடமாட்டங்களைத் தடுக்கிறார். ஏன் எனது ஆதரவாளர்களை கைது செய்கிறார்?'' இந்த கேள்விகளை பொன்சேகா கடந்த புதன்கிழமை நடைபெற்ற பேரணியில் கேட்டிருந்தார் - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்றி: 'ஈழம் ஈ. நியூஸ்' இணையம்


### வீடு விற்பனைக்கு

நல்லூர், மருதடி வீதியில் இரண்டு பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0714192281, 0776158698

(92404)



### பிரத்தியேக வகுப்பு

ஸ்போக்கன் இங்கிலிஷ், ஸ்போக்கன் சிங்களம் ஆகிய பாடங்கள் கிழமை நாள்களில் காலை 9மணிக்கும் பிற்பகல் 1மணிக்கும் இடையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பத்திரிசியார் கல்லூரிக்கும் அண்மித்த பிரதேசங்களில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். 1 மணித்தியாலத்திற்கு ரூபா 100.00 மட்டுமே. இரண்டு அல்லது மூன்று மாணவ, மாணவிகளும் சேர்ந்து பயில முடியும்.

இரவு 7மணியின் பின்னர் தொடர்பு கொள்ளவும். அல்லது SMS செய்யவும். இல: 0779389201



### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




பரம்குமார் ஜீவறஞ்சினி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஹாஷினி தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.02.2010) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பா, பெரியம்மா ஆகியோர் இறைவன் ஆசியுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு.திருமதி பரம்குமார் ஜீவறஞ்சினி (பெற்றோர்)
விநாயகர் பாடசாலை அருகாமை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
தொ.பே: 021 226 4694, 0779112969



# NORTH LANKA IIT உடன் Direct Lines (Pvt) Ltd இணைந்து வழங்கும்

## Netherlands (Holland) இல் உடனடி வேலைவாய்ப்பிற்கான Spot Selection

பின்வரும் வேலைவாய்ப்புகளுக்கு 130 வெற்றிடங்கள் ...............

- Security Supervisors
- Security Guards
- Factory Workers
- Industrial Workers
- Garden Workers

சம்பளம் மாதம் 1200 யூரோ - (ரூபா 2 இலட்சம்)

இ ல வ ச
தங்குமிட வசதி
மருத்துவ காப்புறுதி
போக்குவரத்து வசதி

**5 Years Work Permit + Visa**

யாழ் வருகைதரவுள்ள Member of JISCO group Mr.Ahamed Jiffrey Chairmen - Direct Lines (Pvt) Ltd Labor License No - 524 அவர்களால் 14/02/2010 - 10:00 AM Spot Selection .........

பதிவு செய்பவர்களுக்கு மட்டும்

13-02-2010 - மாலை 4:00 மணிக்கு முன்பு கீழ் வரும் முகவரியில் பதிவு செய்யவும்

**NORTH LANKA IIT**
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.


## பொதுத் தேர்தலுக்கு.....

*(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

போகிறார் எனவும், தேர்தலின் பின்னரே இணைந்து செயற்படப் போகிறார் எனவும் கூறியிருக்கிறார் டக்ளஸ் தேவானந்தா. இது ஆளும்கட்சிக்கு அதிர்ச்சி தரக் கூடிய முடிவு. தமக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளை ஒன்றிணைத்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு யாழ்ப்பா ணத்தில் ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் திட்டம். அப்போ துதான் -தேசியக் கட்சி என்ற நிலை, அனைத்து மக்களிடத்திலும் செல் வாக்குள்ள கட்சி என்ற நிலை- ஏற்படும்.

ஆனால் வெற்றிலையை நம்பி மோசம் போய் விடுவோமோ என்ற பயம் ஈ.பி.டி.பி.க்கு.

இதேபோல கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் ஜனாதிபதித் தேர்தலில் பலத்த அடி விழுந்தது. அவர்களின் ஆதரவு பெற்ற மஹிந்த ராஜபக்ஷவை விட சரத் பொன்சேகாவுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. எனவே அந்தக் கட்சியும் தமது முடிவை மறுபரிசீலனை செய்யும் நிலையில் உள்ளது.

பொதுவாக அனைத்துக் கட்சிகளுமே தமது கூட்டணி குறித்த நகர்வுகளில் மாற்றங்களை செய்வதற்கே ஜனாதிபதித் தேர்தல் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. நிரந்தரமாகவோ- தற்காலிகமாகவோ தமது நண்பர்களை கைவிட்டு விட்டுத் தனிவழி நடப்பதற்கே ஜனாதிபதித் தேர்தல் பல கட்சிகளுக்கும் பாடம் கற்றுக் கொடுத்திருக்கிறது.

நன்றி:- 'இன்போ தமிழ்' இணையம்.

# பிரியதர்ஷன யாப்பாவிடம் இருந்து ஊடக அமைச்சை ஏற்றார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 13

ஊடக அமைச்சை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுப் பொறுப்பேற்றுள்ளார் என அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் அனுஷா பல்பிட்ட தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊடக அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது குறித்து அறிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஊடக அமைச்சுப் பொறுப்பில் கடைசியாக ஊடகவியலாளர் சந்திப்பை நேற்று மேற்கொண்ட அவர், ஊடகவியலாளர்களுக்குத் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு தனது அமைச்சுப் பொறுப்பிலிருந்து விடை பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த ஊடக சந்திப்பின்போது அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தவை வருமாறு:-

அரச அமைச்சரவைப் பேச்சாளர் பதவியில் நான் கலந்துகொள்ளும் இறுதி நிகழ்வாக இது அமையலாம்.

இரண்டு அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக நான் கடமையாற்றி வருகின்றேன். இவ்வாறான வேளையில் பொதுத் தேர்தல் ஒன்றும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

இதேவேளை, ஒரு பெரிய மாவட்டமான குருநாகல் மாவட்டத் தேர்தல் நடவடிக்கைகளையும் கவனிக்கும் பொறுப்பும் என்னைச் சார்ந்ததாகவுள்ளது. அதற்குப் போதிய அவகாசம் தேவை என்பதால் இந்த அமைச்சுப் பொறுப்பிலிருந்து என்னை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தேன். பெரும்பாலும் அவர் அதனை அங்கீகரித்தார் என்பது போலவே உணர்கின்றேன்.

எனவே இன்று நான் உங்கள் அனைவரிடமும் இருந்து விடைபெற்றுக்கொள்கிறேன்-என்றார். (சி)

# ஐ.நா. செயலரின் விசேட அதிகாரி மாத இறுதியில் கொழும்பு வருகை

கொழும்பு, பெப். 13

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் இலங்கை அரசுடன் பேச்சுகளை மேற்கொள்வதற்காக தனது அரசியல் விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி பி.லைன் பஸ்கோவை இம்மாத இறுதியில் இலங்கைக்குத் தாம் அனுப்பவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதன்கிழமை இரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உரையாடியவேளையிலேயே பான் கீ-மூன் இதனைத் தெரிவித்தார் என செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

புதன்கிழமை இரவு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பான் கீ-மூன், கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடயத்தில் உரிய சட்ட நடைமுறையைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

பொன்சேகாவின் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கொழும்பு அரசையும் பான் கீ-மூன் கேட்டுக் கொண்டார். சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் அல்லது மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களை அதற்குமுழுமையாகப் பொறுப்பேற்கச் செய்வது, தமிழ்ச் சமூகத்துடனான அரசியல் விவகாரங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான உறுதியான தீர்வுத் திட்டங்களை முன்னெடுப்பது என்பன தொடர்பாக கடந்த வருடம் கூட்டறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நிறைவேற்றுமாறும் பான் கீ-மூன் இந்த உரையாடலில் மேலும் வலியுறுத்தினார்.

இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைத் தாம் கவனத்தில் கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள பான் கீ-மூன் இவ்விடயத்தில் இன்னும் மேலதிக செயற்பாடுகள் அவசியம் என்றும் தெரிவித்தார். இலங்கை அரசுடனான பேச்சுகள் குறித்து ஐ.நா. ஆர்வமாகவுள்ளது எனவும் தெரிவித்த அவர், இலங்கை ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வு இம்மாத இறுதியில் இடம்பெற்ற பின்னர் அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா. தலைமையதிகாரி லைன் பஸ்கோவை இலங்கைக்குத் தான் அனுப்பவுள்ளார் எனவும் குறிப்பிட்டார். (சி)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள் றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணைப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



### 'வேத ஆகம வித்தகர்', 'முத்தமிழ் குருமணிக்கு' வாழ்த்துக்கள்

20.02.2010 சுன்னாகம் ஐயனார் கோயிலில் பாராட்டுப் பெறும் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருவிற்கு எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.



திரு. சி.குமரவேல் குடும்பம், தேர்த்திருவிழா உபயகாரர், ஐயனார் தேவஸ்தானம்.

(92408)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் உலக உணவுத்திட்ட நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட சமையலறைக் கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நிறுவன யாழ். மாவட்ட அலுவலகப் பிரதிநிதி டேவிட் பங்கர் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், அருகில் நிறுவன உத்தியோகத்தர் மரியதாஸ் பிரான்ஸிஸ், பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (50-207)



நீண்ட காலங்களின் பின்னர் புங்குடுதீவு துரைச்சாமி வித்தியாலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பாணிப்பாளர் எஸ்.இராதா கிருஸ்ணன் உரையாற்றுவதையும் அருகில் கல்வி அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (50-188)



சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையம் நடத்தும் ஐயனார் முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்டபடம்.

இதில் விருந்தினர்கள் கண்காட்சி நிகழ்வைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (50-16)



தென்மராட்சிக் கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான சிரமதானப் பணிகளில் மாணவர்களும் பாடசாலைச் சமூகத்தினரும் ஈடுபட்டுவருவதைப் படத்தில் காணலாம். (50-207)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைக் காணலாம். (50)




வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் 35 மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைக் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

இந்தக் கற்றல் உபகரணங்களைக் கல்லூரியின் பழைய மாணவர் இரத்தினம் சிதம்பரநாதன் வழங்கியபோது அவருடன் மாணவர்கள், அதிபர், உப அதிபர், பாடசாலை அபிவிருத்திச்சங்கத் தலைவர் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (50-49)




மு.சிங்கராயர் எழுதிய 'பாஷையூரும் நாட்டுக் கூத்தும்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் யோ.யோண்சன்ராஜ்குமார், பா.அகிலன், பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சோ.பத்மநாதன், அருட்திரு. மில்வர்வாஸ் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் நூலாசிரியர் ஏற்புரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். (50)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து காரைநகரில் மீளக்குடியமர்ந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு சைக்கிள்களை அண்மையில் வழங்கினர்.

இந்த நிகழ்வில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.பி.ஜெயசீலன் மாணவர் ஒருவருக்கு சைக்கிளை வழங்குவதையும் ஆலயப் பரிபாலகர் மகாராணி க.[illegible] அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (50-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்டியெடுக்கும் வெயில் நடுவே இதம்தரும் சாட்டிக் கடற்கரையை வளம்படுத்தலாமே?


நீச்சல் அடிக்கும் பயணிகள்....

வேலணை சாட்டியில் அமைந்துள்ள சாட்டிக் கடற்கரை இப்பிரதேசத்திலேயே சிறந்த நீச்சல் பகுதியாக விளங்குகின்றது.

அண்மையில் இந்தக் கடற்கரைப் பகுதி புனரமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் அமைதிச் சூழல் காரணமாக குடாநாட்டில் இருந்து மட்டுமல்லாமல் நாட்டின் எல்லாப்பாகங்களிலிருந்தும் மக்கள் இதனை நாடிவரத் தொடங்கியுள்ளனர். அவர்களில் சிலர் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் இங்கு பகிர்ந்து கொள்கின்றனர்.

**எம்.ஏ.சற். பசீர்**
**மாநகரசபை உறுப்பினர், நீர்கொழும்பு**



கொழும்பு - நீர்கொழும்புக் கடலில் குளிக்கக்கூடியதாக இல்லை. குளிப்பதற்கு இது மிகவும் நல்ல இடம்.

வேலணை சாட்டிக் கடற்கரைப் பகுதிக்கு உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கவென 50 பேருடன் வந்த பசீர், இந்த இடத்தைத் தேடிவந்து குளிப்பதில் எல்லோருக்குமே விருப்பமாகவுள்ளது. மேலும் இவ்விடத்தில் குளிப்பதற்காக தென்பகுதியில் இருந்து பலரை அழைத்துவர எண்ணியுள்ளேன். இது ஒரு நல்ல இடம். ஆனால் அடிப்படை வசதிகள்தான் இல்லை. அதனால் மேலும் இரண்டொரு தினங்களை இங்கே மகிழ்ச்சியாகக் களிக்க முடியா வண்ணம் அதற்குரிய அடிப்படை வசதிகள் இல்லை. முதலில் மலசல கூட வசதிகள், தேவையான உணவுப் பண்டங்களை வாங்குதற்கான கடைகள் அமைக்கப்படல், சுத்தமான குடிதண்ணீரைப் பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். இங்குள்ள மக்கள் எமக்கு உதவுகிறார்கள். போக்குவரத்துக்கான பாதைகள் சீரமைக்கப்படவேண்டும். அடுத்த தடவை வரும் போது தற்போதைய நிலையை விட முக்கிய தேவைகள் பல நிறைவேற்றப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன் வருவேன். இங்கே வந்து செல்லக்கூடிய வசதிகளை

யும் சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி சொல்லவேண்டும்.

**சிவகுகன் - ஆரவி தம்பதிகள்**
**குளப்பிட்டி, கொக்குவில்**



நாங்கள் முன்னர் வந்தபோது கட்டுப்பாட்டுப்பகுதிகள் இருந்தது. இப்போது அப்படிஇல்லை. சந்தோசமாகவும் நிம்மதியாகவும்பொழு

பார்ப்பதற்கு எழிலாக உள்ளது. கடலில் குளிக்கும் போது மேலும் மகிழ்ச்சியாக உள்ளது. குளிப்பதற்கு சிறந்த கடற்கரை இது என்றாலும் இங்கு வருகைதரும் மக்களுக்குத் தேவையான எந்தவொரு வசதியும் இங்கு காணப்படவில்லை. சுகாதார வசதிகள் முக்கியம். குப்பை கூழங்களைப் போடுவதற்கென குறிப்பிட்ட ஒரு இடத்தை ஒதுக்க வேண்டும். எங்களைப் போன்று நாட்டின் எப்பாகத்தில் இருந்தும் விடுமுறையைக் களிக்க வரும் மக்கள் மனதில் நிரந்தர சந்தோஷத்தைத் தரக்கூடியதாகவும் மீண்டும் மீண்டும் இங்கே வரத்தூண்டும் ஒரு உல்லாசக் கடற்கரையாகவும் இதனை மாற்றி அமைக்க இந்தப் பகுதியின் பிரதேச சபை தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

**பபிகாரி**
**மியூசியஸ் கல்லூரி, கொழும்பு**



கொழும்பில் நாங்கள் கடற்கரைக்குச் சென்று பொழுது போக்குவதுண்டு. காலி முகக் கடற்கரைபோன்ற பொதுமக்கள் கூடும் கடற்கரையில் மக்களுக்குத் தேவையான பல்வேறு வசதிகள் உண்டு. தற்போதுதான்

மான விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக் கலாம். என் போன்ற சிறுவர்களுக்கு அது மேலும் ஒரு பொழுது போக்கு அம்ச மாக விளங்கும். அழகான வெண்மணல் அதிலே விளையாடும் போது ஒரு குஷி ஏற்படும் தானே?

**க.கேதீஸ்வரநாதன் - அ.சேரன்**
**வெள்ளவத்தை, கொழும்பு**

சாட்டி கடற்கரைக்கு இப்போதுதான் வருகின்றோம். ஏற்கனவே இந்தக் கடற்கரை குறித்துக் கேள்விப்பட்டதுண்டு. அதனாலே வசதிமிக்க ஒரு சுற்றுலா மைய

**நேர்காணலும், படங்களும்:**
**லக்ஸ்மன்**

மாக இது இருக்கும் என எதிர்பார்த்த போதும் இங்கே எவ்வித அடிப்படை வசதிகள் கூட இல்லாதது ஆச்சரியமாக உள்ளது. சுகாதாரம் தொடர்பாக உடன் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் குடிதண்ணீர், இரவு வேளைகளில் போதிய மின் வசதிகள், நிழற்குடை இருக்கைகள், கடலில் குளித்தபின் நல்ல நீரில் குளிக்கக் கூடியதாக குளியலறை வசதிகள், குளிர்பானம், உணவு நிலையம், விடுதிவசதிகள், நீச்சல் தெரியாதவர்களை ஆபத்தில் இருந்து காப்பாற்றக்கூடிய உதவிப்படை, குப்பைத் தொட்டிகள் போன்ற வசதிகள், சிறுவர்க

## அடிப்படை வசதிகள் இல்லாதது பெரும் குறை
## உரியவர்கள் கண்திறந்தால் சிறந்த சுற்றுலா மையமாக மாறும் வாய்ப்பு

தைக்களிக்கலாம். நிறைய மக்கள் வந்து போகிறார்கள். அவர்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக இக்கடற்கரையின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். முக்கியமாக உடைகள் மற்றுவதற்கான அறை, கழிப்பிட வசதிகள் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும். இந்தக் கடற்கரையை உல்லாசப் பயணிகளுக்கு ஏற்றவகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும். இங்கு செல்வதற்கான பாதை குறித்த அறிவிப்புப் பலகை மும் மொழிகளிலும் எழுதப்பட்டு மண்கும்பான் பிள்ளையார் கோயில் சந்தியில் வைக்கப்படல் வேண்டும். அது பயணிகள் தடுமாற்றம் இன்றி வந்துசெல்லக்கூடிய வழிகாட்டியாக அமையும்.

**திருமதி எஸ்.சமந்திகா பெரேரா**
**மருதானை, கொழும்பு**



முதற்தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். நயினாதீவுக்குச் செல்வதற்காக வந்த போது இந்தக் கடற்கரைபற்றியும் அறிந்து அதைப் பார்க்கவேண்டும் என்று ஆசைப் பட்டு இங்கு வந்தேன்.


சேதமடைந்துள்ள பள்ளிவாசல்....

இந்தக் கடற்கரை மீதான கவனம் தோன்றியுள்ளது போலத் தெரிகின்றது. அத்தியாவசியமான தேவைகள் நிறைவேற்றி வைப்பதில் கவனம் செலுத்தினால்தான் இங்கு சந்தோஷமான பொழுது போக்குக்காக மக்கள் நிறையக் கூடுவார்கள். சிறுவர்களைக் கவரக்கூடியதான பல்வேறு மிருகங்களின் உருவங்களைஆங்காங்கே வைக்கலாம். கைப்பந்து, கூடைப்பந்து, வலைப்பந்து போன்ற சிறுவர்களுக்கு விருப்ப

ளுக்கான விளையாட்டுக் கூடம் போன்ற பலதரப்பட்ட வசதிகளை விரைந்து மேற் கொள்வதுடன் இந்தக் கடற்கரை பற்றி விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் மட்டு மல்லாமல் வெளிநாடுகளைச் சேர்ந்த உல்லாசப்பயணிகளும் வரத்தக்க வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். இதனால் இந்தப் பிரதேசத்தில் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுவதோடு வருமானமும் அதிகரிக்கும் சாத்தியம் உண்டு. பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்தினால் வேறு பல நாடுகளில் உள்ளதுபோன்று ஒரு குறிப்பிட்ட கட்டணத்தையும் பிரதேச சபை அறவிடக்கூடியதாக இருக்கும். தீவுப் பகுதியில் ஒரு நல்ல தரமான சுற்றுலாமையமாக இதை மாற்றவேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

---

### பொன்சேகா கைதை ஆட்சேபித்து
# மக்களை வீதிக்கு இறங்கிப் போராட அழைப்பு விடுக்கின்றார் அமில தேரர்

கைது செய்யப்பட்டிருக்கும் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாட்டு மக்கள் அனைவரையும் வீதிக்கு இறங்குமாறு தேசிய பிக்குகள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பிக்குகள் முன்னணியின் தலைவர் வண. தம்பிர அமிலதேரர் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் இடி அமீனின் ஆட்சிதான் இப்போது இடம் பெற்று வருகின்றது. நாம் இப்போது புதிய பிரபாகரனை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டில் ஜனநாயகம் அறவேயில்லை.

மஹிந்த ராஜபக்ஷ நேர்மையாக வெற்றி பெற்றிருந்தால் இவ்வாறு சரத் பொன்சேகாவைக் கைது செய்து அராஜகம் புரிந்திருக்க மாட்டார். வாக்குகளைக் கொள்ளை யடித்து வெற்றிபெற்றதால்தான் இவ்வாறு மோசமாக மஹிந்த செயற்படுகின்றார்.

யுத்த வெற்றியைக் கொண்டாடுவதற்காகப் பால்சோறு சமைத்து உண்ட இடங்களில் இப்போது பொன்சேகாவைக் கைது செய்தமையைக் கொண்டாடிப் பட்டாசுகள் கொளுத்தப்படுகின்றன. யுத்த வெற்றிக்குக் காரணமான பொன்சேகாவை இவ்வாறு கைது செய்திருக்கின்றமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தக் கைது தொடர்பில் அமைச்சர் கள் எவரும் திருப்திப்படவில்லை. இது அநியாயமானது என்று அவர்களுக்குத் தெரியும்.

இந்தக் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் நாம் உயர் மட்டத்தில் மேற்கொள்வோம்.

பொன்சேகா விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் எனப் பிரார்த்தித்து நாம் 14 ஆம் திகதி நாடு முழுவதிலும் உள்ள பௌத்த விகாரைகளில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபடவுள்ளோம். அதேபோல் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி இந்நாட்டு மக்கள் அனைவரும் வீதியில் இறங்கிப் போராட [illegible] இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். - என்றார்.

---

## துயர் பகிர்கின்றோம்



யாழ்.பிரதேச செயலகத்தில் கிராம
அலுவலராகக் கடமையாற்றும்
இ.சிவானந்தன் அவர்களின்
சிரேஷ்ட புத்திரன்

**செல்வன் சி.நதீஸ்**

அவர்களின் பிரிவுத்துயரில்
ஆழ்ந்திருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.பிரதேச செயலக நலன்புரிச்சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**

(92449)

---

## வணிக மாணவருக்கான கருத்தரங்கு

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11,12,13 ஆம் வகுப்புக்களில் வணிகக்கல்வியை ஒரு பாடமாக கற்கும் மாணவருக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் இலங்கை பிணைகள் பரிவர்த்தணை ஆணைக்குழுவினரால் நடத்தப்படவுள்ளது. தரம் 12,13 மணவருக்கு காலை 8.30 -12.30 மணிவரையும் தரம் 11 மாணவருக்கு நண்பகல் 1 - 2 மணிவரையும் நடைபெறும்.

எனவே மாணவர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (50)

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லத்துரை தனேந்திரகுமாரன்**

எத்தனை ஆண்டுகள் போனாலும்
உங்கள் பசுமையான நினைவலைகள்
என்றென்றும் எங்கள் உள்ளத்தில்
ஒளி வீசிக்கொண்டிருக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
சகோதரி, மைத்துனர், மைத்துனிமார்.

*46/5, கச்சேரி - நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(92446)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா, கல்லூரி அதிபர் வே. சிவசிதம்பரம் ஆகியோர் கல்லூரிச் சமூகத்தால் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும்,
பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கேவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ., இராசையா கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்திய சீலன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த மூன்று படங்களிலும் காணலாம். (படங்கள்: ஹரிஸ்)

# ஏழு கடற்றொழிலாளர் சங்கங்களை உள்ளடக்கி மானிப்பாயில் புதிய சமாசம் உருவாக்கத் தீர்மானம்

சண்டிலிப்பாய்,பெப்.13

மீனவர்களினதும், மீனவர் சங்கங்களினதும் நன்மை கருதி மானிப்பாய் கோவில் பற்றுப் பகுதியில் இயங்கிவரும் ஏழு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் இணைத்து மானிப்பாய் கோவில் பற்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒன்று உருவாக்கப்பட வுள்ளது.

சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வருட இறுதிப் பொதுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சமாசம் அமைக்கப்பட வேண்டிய தேவை குறித்து கூட்டத்தில் விரிவாக ஆரம்பிக்கபட்ட பின்பே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய், நவாலி, சாவற்கட்டு, காக்கைதீவு,உயரப்புலம் , கொக்குவில் ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் இயங்கி வரும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை காலமும் மாதகலில் இயங்கிவரும் வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் கீழ் செயற்பட்டு வந்தன.

மேற்படி சமாசத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கடற்றொழிலாளர்களின் மீன்பிடித் தொழிலுக்கும் மானிப்பாய் பகுதியில் உள்ள கடற்தொழிலாளர்களின் தொழிலுக்கும் வேறுபாடு இருப்பதினாலும், சமாசம் மாதகலில் இயங்கி வருவதினாலும் தொழிலாளர்களினதும், சங்கங்களினதும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணமுடியாமல் இருப்பதினாலும் புதிய சமாசம் உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-115)

# தாச்சிப் போட்டி

வலி.வடக்கு,பெப்.13

மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் ஆதரவுடன் அமரர் வே. மாணிக்கம் ஞாபகார்த்தமாக நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று (13.02. 2010) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மருதனார்மடம் மயிலிட்டி கலை மகள் பாடசாலை மைதானத்தில் நடை பெற்றுள்ள போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு

தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் சுன்னாகம் காந்தரூபன் விளையாட்டுக்கழகம். (04-86)

# தென்பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் இரவில் முற்றவெளியில் தரித்து நிற்கின்றன

யாழ்ப்பாணம், பெப்.13

தென்பகுதியிலிருந்து வரும் சகல தனியார் வாகனங்களும் இரவுவேளைகளில் யாழ். முற்றவெளிப் பகுதியில் தரித்து நிற்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் போதிய இட வசதியின்மையால் அதிகமான பஸ்கள் மற்றும் வாகனங்கள் முற்றவெளிப் பகுதியில் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கனரக வாகனங்களில் கொண்டு வரப்படும் பொருள்களும் முற்றவெளிப் பகுதியில் வைத்து வேறுசிறிய வாகனங் களில் மாற்றப்பட்டு பின்னர் வர்த்தக நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படு கின்றன. (50-227)

## யாழ்ப்பாணச் செய்திகள்

# தபால் விநியோகப் பணியாளர்களுக்கு விரைவில் சீருடைகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், பெப்.13

தபால் விநியோகப் பணியாளர்க்ளுக்கு விரைவில் சீருடைகள் விநியோகிக்கப்பட வுள்ளதாக வடமாகாணபிரதி அஞ்சல் மா அதிபர் வி.குருமகுரு தெரிவித்துள்ளார். பெரும்பாலும் இந்த மாத இறுதிக்குள் இந்தச் சீருடைகள் விநியோகிப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்தச் சீருடைகளை அணிந்தே இனி மேல் தபால் விநியோகப் பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் இதனால் பொதுமக்கள் அவர்களை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ள வுசதியாக இருக்கும் என்றும் அவர் கூறினார். அத்துடன் அவை சகல தபால் விநியோகப் பணியாளர்களுக்கும் இலவசமாக சைக்கிள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அஞ்சல் மா அதிபர் தெரிவித்துள்ளார். (50-224)

## சமய சந்நிதிகளில்

நெடுந்தீவு, பெப்.13

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்த சுவாமி கோவில் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடை பெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் அன்றைய தினம் பி.ப 4 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறும். (ரி-111)

* * * * *

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.பாண்டியன்தாழ்வு நரசிம்ம ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 02 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு அஷ் டோத்திர சத சங்காபிஷேகமும் பி.ப 5.30 மணிக்கு தெரு வீதி திருமஞ்சமும் நடைபெறும்.

மறுநாள் புதன்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகமும், தசதரிசனமும், நூல் கட்டுதல் நிகழ்வும் இடம் பெறும். (204- 224)

* * * * *

யாழ்ப்பாணம்,பெப்.13

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி மகாகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு திருமஞ்சம் தேர்வெள்ளோட்டம் இடம் பெறவுள்ளது. எதிர் வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (50-201)



கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நிஷா புயலினால், சேதமடைந்த மண்டபங்களில் ஒன்று ஈ.எஸ் பேரம்பலம் நிறுவன இயக்குநரான பி. நாகரத்தினம் வழங்கிய 142,280 ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட மண்டபத்தின் நினைவுக்கல்லை லயன் பி. நாகரத்தினம் திறந்து வைப்பதை படங்களில் காணலாம். அருகில் கோம்பயன்மணல் இந்துமயான பரிபாலன சபைத் தலைவர் லயன் பி. ஆர். ரஞ்சன், பொருளாளர் பி. சிறிபாலகிருஷ்ணன், செயலாளர் லயன் ஏ. வரதராஜன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். (1)

# பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கான தனியார் மினிபஸ் சேவை விரைவில்

வடமராட்சி,பெப்.13

பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கான நேரடி பஸ் சேவையை வடமராட்சி சிற்றூர்திச்சங்கம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இச்சேவையில் ஈடுபட தனியார் பஸ்வண்டிகளுக்கு பாதை அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையினாலேயே இச் சேவையை உடனடியாக ஆரம்பிக்க முடியாமல் போனதாக வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் தெரிவித்தது.

தற்போது வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ள இரு பஸ்வண்டி உரிமையாளர்களுக்கு பருத்தித்துறை-கொழும்பு பாதையில் பஸ் வண்டிகளைச் சேவையிலீடு படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் யாழ்.மாவட்ட அதிகாரிகள் தற் காலிக அனுமதியை வழங்கியுள்ளனர். இதனையடுத்தே பருத்தித்துறை- கொழும்பு தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை போதிய பஸ்வண்டிகள் இன்மையால் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ பருத்தித்துறை-கொழும்பு இ. போ.ச. பஸ் சேவையை ஆரம்பிக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு சேவையில் ஈடுபட போதிய பஸ் வண்டிகள் கிடைத்தால் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது. (50-236)

# வட இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி, பெப். 13

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி சீதா சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளை முகாமையாளர் ப. ஆனந்த நடேசன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார். (50-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபம்
காலம் - 27.02.2010
நேரம் - முற்பகல் 10.00 மணி

1 - மன்றின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 19.02.2010 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் மன்றச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.
2 - 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெள்ளிவிழாக் காணும் அங்கத்தவர்கள் கௌரவித்தல்.
3 - அமரர் ச.நமசிவாயம் புலமைப் பரிசு நிதியம்.
4 - சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற புலமைப் பரிசு நிதியம்.
5 - அமரர் கு.தவராஜசிங்கம் விதவை நிதியம் போன்றன வழங்கப் படவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு அனைத்து வணிகர் மன்ற அங்கத்தவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்,
சாவகச்சேரி
கைத்தொழில் வணிகர் மன்றம்.

(சி/564852)

# போதனா வைத்தியசாலைக்கு புதிய நிர்வாக உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய நிர்வாக உத்தியோகத்தராக எஸ்.பிரசாத் இன்று பதவியேற்கவுள்ளார்.

வைத்தியசாலையில் பிரதான கணக்கு எழுதுவினைஞராக இவர் முன்னர் பணியாற்றி தற்போது நிர்வாக உத்தியோகத்தராக சுகாதார அமைச்சினால் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். இதேசமயம் முன்னர் நிர்வாக உத்தியோகத்தராக பணியாற்றிய ஆர்.பத்மநாதன் இன்று முதல் ஓய்வுபெற்றுச் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (50-224)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம். (50-23)

* * *

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும் ஆறு பேர் பங்கு பற்றும் 5 பந்து பரிமாற்றத்தை கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

32 கழகங்கள் இந்த சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன. (50-23)

* * *

'எக்ஸ்போ எயார்' விமான சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆண்களுக்கான அரை இறுதிப்போட்டி இன்று மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் இடம்பெறும். இதில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* புனித பரியோவான் கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி. (50-23)

# கண்ணீர்க் காணிக்கை



திரு.திருமதி சிவானந்தன் அவர்களின்
அருமைப் புதல்வன்


## அமரர் நதீஸ்

அவர்களுக்குக் கண்ணீர்க் காணிக்கை
முகை அவிழ்த்து மணம் வீசி
முடிதரித்து கிளை பரப்பி
தலைமகனாய் ஒளிதந்து
தாங்கிடுவாய் என்றிருக்க
தாளாத்துயர் தந்து
மீளாத்துயில் ஏன் கொண்டீர்?
துயர் சுமந்து துடிக்கின்ற
அன்னைக்கும், தந்தைக்கும்
துவண்டுவிழும் உடன்பிறந்தோர்க்கும்
இதயசாந்தி பெற எம் கண்ணீர்
பூக்களை காணிக்கையாக்கி
நிற்கிறோம்.

(94758)

அதிபர், சிரேஷ்ட போதனாசிரியர்கள், போதனாசிரியர்கள், விடுதி முகாமைத்துவ மாணவர்கள், தாதியர் பயிற்சிக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

# 33 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
10.03.1925

இறைவன் அடியில்
13.01.2010

## நாகர் ஆறுமுகம் (J.P)

எமது குடும்பத்தலைவரின் மறைவு கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் தந்தி மூலமும் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல விதத்திலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (14.02.2010) **ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்** மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
இணுவில். (94754)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## *கணபதி சின்னர்*

வரணி - இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னர் 10.02.2010 புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு இறைபதம் சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் முருகேசு, கணபதிப்பிள்ளை, கந்தசாமி, சுப்பிரமணியம் (லண்டன்), பஞ்சலிங்கம், தியாகராசா (லண்டன்), பாலசிங்கம் (இத்தாலி), அருந்தவம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்னம்மா, மீனாட்சிப்பிள்ளை, இராசேஸ்வரி, கமலாதேவி, இராணியம்மா, தவமலர், சுமதி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வரணி இயற்றாலை ஊற்றல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 14.01.2010 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது சிரேஷ்ட புதல்வன் சண்முகலிங்கம் லதுர்ஜிக்காந் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 10.02.2010 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. 31 ஆம் நாள் சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (13.02.2010) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புச் செல்வத்தின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும் தபால், தந்தி, தொலைபேசி, மின்னஞ்சல் ஊடாகவும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மலர்மாலைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரர்
**சண்முகலிங்கம் லதுர்ஜிக்காந்**
(லது)

( உரிமையாளர், வதனி ஜுவலறி, கொடிகாமம்)

அன்னை மடியில்:
16.08.1976

ஆண்டவன் மடியில்:
14.01.2010

**குறிப்பு:**

இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களைச் சரியாக நினைவுபடுத்த முடியாததால் தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இன்றைய இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
தொ.பே: 021 300 2697

நீங்கா நினைவுகளுடன்:
குடும்பத்தினர்
(வதனி ஜுவலறி, கொடிகாமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமாரசாமி வெற்றிக் கிண்ண 'ருவென்ரி - 20'

# 'சம்பியன்' யாருக்கு? இறுதிப் போட்டி நாளை!


கே.ஸி.ஸி.ஸி. அணி


ஜொலிஸ்ரார் அணி

யாழ்ப்பாணம்,பெப்-13
முன்னாள் அதிபர் பி.எஸ். குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் 'ருவென்ரி-20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரு அணிகளும் சமபலத்துடன் விளங்குவதால் சம்பியன் கிண்ணத்தை வெல்வதற்கான இறுதிப்போட்டி பரபரப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் எம்.ஓங்காரமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி நாகரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர். (04-23)

## செய்முறைப்பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்-12
வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான தரம். 'பி', 'சி' என்பவற்றுக்கான செய்முறைப்பரீட்சை அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

இந்தச்செய்முறைப்பரீட்சையில் பங்குபற்ற முடியாமற்போனவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு சுகதாச விளையாட்டுத்திடலில் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (04-23)

## கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்-13
வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் இன்று சனிக்கிழமை புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது என விளையாட்டு உத்தியோகத்தர் நித்திலநாயகம் தெரிவித்துள்ளார். (04-23)

## ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்-13
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையேயான ஆண்களுக்கான மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை 8 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இப் போட்டிகளில் பங்குபெற்றும் பாடசாலை களின் அணிகள் நேர காலத்துடன் சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (04-23)

## கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்-13
கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசார கழகம் அமரர் ஐயந்துரை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக மாவட்ட ரீதியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் கரப்பந்தாட்டத்திடலில் இடம் பெறவுள்ளது. (04-23)

# கபடிப் போட்டியில் சம்பியனானது இணுவில் இந்து விளையாட்டுக்கழகம்

வலி வடக்கு,பெப்-13
உடுவில் செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற கபடிப் போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமும் இணுவில் இந்து விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகி இறுதி வரையும் இணுவில் இந்து விளையாட்டுக்கழகமுமே முன்னணியில் காணப்பட்டது. இருப்பினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் உடுவில் மத்தி விளையாட்டுக்கழகம் திடீரென எழுச்சி கொண்டு ஆட்டத்தை தொடர்ந்ததால் இணுவில் இந்து, புள்ளிகள் பெறுவதில் தடை ஏற்பட்டது.

இணுவில் இந்து விளையாட்டுக்கழ்கம் 33:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தபோது முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இணுவில் இந்துக் கல்லூரி 23:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் இருக்கையில் ஆட்டம் நிறைவுற்றது.

இதனால் ஆட்ட நிறைவில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் 56:37 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று உடுவில் பிரதேச செயலர் பிரிவுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதன் மூலம் மாவட்ட மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் விளையாட இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றது. (04-86)

# பூப்பந்தாட்ட அரையிறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி

வலி வடக்கு,பெப்-13
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கு இடையே நடைபெற்ற பூப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி இலகுவான வெற்றியைப் பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரியும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் இடம் பெற்ற ஒற்றையர் ஆட்டத்தின் இரண்டு போட்டிகளிலும், உடுவில் மகளிர் கல்லூரி இலகுவாக வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாட முன்னேறியது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்திலும் உடுவில் மகளிர் கல்லூரி 21: 01, 21: 07,புள்ளிகள் என்ற அடிப்படையில் விக்ரோறியாக் கல்லூரியை வெற்றி கொண்டது.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்திலும் உடுவில் மகளிர் கல்லூரி 21: 03, 21: 04,புள்ளிகள் என்ற அடிப்படையில் விக்ரோறி

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

யாக் கல்லூரியை வீழ்த்தியது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களிலும் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்றதால் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (04-86)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்-13
தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கே.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சபா. ரவீந்திரன் கலந்து கொள்வார். (04-16-190)

* * *

பருத்தித்துறை, கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பொ. அருமைச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக பீடப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரமும் சிறப்பு விருந்தினர்களாகப் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி பேணாட் றெக்னோவும் முன்னாள் அதிபர் செ.சிதம்பரநாதனும் கலந்து கொள்வர். (04-16)

* * *

யாழ்ப்பாணம்,பெப்-13
பாஷையூர் புனித அந்தோனியர் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய அதிபர் எம்.சி. செல்வநாயகம் தலைமையில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் மாநகர சபை உறுப்பினருமான எம்.றெமிடியஸ்சும், சிறப்பு விருந்தினராக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி எ.யாவிஸ் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (04-23)

* * *

சுண்டுக்குளி மகளிர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி. துஷிதரன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழி விரிவுரையாளர் எம். சரவணபவ ஐயர் கலந்து கொள்ளவுள்ளார். (04-23)

## வலிகாமம் வலய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டி

வலி வடக்கு,பெப்-13
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான மேசைப்பந்தாட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை8.00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் என்பனவும், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரி என்பனவும் கலந்து கொள்ளவுள்ளன. (04-86)



உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற கபடிப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக்கழகமும், இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழாவில் மன்மதராசா...



கவிநேசன்




அது ஒரு பண்பாட்டு விழா. அதுவும் நடந்துமுடிந்த தைப்பொங்கலையொட்டிய விழா. மண்டபம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஏற்பாட்டாளர்கள் யாவரும் பண்பாட்டு விழாவுக்கேற்ற வகையில் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்திருந்தனர்.

எமது பண்பாட்டு விழுமியங்கள் எம்மைவிட்டு மெல்லமெல்ல நழுவிப்போகிறபோது இவ்வாறான விழாக்களை கலாசார நலன்விரும்பிகள் ஆங்காங்கே நடத்துவது எல்லாமே அருகிப்போகிறதே என்று ஆதங்கப்படும்-குமுறிக்கொள்ளும் மனங்களுக்கு ஏதோ ஒருவகையில் தெம்பினையூட்டுகின்றது.

விழா அரங்கிலே மங்களச்சுடர் ஒளிவிட்டுப் பிரகாசிக்க அந்தணச் சிவாச்சாரியர்கள் ஆசியுரையினை அமுதவாக்காகச் சொல்லிமுடிக்க நிகழ்வின் பிரதம விருந்தினர் தனது உரையினையும் சுருக்கமாகக் கூறியமர்ந்தார்.

விழா அழைப்பிதழில் குறிக்கப்பட்ட நேரத்தில் ஆரம்ப சம்பிரதாய நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன.

"அன்பார்ந்த பார்வையாளர்களே! எமது பண்பாட்டு விழாவின் ஆரம்ப சம்பிரதாய நிகழ்வுகள் இத்துடன் நிறைவு பெற்றுள்ளன. இதோ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன" என்று அறிவிப்பாளரின் குரல் கணீரென்ற தொனியில் அந்த மண்டபம் அதிரும்படியாக ஒலித்தது.

முதல் நிகழ்வாக நடனம் என்று நிகழ்ச்சி நிரலினை அறிவித்தார் அறிவிப்பாளர்.

"பண்பாட்டு விழா ஆதலால் முதல் வரவேற்பு நடனம்தான் என்று எமக்குள்ளே தீர்மானித்து விழிகளை அரங்கின் நேரே வைத்திருந்தோம்.

அரங்கில் திரை விலகியது. அப்போது முன்னர் எமக்குள் நாம் தீர்மானித்த கற்பனையும் விலகியது.

ஆம்.... நாம் எதிர்பார்த்தோம். வரவேற்பு நடனத்தை. ஆனால் பண்பாட்டு விழாவில் வரவேற்க முடியாத நடனம் சுமார் 12 வயதுச் சிறுமியொருத்தி 'ஜீன்ஸும், ரீசேர்ட்டும்' அணிந்தபடி அரங்கினில் காட்சியளித்தாள்.

"மன்மதராசா...மன்மதராசா... கன்னிமனசை..... என்ற பாடல் வானலையில் வலம்வர அந்தச் சிறுமி ஆடத் தொடங்கினாள்.

பார்த்தீர்களா? பண்பாட்டு விழாவின் பண்பாட்டினை. இந்தச் சம்பவம் வடமராட்சிப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

எமது பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் விழாவென்று பெயர்சூட்டி இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவதென்பது சாலப்பொருத்தமாகுமா? என்பதை விழா ஏற்பாட்டாளர்கள் சிந்திக்கத் தவறிவிட்டார்கள்.


இத்தகைய தவறுகளால்தான் நாம் இன்று எமது அடையாளங்களைத் தவறவிட்டுள்ளோம்.

இத்தகைய விடயங்களைப் பார்க்கின்றபோது தொலைக்காட்சிகளின் பாவனை எமது சமூகத்தை எந்தளவிற்குப் பாதித்துள்ளதென்பதை உணரமுடிகிறது. அதாவது "மானாட மயிலாட..." நிகழ்வுதான் இந்தப் பண்பாட்டு விழாவில் மன்மதராசாவாக ஊடுருவியுள்ளதென்பதை எம்மால் உணரமுடிகிறது.

எமது பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் பறைசாற்றும் விழாக்களை நடத்துபவர்கள் பாராட்டத்தக்கவர்கள்.

அத்தகைய விழாக்களின் அநாகரிகமான நிகழ்வுகளை நடத்துபவர்கள் கண்டிக்கத்தக்கவர்கள்.

## தத்துவ முத்துக்கள்



1. எந்திரங்கள் பழுதடையும் போது தான் அவை எத்துணை திறன் மிக்கவை என்பது புரிய வருகிறது.
2, தேச பக்தனின் உடல் சிந்தும் இரத்தத்தைவிட அறிவாளியின் பேனா சிந்தும் மை புனிதமானது.
3. உழைப்பாளியின் வியர்வை உலர்வதற்குமுன் அவனது ஊதியத்தைக் கொடு.
4. கல்விக்காக உயிரைக் கொடுப்பவன் ஒரு போதும் மரணமாவதில்லை.
5. கால் இடறினால் சரிசெய்து கொள்ளலாம். நா இடறினால் உன்னால் மீளவே முடியாது.
6. நேற்று என்பது முடிந்தது. [illegible] நாளை என்பது பொய்.

# "வடக்கின் வசந்தம்" க

வடமாகாணத்தின் சில கலைஞர்களால் மிகக் குறுகிய காலப்பகுதியில் பயிற்றப்பட்டு கடந்த 20.01.2010 இல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட இக்கலை நிகழ்வின்மூலம் நாம் கற்றுக் கொண்ட படிப்பினைகளும், அவற்றின் ஊடாக நம் கலைஞர்களிடம் எப்படியான மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதை உணர்த்திய ஓர் அநுபவப் பகிர்வே இக் கட்டுரை.

உண்மையில் இந்நிகழ்வில் கலந்து கொள்ளக்கிடைத்த அரிய வாய்ப்பு இதில் கலந்துகொண்ட கலைஞர்களுக்குக் கிடைத்த பேரதிஷ்டம் என்றே கூறவேண்டும். ஏனெனில் இலங்கையின் புகழ் பூத்த நடன வடிவமைப்பாளர் திரு. சந்தன விக்கிரமசிங்க என்பவரிடம் 17.01.2010 -20.01.2010 வரை நான்கு நாள்களாகப் பெற்ற நடன வழிகாட்டல்கள் மிகப் பெறுமதியானவை. பட்டை தீட்டப்படாமல் கொண்டு சென்ற வைரக் கற்கள் இவரால் பட்டைதீட்டப்பட்டு ஒளி வீசின என்றால் அது மிகையாகாது. ஓர் உணவுப் பண்டத்தை ஆக்குவதோடு மட்டும் ஒரு படைப்பாளியின் பங்கு முடிவடைந்து விடவில்லை; அதை அழகுற கலைத்துவமாகப் பரிமாற வேண்டியதும் மிக முக்கியமானது என்பது நாம் சந்தனவிடம் பெற்றுக் கொண்ட முக்கிய பாடம்.

ஒரு கலைஞன் எப்படி அரங்கில் நுழைவது? எப்படி அவன் அரங்கை விட்டு வெளியேறுவது? அரங்கில் நுழையும் போதும் கலைஞனாக நுழைய வேண்டும்; அரங்கை விட்டு வெளியேறும் போதும் கலைஞனாக வெளியேற வேண்டும். வெறுமனே ஆட்டுமந்தை போல் அரங்கில் நுழைந்து கொண்டு பின்னர் தமது நடன நிற்பதாயின் அது பிசிறில்லாமல் நேராக அமைந்திருக்க வேண்டியது முக்கியம். எந்த அசைவுகளும் ஒரே காலத்தில் நிகழ்த்தப்படவேண்டியதும் மிக முக்கியம். குழு நடனத்தில் இது முக்கியமாகக் கவனத்தில் எடுக்க வேண்டும். இன்னொரு முக்கியமான அம்சம் "அரங்கச் சமநிலை" அரங்கச் செயற்பாட்டின் போது சில சந்தர்ப்பங்களில் கலைஞர்கள் எல்லோரும் ஒரு பக்கமாக ஒதுங்குவது அரங்கின் ஒரு பக்கத்தை வெறுமையாக்கி அரங்கச் சமநிலையைப் பாதிப்புக்குள்ளாக்குகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

ஒரு நடனக்கலைஞன் வெறுமனே ஆடிவிட்டால் போதும் என்று எண்ணாமல் எந்தக் கட்டத்தில் எந்த ரசம் தேவையோ அதைத் தனது முகத்தில் கொண்டு வரவேண்டியதும் முக்கியம். ஆகையால் முகபாவனையில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்பது இங்கே வலியுறுத்தப்படுகிறது.

இவை சந்தனவிடம் நாம் பெற்றுக் கொண்ட பாடங்கள். காழ்ப்புணர்வற்ற, இன மத பேதமற்ற ஒரு முழுமனிதனாகச் சந்தனவை நான் தரிசித்தது மனதிற்கு இதமாக இருந்தது. அடுத்த கலைஞனுடைய தனித்துவத்திலும் படைப்பிலும் அவர் மூக்கை நீட்டாமல் மிக நாகரிகமாக நடந்து கொண்டது என் மனதில் அவர் உயர்ந்து நிற்கக் காரணமாகின்றது. எம்மை நெறிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பை அவர் எற்றுக் கொண்டிருந்தாலும் அவர் மிகவும் பெளவியமாகவும் எளிமையாகவும் நடந்து கொண்டது என் மனதைத் தொட்டு நிற்கிறது.

ஒரு கலைஞன் கலைஞனாக



ஆசை இராசையா

வடிவமைப்பை உருவாக்குவது தவறு. இது இவரிடம் பெற்ற முதற்பாடம்.

அடுத்ததாக கலைஞர்கள் எந்த வடிவமைப்பையும் நேர்த்தியாகச் செய்யவேண்டும். ஒரு நேர்கோட்டில் இருப்பதற்கு முன் அவன் மனிதனாக இருக்க வேண்டியது முக்கியம். பகுத்தறிவு என்ற ஆறாவது அறிவைப் பெற்றவன் மனிதன் என்பது நாம் அறிந்ததே. ஆயினும் எத்தனை பேர்

# அத்திவாரக் குழிக்குள் களிமண் இடல் நிலம் ஊறுவதைத் (நீர் கசிவதை) தடுக்கும்

எங்கள் மண்ணில் அமைக்கப்படும் வீடுகள் மாரிகாலத்தில் ஒரு சில வருடங்களில் நிலம் ஊறத் தொடங்கும். புதுக்கட்டடம், வீடுகள் மாரிக்கு நிலம் ஊறுது. நாள்கள் செல்ல மழைகாலம் நிலம், சிமெந்து நிலம் நீர் கசியும். இதற்குப் பிரதான காரணம் அத்திவாரத்தை கட்டி அறைகள் அமையும் இடங்கள்எல்லாம் தரையிலிருந்து இரண்டு அடி உயரத்திற்கு எழுப்பிய அத்திவாரம் அதனுள் நிரப்புவதற்கு நாங்கள் புழுதிமண் இடுகிறோம்.கடற்கரை மண் அல்லது வேறுவகைப் புழுதிமணல்களே இடப்படுகிறது. புழுதிமணல் நீரை இலகுவில் உறிஞ்சிவெளியேற்றும். இதனால் எங்கள் வீடுகள், தரைகள் மாரிகாலத்தில் நீர்கசிகிறது. ஈரலிப்புத் தன்மை ஏற்படுகிறது. அத்திவாரம் எழுப்பி அதற்குள்ளே களிமண் இடப்பட்டு மொக்கான் கொண்டு இறுக்கி பின்னர் கற்கள் (மாங்காய், தேங்காய்கற்கள்) போடப்பட்டு தண்ணீர் இறைத்து மொக்கான் கொண்டு இறுக்கி, சிறு கற்கள் தூவி இறுக்கி, அதன் மேல் சிமெந்து கொங்கிறிற் கலவைபூசி சிமெந்து பூசி தனிச்சிமெந்தினால் மெழுகினால் தரை மாரியாலத்தில் நீர் கசியாது. களிமண் நீரை இலகுவில் உறிஞ்சாது, இழக்கவும் மாட்டாது. அத்திவாரத்திற்குக் களிமண் இடப்பட்ட வீடுகளின் தரைகள், மாரிகாலத்தில் நீர்கசியாது உலர்ந்து காணப்படும் புழுதிமணல் மக்கள் வாழும் வீடுகளுக்கு, அத்திவாரங்களுக்கு இடுதல் நல்லதல்ல. நீர்கசியும் தரைபகுதி வீடுகள் பலகாலம் நிலைக்காது. சுவர்கள் பழுதடைந்து விடுகின்றன. விரைவில் செய்வோமா?




அத்திவாரகுறுக்கு வெட்டுமுகம்

மு.ரகுபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை அளிக்கை

அந்த ஆறாவது அறிவைப் பயன்படுத்துகிறார்கள்? ஆனால் கலைஞன் எனப்படுவன் பகுத்தறிவுவாதியாக இருக்க வேண்டியது முக்கியம். ஏனெனில் அவன் படைப்பாளி. எதையும் பகுத்து அறிந்து படைக்க் வேண்டியவன். இந்தச் சமூகத்தை வழிநடத்திச் செல்பவன். மூட நம்பிக்கைக்கு ஆட்படாமல் சரி பிழையைச் சீர்தூக்கிப்பார்க்கத் தகுதியுடைவன். இப்படிப்பட்ட ஒரு மனிதனாகவே நான் சந்தனாவை தரிசிக்கின்றேன். அவருடைய மாணவர்கள் சிலரையும் நாம் சந்திக்கக்கூடியதாக இருந்தது.




சுறுசுறுப்பாகவும் அந்நியோன்யமாகவும் அன்பாகவும் எம்முடன் பழகிய அந்தக் கலைஞர்களும் எம் மனதில் உயர்ந்து நிற்கிறார்கள். இவர்களிடமிருந்து நாம் படிக்க வேண்டியவை எமக்கு நிறைய உண்டு.

சந்தன விக்கிரமசிங்க ஒரு கதகளி நடனக்கலைஞர். கல்கத்தாவில் இரவீந்திரநாத் தாகூர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சாந்திநிகேதன் என்னும் கலைக் கல்லூரியில் தனது நடனக் கலைப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர். நவீன சிந்தனைப் பாங்கும் புதுமைப்படைப்பாற்றலும் உள்ள சிறந்த கலைஞர். அவரால் நெறிப்படுத்தி அரங்கேற்றப்பட்ட நான்கு நடன அமைப்புக்களை கடந்த 06.01.2010 இல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஒளித்திரையில் அங்கு சமுகமளித்திருந்த கலைஞர்களும் ஆர்வலர்களும் பார்த்திருக்கின்றோம். ஒரு படைப்பாற்றல் உள்ள கலைஞனின் படைப்புக்கள் உண்மையில் மெய் சிலிர்க்கவைக்கிறது. நாம் எல்லோரும் குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருகிறோம் என்ற உண்மை உறைக்கிறது.

புதுமையான சிந்தனையும் அவற்றைப் புதுமையான முறையில் படைக்கும் ஆற்றலும் உள்ளவனே கலைஞன். படித்ததை அப்படியே ஒப்பிப்பது கலையனுடைய பணியல்ல. சுய சிந்தனையும் படைப்பாற்றலும் முக்கியமாக அவனிடம் இருக்க வேண்டும் என்பது கலை வல்லுனர்களால் வலியுறுத்தப்படும் ஒரு கருத்தாகும்.

கலைப் பாடங்களைப் பொறுத்தவரை அதன் அடிப்படை அறிவை மாணவனுக்கு ஊட்டுவது குருவின் முக்கிய பணியாகிறது. அதன் பின்னர் மாணவன் சுயமாகச் சிந்தித்துப் படைக்கின்ற நிலை வரும்பொழுது அவனுடைய தனித்துவம் வெளிப்படுவதற்குத் துணை நிற்க வேண்டியதுதான் உண்மையான குருவின் கடமையாகிறது. அதை விடுத்து குரு தன்னுடைய பாணியைத் திணிக்க முனைந்தால் அது கலை ஒரு தேக்க நிலையை அடைவதற்கு ஏதுவாகிறது. இந்த மண்ணின் அவலம் ஒரு சில துறைகளில் இந்த நிலை காணப்படுவது மிகவும் வேதனையான அம்சம். கற்றல் முடிந்த பின்னரும் - அவன் பதவியில் அமர்ந்தாலும்கூட குரு சொற்படிதான் நடக்க வேண்டும் குருவைக் கேட்டுத்தான் எதுவும் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கின்ற துர்ப்பாக்கியம் ஆரோக்கியமான கலை வளர்ச்சிக்குக் குந்தகமாக அமையும். இப்படியான காரணிகள் நிவர்த்தி செய்யப்படவேண்டிய அவசியம் உணரப்படுகிறது. குரு என்ற உயர்ந்த பதவியில் இருப்பவர் ஒரு நீதிபதியைப்போன்று இருக்க வேண்டியது முக்கியம். விருப்பு வெறுப்புக்கு அப்பால் பாகுபாடின்றிச் செயற்படவேண்டிய தார்மீகப் பொறுப்பு அந்தப் பதவியில் இருப்பவருக்கு இருக்க வேண்டியது முக்கியம். ஒரு ஆரோக்கியமான கலைச் சமூகம் இந்த மண்ணில் உருவாகவேண்டுமானால் இவை கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஒவ்வொரு கலைஞனிடமும் ஏதோ ஒரு தனித்துவமாயினும் இருந்தே ஆகும்.அந்தத் தனித்துவத்தை மதித்து நடப்போமாயின் கலைஞர்கள் தமக்குள் பொறாமைப்படும் நிலை அற்றுப்போகும் என்பது எனது கருத்து.

கலை என்பது ஒரு பெரும் சமுத்திரம் போன்றது. மனச் சாட்சியைத் தொட்டுச் சிந்திப்போமானால் நாம் அந்தச் சமுத்திரத்தின் கரையினிலே கால் நனைத்து நிற்பவர்களாகவே உணரத் தலைப்படுவோம். இன்னும் அந்தச் சமுத்திரத்திலே முழுமையாக இறங்கவில்லை என்ற உண்மை புரியும் பொழுது எமக்குள் குடிகொண்டிருக்கும் அறியாமை, நான் தான் எல்லோரையும் விடச் சிறந்த கலைஞன் என்ற ஆணவம் அகன்று ஒரு பக்குவநிலை ஏற்பட வாய்ப்புண்டு. ஆகையால் மூத்த கலைஞர்கள் வளர்ந்து வரும் கலைஞர்களுக்குப் போதிய சுதந்திரம் கொடுத்து அவர்களுடைய தனித்துவத்தை வளர்க்க உதவி செய்வோமாக.

'வடக்கின் வசந்தம்' கலை நிகழ்வில் கலந்து கொண்ட கலைஞர்களில் அனேகமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என்ற வகையில் அவர்கள் இந்தப் பயணத்தை எவ்வளவுக்கு அனுபவித்து மகிழ்ந்தார்கள் என்பதை நேரில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

(வளரும்)

# வேருக்கு உரமிடுவோம்

தமிழ் மக்கள் தங்கள் பாரம்பரியத் தாயகமான இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் சிங்கப்பூர், மலேசியா, பிஜித்தீவுகள்,தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலும் பிரித்தானியா ,கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஷ்சர்லாந்து, நோர்வே,சுவீடன் ,அவுஸ்திரேலியா முதலிய இடங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள். தங்கள் சொந்த நலனை, பொருளாதார முன்னேற்றத்தை, சொகுசான வாழ்க்கையை நோக்கமாகக் கொண்டு அவ்வப்போது தாமாகவே வெளி நாடுகளுக்குச் சென்று குடியேறியவர்களைவிட அரசியல் அடக்குமுறை, ஒடுக்குமுறை, இனவாதம், உள்நாட்டுப் போர் முதலியவற்றால் சொந்தநாட்டில் வாழமுடியாமல் வெளிநாடுகளுக்குச் சென்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பெரிது ,மிகப் பெரிது.

இவ்வகையில் லட்சக்கணக்கான இலங்கைத்தமிழ் மக்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கின்றார்கள். ''உலகத் தமிழர்கள்'' என்பது வெறும் சொல்லடுக்காக அல்லாமல் கருத்துச் செறிவுடைய உண்மையைப் பிரதிபலிக்கும் ஒரு சொற்றொடராக உயர்ந்து விட்டது.

புலம்பெயர்ந்து புகலிடம் கோரிப் பெற்று அந்தப் புதிய நாடுகளிலே புது வாழ்க்கையை மேற்கொண்ட இந்தத்தமிழ் மக்கள் தாம் புகுந்த நாடுகளிலே இசை விழா,



கலை விழா, நாடகவிழா ,தமிழ்விழா, எழுத்தாளர் விழா போன்றவற்றைப் பெரிய அளவிலே நடத்துகின்றார்கள்.சஞ்சிகைகள், புத்தகங்கள் வெளியிடுகின்றார்கள். இவைகள் எல்லாம் மகிழ்ச்சிக்குரிய செயற்பாடுகள்தான். பெருமைக்குரிய சாதனைகள்தான். இவை அனைத்துமே நீடித்து நிலைக்க வேண்டும். தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் அந்தந்த நாடுகளிலே தடையேதுமின்றி, இடையீடு இன்றித், தளைத்தோங்க வேண்டும் என்றே விரும்புகின்றேன்.

கலை இலக்கியங்கள் வெறுமனே ரசனைக்காகவும் பொழுது போக்கு வதற்காகவும் ஏற்பட்டவையல்ல. சமுதாயத்தின் மாற்றத்துக்கும். ஏற்றத்துக்கும் துணை நிற்பவை. அதனால் கலை இலக்கியங்களைக் காத்து, வளர்த்து ஊக்குவிக்க வேண்டியது மக்களின் கடமை.

அதே வேளையில் பிறந்து வளர்ந்த பொன்னாடு மிக உயர்ந்ததாக மதிக்கப்படவேண்டும். அந்நாட்டில் நடந்த நிகழ்வுகள் எல்லாம் பொய்யாய், கனவாய், பழங்கதையாகி விட்டநிலையில் மனக்கண்ணில் இன்று நிழலாடுகிறது. அப்படியான இனிய நாள்கள் இனியும் வருமா? தமிழ்மொழி உள்ளவரை மறைக்கப்பட முடியாது மறக்கப்படவும் முடியாதனவையே.

உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை போல அங்கொன்றும் இங்கொன்றும் சில நிகழ்வுகள் நடக்கத் தான் செய்கின்றன. யானைப்பசிக்கு இந்தச் சோளம் பொரி போதாது. தமிழர்களின் பாரம்பரியக் கலைச் செல்வங்களின் முதுசங்களின் எஞ்சியுள்ள எச்சசொச்சங்களையாவது பேணிப்பாது காக்க எந்தச் சிரமத்தையும் பாராமல் எதிர்காலச் சந்ததிக்கு உழைப்பதைக் கடமையெனக் கருதுகின்றேன்.

நயினை கி.கிருபானந்தா, செயலாளர், யாழ்.இலக்கிய வட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கே என் யாழ்ப்பாணம்?

எங்கே என் யாழ்ப்பாணம்
தேடுகிறேன் இங்கே
தெரியவில்லை இப்போது
வீதிக்கு வீதி கடைவிரித்து
விற்பனைகள் நடத்துகிறார்
விலை மதிக்க முடியாத
எல்லாமே விலை போனபின்
எதைவாங்க எல்லாமே மலிவாக
மதிலுக்கு மதில் விளம்பரங்கள்
எங்கள் பணச் சுரண்டல்கள்
சோதனைகள் இல்லை.
பயணங்கள் மகிழ்ச்சிதான்
ஆனாலும் வீதிகளை நிறைத்துள்ள
வாகனப் புழுதிக்குள்
எல்லாமே மறைந்துவிட
நாம் வலிபட்ட போதெல்லாம்
எங்கோ இருந்தவர் இன்றெம்
வாசலில் நின்று சிரிக்கிறார்.
நல்லூரை ஆண்ட சங்கிலியன்
நடுத்தெருவில் தேடுவாரற்றிருக்க
தோடிச் சித்தன் வாழ்ந்த
புண்ணிய நல்லூரிலே இன்று
எங்கே என் ஆத்மா
தேடுகிறேன் தெரியவில்லை
அவர்களிற் பிழையில்லை
பிழையெல்லாம் எம்மிற்றான்
வரவேற்கக் கூட வசதியற்று
நடுத்தெருவில் விட்டுள்ளோம்.
பாழ்பட்டுப் போனதெம் யாழ்மண்
பகலிரவாய் வாகனங்கள் ஓட
எங்கும் எவரும் எப்போதும் சென்றுவர
மகிழ்வுதான் மறுக்கவில்லை
இத்தனை காலமாய்
ஒரு நாட்டிற்குள்ளேயே அர்த்தமற்று
அடைபட்டிருந்த நாம் இன்று
அருகருகே மகிழ்வுதான் இந்த
வாழ்வு தந்தவர்க்கு நன்றி
ஆனாலும் பிஞ்சிலே முத்திப்போன
எங்கள் குலத்தோலைகளை
எண்ணித்தான் கவலை
சின்ன வயதில் சிகரெட்டும் கையுமாய்
ஆடிப்பாடும் இவரை இப்படி
வளர்த்து விட்டதார் குற்றம்
எப்படிப் போனதேம் தலைமுறை
சாராயப் போத்தலும் காண்போனாம்
கைப்புமாய் அழிவு நாம்தான்
மௌனமாய் இவற்றையெல்லாம்
பார்த்திருக்கும் எம் பெரியவரே
படித்தவரே பண்பாளரே
பிறகேன் பண்பாடென
வாய்கிழியக் கத்துகிறீர்
புண்பட்டிருக்கும் நிலை மாற்றமுடியா
தலையாட்டிப் பொம்மைகளாய்
நீங்களுமா மாறிப்போனீர்
எதற்குள்ளும் அரசியல்
எமக்கு வேண்டாம்
பண்பாட்டைக் காக்கப்
புதுஅணியாய் நாம் எழுவோம்
நவீனம் தேவைதான் (மறுக்கவில்லை)
நல்ல மனிதர்களும் தேவைதான்
சிந்திப்போம் செயற்படுவோம்.

-புலோலியூர் வேல்நந்தன்.

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 13 ஆம், 14 ஆம் திகதிகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறுவதாக இருந்த உதைபந்தாட்டப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என விளையாட்டு அலுவலர் சதீஸ்குமார் அறிவித்துள்ளார். (04-86)

## இலங்கையர் ஆயிரம் பேருக்கு கனடாவில் தொழில் வாய்ப்பு

இவ்வாண்டு இலங்கையர் ஆயிரம் பேருக்கு கனடாவில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தொழிலுறவுகள், மனிதவள அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

தொழில் அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் வடமேல் மாகாணத்திலுள்ள வயம்ப பயிற்சி நிலையமும் கனடாவிலுள்ள கீகின் கல்லூரியும் இணைந்தே மேற்படி வேலை வாய்ப்புக்களுக்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

கனடாவின் நடைமுறை நிர்வாக மொழி ஆங்கிலமாக உள்ளதால் மொழிப்பயிற்சி மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்குவதுடன் தேர்ச்சியானவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்படி நிறுவனங்களே முன்னெடுக்கும். அதற்கான ஒத்துழைப்புக்களை மட்டுமே தொழிலமைச்சு வழங்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (50)

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 * 12 * 1974



இறப்பு 09 * 02 * 2009

**அமரர் பசுபதி உதயகுமார் (கண்ணன்)**

எங்கள் ஒளிவிளக்கே அண்ணர்-உன்
திருமுகத்தைக் காணாமல் ஓராண்டானதையா!
வருவாய் என்று காத்திருந்தோம்-நீ
வழிமாறிச் சென்று விட்டாயையா-உன்
அன்புக்காய்க் காத்திருக்கும் உன் உள்ளங்கள்

நாவலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய். **அப்பா, அம்மா, தம்பி, தங்கை.** (94753)

### வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாகத் திறக்கப்படவுள்ள Graton Marketing Company இல் வேலை வாய்ப்புக்கள் உள்ளன. தகைமை O/L, A/L.
தொடர்பு: 0776749066, 0779555954,0713285050

### மணமகள் தேவை

1976ஆம் ஆண்டு பிறந்த, பூச நட்சத்திரம்-7இல் செவ்வாய் உள்ள கணக்காளர் (ACMA)கனடாவில் PR உள்ள மணமகனுக்கு உயரமான அழகிய, படித்த பெண் தேவை. தரகர் தேவையில்லை. தொடர்பு: 021 321 4095

### தவறிவிட்டது

பரமேஸ்வரன் புருஷோத் என்பவரது தே.அ.அட்டை (883333861V), இராணுவ அ.அட்டை, ATM Card என்பன அடங்கிய பேர்ஸ் வேலணைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பி.வ.முகவரியில் ஒப்படைத்துதவும். சன்மானம் வழங்கப்படும்.
*தொடர்பு:* தேவி கருமாரி நகைமாடம், 66, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்குண்டு

★ எஜற் பொலிசர்
★ இல 1 றைஸ்லர்
★ இல 7 றைஸ்லர்
} பொருத்தமான விற்பனைக்குண்டு.
தொடர்பு: குகன் அரிசி ஆலை, கல்வயல், சாவகச்சேரி.





### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701216879 முதல் 701233479 வரை. சீட்டிழுப்பு இல. 622 திகதி 11-02-2010.

வெற்றி எண்கள்

07 38 41 49 ஆங்கில எழுத்து K

ஜக்பொட் பரிசு ரூ. 14,365,330/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,365,330/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 348 | 1,000/= | 348,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 581 | 1,000/= | 581,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14528 | 60/= | 871,680/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6789 | 40/= | 271,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 171185 | 20/= | 3,423,700/= |
| | | மொத்தம் ரூ. | 6,323,940/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - S. நிலுஷா சந்தமாலி - பலபிட்டிய.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - L.M. குலரத்ன பண்டார - வத்தேகமை.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 701222567-3-10 |
| கொழும்பு | 701225409-7-16 |
| நுவரெலியா | 701226422-0-40 |
| அம்பாறை | 701225577-6-19 |
| புத்தளம் | 701226435-7-43 |
| மொனராகலை | 701219656-8-01 |
| கொழும்பு | 701228073-1-29 |
| களுத்துறை | 701222109-4-46 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,723,940/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 14,828,080/=

தொடர் இல. 601257974 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 பெப்ரவரி 15 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 23354687

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.01.2010 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் கண்மணி இராசரத்தினம்**

மண்ணில் 06★03★1927
விண்ணில் 14★01★2010

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.02.2010) சனிக்கிழமை மு.பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரஸ்வதி பவனம், அச்செழு, நீர்வேலி. (94751) **குடும்பத்தினர்.**

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.13

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் யாழ்கிளை முகாமையாளர் பி.ஆனந்த நடேசன் கலந்துகொள்வார். (204-253)

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 806 திகதி: 11.02.2010

ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 03 43 55 69 — போனஸ்: 53

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 12,314,846.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 292 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14484 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 204704 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,626,480.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 12,638,826.50

ஐந்து லெட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி கழிக்கப்பட்டு உடையவருக்கு கொடுக்கப்படும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை — 234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470643 இணையம்: www.nlb.lk

## உதவிப் பணம் பெறுவோரின் அட்டைகள் மீளாய்வு

நவாலி, பெப்.13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்றுவரும் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களின் பணம்பெறும் அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

இதற்கமைய எதிர் வரும் 16 ஆம் திகதி ஜே/144 மாகியப்பிட்டியிலும், 18 ஆம் திகதி ஜே/ 145 வடலியடைப்பிலும், 19 ஆம் திகதி ஜே/ 146 பண்டத்தரிப்பிலும் நடைபெறவுள்ளன.

குறிப்பிட்ட பிரிவிலுள்ளவர்களை முற்பகல் 11 மணிக்கு தத்தமது கிராம சேவையாளர் அலுவலகங்களில் சமுகமளிக்குமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (50-100)

## வடமராட்சியில் நெல் அறுவடை

வடமராட்சி, பெப்.13

வடமராட்சிப் பிரதேசத்தில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கப்புதூ, கரவெட்டி ஆகிய இடங்களில் வேகமாக அறுவடை செய்யப்பட்டுவரும் நெல் வயல்களில் வைத்தே சூடடிக்கப்பட்டு வருகிறது. (50-236)

# Skill for Life

## Accelerated Skills Acquisition Program (ASAP)

## Young Workers Capacity Development

New Classes Begins on 17.02.2010



Course Duration : 30 Hrs

Registration Fee : Rs.1500.00
Course Material : Rs. 500.00
Course Fee : Rs.5000.00

(Condidate's registration fee include pre&post tests and Certification)

### Subject Areas

The following subject areas are covered in this students handbook

- Career Success Skills (including Career Guidance/Job Search/Introduction to Self Employment)
- English Language Skills
- Computer Skills



Contact : Gateway Language & ICT Centre Jaffna
347,Kasthuriyar Road,Jaffna
021 567 5555 021 222 7967 gatewayjfn@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கல்வி வலய இசையாசிரியர் கழகத்தினால் 'பல்லியம்' இறுவட்டு அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வெளியிடப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், யாழ்.கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ம.கிருஷ்ணவேணி, ஓய்வுபெற்ற உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.குமாரசாமி ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

இறுவெட்டின் பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்கி வைப்பதையும், நிகழ்வில் கந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: இரட்ணம்)*

# வன்னியில் சேதமடைந்த 10 தபாலகங்களை புனரமைப்பதற்கு 135 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப்.13

வன்னிப் பகுதியில் சேதமடைந்த பத்து தபால் நிலையங்களை மீளப் புனரமைப்பதற்கு 135 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு இந்த நிதியை ஒதுக்கியுள்ளது.

கிளிநொச்சி, மாங்குளம், ஒட்டுசுட்டான், பூநகரி, பரந்தன், நெடுங்கேணி, அடம்பன், தாளையடி, நட்டாங்கண்டல், துணுக்காய் போன்ற இடங்களிலுள்ள தபால் நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

போரினால் சேதமடைந்த இந்தத் தபால் நிலையங்களை மீளப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (1-224)




## புங்குடுதீவுப் பகுதிக்கு 24 மணிநேரமும் மின்விநியோகத்தைப் பெற்றுத்தாருங்கள்

### பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.13

புங்குடுதீவுப் பகுதிக்கு 24 மணிநேர மின்சாரத்தைப் பெற்றத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புங்குடுதீவுப் பகுதியில் குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப்பட்டுவரும் மின்சாரமும் குறிப்பிட்ட நேரங்களில் மாத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றில் மின் உபகரணங்களைப் பயன்படுத்த முடியாமையால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இப்பிரதேசத்துக்கு 24 மணிநேர மின்சாரத்தை வழங்கும்முகமாக ஏற்கனவே வேலணை துறையூர் மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி ஆகிய பகுதிகளில் மின்கம்பங்கள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் இந்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 24 மணிநேர மின்சாரம் வழங்குவதற்கான எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புங்குடுதீவுப் பகுதிக்கு மாலை 6 மணி தொடக்கம் 10 மணி வரையும், காலை 5 மணி தொடக்கம் 7 மணி வரையும் மற்றும் புதன்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையுமே தற்போது மின்சாரம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-16-188)

## வேலணை கிழக்கு ம.வி. பழைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.13

வேலணை கிழக்கு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் எஸ்.குமரேஸ்வரநாதன் கேட்டுள்ளார். (1)

## வெங்காயப் பயிரைத் தாக்கும் புதுவகைத் தாவரம் நெடுந்தீவில்

நல்லூர், பெப்.13

நெடுந்தீவுப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயப் பயிரில் 'நீர் மேல் தாவரம்' எனக் கூறப்படும் மெல்லிய தாவரம் வெங்காயத் தாள்களைச் சுற்றிப் படர்ந்துள்ளது. நிலத்தில் இதன் வேர் பகுதிகள் இல்லாத நிலையில் குருவிச்சை போன்று படர்ந்துள்ள இந்தக் கொடியின் தாக்கத்தினால் பயிரிடப்பட்ட சுமார் 6 அந்தர் வரையான வெங்காயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இந்த இக்கொடியினால் ஏற்படும் நோய் பற்றிய விவரம் எதுவும் அறிய முடியாத நிலை இருப்பதாக விவசாயிகள் கவலையுடன் கூறுகின்றனர். (ரி-111)

### அச்சுவேலிப் பகுதியில்

## சுகாதாரத்தைப் பேணத் தவறிய 3 உணவுச்சாலைகளுக்கு 'சீல்'

அச்சுவேலி, பெப்.13

சுகாதாரத்துக்கு கேடான முறையில் செயற்பட்ட அச்சுவேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த மூன்று உணவுச்சாலைகள் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளன.

மனிதர்களின் உடல் நலத்துக்கு ஒவ்வாத வகையில் செயற்பட்டதாக மேற்படி கடைகளின் உரிமையாளர்களுக்கு உரிய முன்னறிவித்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த அறிவுறுத்தல்கள் கவனத்தில் எடுக்காத நிலையில் அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அதைத் தொடர்ந்து நீதிமன்றத்தினால் உணவுச்சாலை உரிமையாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததோடு பொதுச்சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய திருத்தவேலைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

விற்பனை நிலையங்கள் தற்பொழுது 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளன.

அச்சுவேலி I பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ரவிவர்மா, அச்சுவேலி II பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பி.சயந்தன் ஆகியோர் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பாக அச்சுவேலி I பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ரவிவர்மா கருத்துத் தெரிவிக்கையில்;

பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு உணவுச்சாலைகள் உரிய விதிமுறைகளுக்கு அமைய பராமரிக்கப்பட வேண்டும். தொற்று நோய்கள் பெருமளவில் பெருகிவரும் இந்தக் காலச்சூழலில் சுயநலத்துடன் செயற்படாமல் பொதுநலத்துக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவது சமூகத்துக்குச் செய்யும் பெரும் உதவியாகும்.

உணவுச்சாலை உரிமையாளர்களுக்கு உரிய முன்னறிவித்தல் வழங்கப்படும். அதற்குக் கட்டுப்படத்தவறும் இடத்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும். இந்த வகையில் எதிர்காலத்தில் டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைப்பு வழங்காமல் உதாசீனம் செய்வோர்மீதும் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

'சீல்' வைத்து மூடப்பட்ட உணவுச்சாலைகள் உரியமுறையில் மறுசீரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் செயற்பட அனுமதிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-11)

## தென்மராட்சியில் குடியேறியோருக்கு 18 ஆம் திகதியே கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப்.13

நலன்புரி நிலையங்களில் இருந்து வெளியேறி இதுவரை 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாத தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் சாவகச்சேரி சிவன் கோயிலடியில் வைத்து வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

அன்றையதினம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினரால் மீள்குடியமர்ந்தவர்களுக்குத் தேவையான உப பொருள்கள் அடங்கிய பொதிகளும் வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் மேலும் அறிவித்துள்ளார். (50-9)

## இளைஞர்களின் துரித முயற்சியால் உயிராபத்துக்கள் தடுக்கப்பட்டன

கைதடி, பெப்.13

இளைஞர்களின் துரித நடவடிக்கையினால் மின்சாரத்தினால் ஏற்பட இருந்த உயிரிழப்புக்கள் தடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை மாலை ஏ-9 வீதியில் அரியாலை யூதா கோயிலுக்கும் நெடுங்குளம் சந்திக்குமிடையே இடம் பெற்றுள்ளது.

ஏ-9 வீதியில் தெற்குப் பக்கத்திலிருந்து வீதியின் குறுக்கே வடக்குப் பக்கமாகவுள்ள வீட்டிற்கு வழங்கப்பட்ட மின்னிணைப்பின் கேபிள் வயர் திடீரென தொய்ந்து வீதியில் வீழ்ந்தது. அவ்வேளை வீதியால் வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. இதனைக் கண்ட அப்பகுதி இளைஞர்கள் துரிதமாகச் செயற்பட்டு வாகனங்களை நிறுத்தி நிலைமையைச் சொன்னதுடன் கேபிள் வயரை அருகிலிருந்த உயரிய கம்பத்தில் கட்டி பெரும் உயிராபத்துக்களைத் தடுத்து நிறுத்தியதுடன் மின்சார சபையினருக்கும் துரித கதியில் தகவலைத் தெரிவித்தனர். உடனடியாக வந்த மின்சாரசபையினர் கேபிள் வயரை உரிய மின்கம்பத்தில் பாதுகாப்பாக இணைத்தனர்.

அப்பகுதி இளைஞர்களின் இம் முன்மாதிரிச் செயலை தென்னிலங்கையில் இருந்து வந்த மக்களும் வெகுவாகப் பாராட்டினார்கள். மேற்படி சம்பவத்தினால் ஏ-9 வீதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ரி-288)

## யாழ்ப்பாணத்தில் குவியும் அன்னாசிப்பழம்; அவற்றின் விலையிலும் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.13

தென்பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையான அன்னாசிப் பழங்கள் இப்போது யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன. இதனால் அவற்றின் விலையும் நாளுக்குநாள் குறைந்து வருகின்றது.

வாகனங்களில் பெரும் எண்ணிக்கையில் கொண்டு வரப்படும் இந்த அன்னாசிப்பழங்கள் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரே சமயத்தில் பெரும் எண்ணிக்கையான அன்னாசிப்பழங்கள் வந்து சேர்ந்தமையால் அவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

முன்னர் 150 ரூபா வரை விற்கப்பட்ட பெரிய அன்னாசிப்பழமொன்று நேற்று 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதைக் காணமுடிந்தது.

இந்த அன்னாசிப்பழங்கள் யாழ். நகரின் மூலை முடுக்கெங்கும் வாகனத்திலும் தெருவோரங்களிலும் வைத்து விற்கப்படுகின்றன. (50-224)

## வீதி விளக்குகள் ஒளிராமையால் நெடுந்தீவில் முக்கிய இடங்கள் இருளில்

நெடுந்தீவு, பெப்.13

நெடுந்தீவு பிரதான வீதியின் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்த சுமார் 7 வீதி மின்விளக்குகள் ஆழி உடைந்து பழுதடைந்துள்ளன. இதனால் முக்கிய இடங்கள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

நெடுந்தீவுப் பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் பிரதான வீதியின் முக்கிய பகுதிகளில் பொருத்துவதற்கென 16 இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதும் 10 மின் விளக்குகளே தற்போது பொருத்தப்பட்டுள்ளன. இவற்றிலும் 3 மின் விளக்குகள் மட்டுமே தற்போது எரிவதாகப் பொது மக்கள் கூறுகின்றனர். (ரி-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவின் கைதைக் கண்டித்து நேற்று அனுராதபுரத்தில் ஆர்ப்பாட்டம்

அனுராதபுரம்,பெப்.13

ஜெனரல் சரத் பொன்சேகாவின் கைதைக் கண்டித்து அனுராதபுரம், டீ.எஸ்.சேனநாயக்க சுற்றுவட்டத்தில் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு அரச ஆதரவாளர்கள் என்று கருதப்படும் ஒரு கோஷ்டியினர் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இதில் ஐவர் காயமடைந்தனர் எனக் கூறப்பட்டது. பொலிஸார், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது கண்ணீர்ப்புகைக் குண்டு வீசி கலைத்தனர்.

இது குறித்து அங்கிருந்து கிடைத்த தகவல்கள் வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமையை எதிர்த்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது அனுராதபுரம் முதலமைச்சர் காரியாலயப் பகுதியில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்களும் முதலமைச்சரின் வளாகத்தில் இருந்த மற்றோரு பிரிவினருக்கும் இடையே கல்வீச்சுச் சம்பவங்கள் பரஸ்பரம் இடம்பெற்றன. இதிலேயே ஐவர் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்து நிலைமையை சுமுக நிலைக்குக் கொண்டு வருவதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர். அத்துடன், கலகம் அடக்கும் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டது. (10 - 105)

யாழ்.மாணவர்களின் நலன்கருதி
Study In Abroad
வெளிநாட்டில் கல்வி
Greenwich Business School
(G.B.S) ஊடாக
இலவச கருத்தரங்கு
லண்டனில் உள்ள 10 கல்லூரிகளுக்கான
Spot Admission
உடனடி அனுமதி
இடம்:
யாழ்.ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடம்
காலம்:
நாளை (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை மட்டும்
நேரம்:
மு.ப.10.00 - பி.ப.2.00 மணிவரை
(94757) தொடர்பு: 0773537378

# நாட்டைக் காட்டிக் கொடுக்க எவருக்கும் உரிமை கிடையாது

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு,பெப்.13

''இந்த நாட்டின் எவருக்கும் அரசியல் செய்யக்கூடிய உரிமைகள் உள்ளன. எனினும், நாட்டை மீண்டும் பயங்கரவாதிகளுக்குக் காட்டிக்கொடுப்பதற்கோ- நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைப்பதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது''

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவின் அரசியல் வாழ்க்கையை ஆரம்பிக்கும் நிகழ்வு தங்காலை நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியவை வருமாறு:-

2, 500 வருடங்கள் பௌத்த உபதேசங்களால் போதிக்கப்பட்ட நன்றியுணர்வுடைய மக்கள் வாழும் இந்த நாட்டில் எப்போதும் வாய்மையே வெல்லும். அரசியல் என்பது சண்டித் தனமோ பழிவாங்குதலோ அல்ல. மக்களைப் பயமுறுத்தி அரசியல் நடத்திய யுகத்தை இம்முறை ஜனாதிபதித் தேர்தலோடு நாட்டிலிருந்தே என்னால் ஒழிக்க முடிந்தது.

இந்த நாட்டில் எவருக்கும் அரசியல் செய்யக்கூடிய உரிமைகள் உள்ளன. எனினும், நாட்டை மீண்டும் பயங்கரவாதிகளுக்குக் காட்டிக்கொடுப்பதற்கோ நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைப்பதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது -என்றார்

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ கூறியவை வருமாறு:-

சகல இன, மத, சமூகங்களையும் கொண்ட இளைஞர் யுவதிகளை இணைத்துக் கொண்டு இந்நாட்டைக் கட்டியெழுப்ப என்னை அர்ப்பனிக்கப்போகிறேன்.

அதேபோன்று, ஆசியாவிலேயே சிறந்த நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அம்பாந்தோட்டை மக்களுடன் இணைந்து நானும் அர்ப்பணிப்புடன் செயற்படப் போகின்றேன். எனது அன்பான தாயாரின் நிழலில் கல்விக் கண் திறந்து முதலெழுத்தைப் படித்தது போன்று தந்தையாரின் அரவணைப்பிலிருந்து அரசியல் அரிச்சுவடியைக் கற்பதனை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் - என்றார்

இந்நிகழ்வுக்கு முன்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ, புதல்வர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தங்காலை நகரில் அமைந்துள்ள டீ. ஏ. ராஜபக்ஷவின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

# மருந்து வகைகளை கொள்வனவு செய்ய இந்தியாவுக்கு சுகாதாரக் குழு விஜயம்

கொழும்பு, பெப்.13

அத்தியாவசிய மருந்துப் பொருட்களை வைத்தியசாலைகளுக்குத் தட்டுப்பாடின்றி விநியோகிக்கும் வகையில் மூன்று மாதங்களுக்குப் போதுமான மருந்து வகைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு ஏற்படக்கூடிய தட்டுபாடு தொடர்பாக முன்கூட்டியே கண்டறிவதற்காக பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சரத் வீர பண்டாரா தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரிவின் அதிகாரிகள் நாடளாவிய ரீதியில் வைத்தியசாலையில் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் அதிகளவில் தேவைப்படும் மருந்து வகைகள் எவை என்பது கண்டறியப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதில் அடிக்கடித் தேவைப்படும் மருந்து வகைகளை களஞ்சியப்படுத்துவது தொடர்பில் முக்கிய கவனம் செத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்படி குறிப்பிட்ட மருந்து வகைகளை மூன்று மாதங்களுக்குத் தேவையான அளவு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தி வைக்கவுள்ளதாக டாக்டர் சரத் வீர பண்டார தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சரின் பரிந்துரைக்கமைய மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சின் உயர் மட்டக் குழுவினர் அடுத்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர் என அவர் தெரிவித்தார். (10-ரி)

SPOT ADMISSION
Canadian Degree Programme
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
யாழ் மாணவர்களுக்காக முதல் முறையாக
கனடிய பல்கலைக்கழக உயர்கல்விக்கான பட்டப்படிப்பு (3 வருடம்)
UNB
Bachelor of Computer Science
Offered by New Brunswick University of Canada



| | | |
|---|---|---|
| Venue | IDM Affiliated University College #216, Navalar Road, Jaffna | IDM Affiliated University College #5 1/1, Kandy Road, Chavakachcheri |
| Date | 14th & 15th February 2010 | 15th February 2010 |
| Time | 9.30 AM – 12.30 PM | 2.00PM – 5.00PM |
| Appointments | Call 2 229 901 | Call 7 390 030 |
| What to bring | Bring all Your Educational Certificates (O/L & A/L compulsory) | |

IDM
Nation's ICT Academy
Affiliated University College
City Campus #3
IDM Affiliated University College
#16, 42nd Lane, Wellawatte, Colombo 06
Tel : +94 11 2 361 801 Fax : +94 11 2 361 807
www.idmcc3.lk | unb@idmcc3.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். நிலைமை கவலை அளிக்கிறது அமெ. துணை ஜனாதிபதி தெரிவிப்பு

வாஷிங்டன், பெப். 13

பாகிஸ்தான் நிலைமை கவலை அளிக்கின்றது என அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ பிடேன், அமெரிக்க தொலைக்காட்சி யொன்றுக்குத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''எங்களின் கவலை எல்லாம் ஆப்கானிஸ்தானைப் பற்றியோ, ஈராக்கைப் பற்றியோ அல்ல, பாகிஸ்தானைக் குறித்துத்தான். அந்த நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் தீவிரவாதத்துக்கு ஆதரவாளர்களாகவும், தீவிரவாதிகளாகவும் இருக்கின்றார்கள்'' என்றும் ஜோ பிடேன் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அங்கு ஜனநாயகம் என்பது பெயரளவுக்குத்தான் இருக்கிறது. அது ஓர் அணு சக்தி நாடாகும். அதன் அணுசக்தி ஆயு தங்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''ஈரானின் அணு ஆயுதத் திட்டம், கவலை அளிக்கக்கூடியது. ஈரான் இந்தத் திட்டத்தில் வெற்றி பெற்றால், இதைப் பார்த்துவிட்டு, சவூதி அரேபியா, எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளுக்கும் அணு ஆயுத ஆசை ஏற்படலாம். இத்திட்டங்கள் உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கக்கூடியவை'' என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

''அல்-குவைதா அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தலாம் என உளவுத்துறை எச்சரித்துள்ளது. தாக்குதல் நடத்தலாம், ஆனால் அது 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடத்தியது போன்ற பெரிய அளவிலான தாக்குதலாக இருக்காது என்பது என் கணிப்பு ஆகும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இனிமேல் அதுபோன்ற தாக்குதல்களை நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் இல்லை. எனவே அப்படிப் பெரிய அளவிலான தாக்குதலை அல்-குவைதா நடத்தாது என்று நான் கருதுகிறேன். அது சிறிய அளவில் தான் இனிமேல் தாக்குதல் நடத்தும். அந்தத் தாக்குதல் அழிவு ரீதியாக இருக்காது. மிரட்டல் அளவில்தான் இருக்கும்'' என்றும் ஜோ பிடேன் கருத்து வெளியிட்டுள்ளார்.

''கிறிஸ்மஸ் தினத்தன்று டெச்சாஸ் நகருக்கு வந்த விமானத்தில் தாக்குதல் நடத்த அப்துல் முத்தலிப் என்ற தீவிரவாதி முயன்றது போன்ற தாக்குதல்கள்தான் இனி மேல் நடக்கும்'' என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

''ஈராக்கில் போர் முடிவுக்கு வந்துவிட்டது. அங்கு தீவிரவாதத்தை ஒழித்தது அமெரிக்க நிர்வாகத்தின் சாதனையாகும். ஈராக்கில் நிலையான ஆட்சி அமைக்கப்பட்டு அங்கு முன்னேற்றப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என்றும் ஜோ பிடேன் பெருமிதம் தெரிவித் துள்ளார்.

## ஈரானிய மறைந்த தலைவரின் பேர்த்தியும் கணவரும் கைது

தெஹ்ரான், பெப். 13

ஈரானின் மறைந்த இஸ்லாமியத் தலைவர் அயதொல்லா கொமேய்னியின் பேர்த்தி ஜாக்ரா எஷ்ராகியும், அவரது கணவர் முஹம்மது ரசா கதாமியும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்.

முஹம்மது ரசா கதாமி, ஈரானின் முன்னாள் ஜனாதிபதி கதாமியின் தம்பி ஆவார். அயதொல்லா கொமேய்னி 1979 ஆம் ஆண்டு, அப்போதைய மன்னராகவிருந்த ஷாவுக்கு எதிராக இஸ்லாமிய புரட்சி நடத்தி, ஆட்சியைக் கைப்பற்றியவரா வார்.

இந்த இஸ்லாமியப் புரட்சியின் 31 ஆவது வருட நிறைவையொட்டி நடைபெற்ற பேரணியின் போது, ஜாக்ரா எஷ்ராகியும், அவரது கணவர் முஹம்மது ரசா கதாமியும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுக்கான விவரம் வெளியாகவில்லை.

உலக அரங்கில்

## யூதர்களைக் கொலை செய்த டாக்டரின் நாள்குறிப்பேடு விரைவில் ஏலத்துக்கு!

லண்டன், பெப். 13

சித்திரவதை முகாம்களில் யூதர்களை விதவிதமாகக் கொலை செய்த டாக்டரின் நாள்குறிப்பு ஏடு(டயரி) விரைவில் ஏலத்துக்கு வருகிறது. லண்டனிலிருந்து வெளிவரும் 'தி டெலிகிராப்' பத்திரிகை இத்த கவலை வெளியிட்டுள்ளது.

டாக்டர் ஜோசப் மெங் கெலே என்பவர் ஹிட்லர் ஆட்சிக்காலத்தில், 'மரண தேவன்' என்று போற்றப்பட்டவர். சித்திரவதை முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த யூதர்களை விதவிதமாகக் கொல்ல ஹிட்லருக்கு வழிவகை வகுத் துக் கொடுத்தவர்.

1979 வரை வாழ்ந்த இவரது நாள்குறிப்பேடுகள் பிரேஸிலில் பொலிஸ் ஆவணங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளனது. 1960 இல் அந்த நாள்குறிப்பேட்டின் தகவல்கள் ஆரம்பமாகின்றன.

இவர் தமது நாள்குறிப்பேட்டில், ''மனித இனத்தை விருத்தி செய்யும் வழிவகைகளைப் பின்பற்றாவிடில் வெகு சீக்கிரத்தில் மனித இனமே அழிந்துவிடக் கூடும்'' என கவலைப்பட்டு எழுதியுள்ளார்.

அமெரிக்காவில் வரலாற்று ஆவணக் காப்பகத்திலுள்ள இந்த நாள்குறிப்பேடு விரைவில் ஏலத்துக்கு வரவிருக்கிறது.




ஈரானின் இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்ட 31 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டப் பேரணியின்போது........

## ஈரானில் எதிர்க்கட்சிப் பேரணிகளுக்கு எதிராக ஆளுங்கட்சியும் ஆர்ப்பாட்டம்

ஈரானின் இஸ்லாமியப் புரட்சி ஏற்பட்ட 31 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு எதிராக தம்முடைய பலத்தை வெளிப்படுத்தும் விதமாக ஆளுந்தரப்பினர் பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சியினர் நடத்திய பேரணிகள் எந்த அளவில் இருந்தன என்பது தெளிவில்லாமல் இருந்துவருகிறது.

அப்பேரணிகளை ஈரானின் ஊடகங்கள் புறந்தள்ளியிருந்தன. இணைய மற்றும் மின் அஞ்சல் சேவைகளும் தடைசெய்யப்பட்டும் மட்டுப்படுத்தப்பட்டுமிருந்தன.

அரச ஆயுத குழுக்களுக்கும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்குமிடையில் பல இடங்களில் மோதல்கள் ஏற்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் தாக்கப்பட்டனர் என்றும் எச்சரிக்கை வேட்டுகளும தீர்க்கப்பட்டுள்ளன என்றும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## பில் கிளின்ரனுக்கு நெஞ்சுவலி: வைத்தியசாலையில் சேர்ப்பு

வாஷிங்டன், பெப். 13

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் திடீர் நெஞ்சுவலி காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். 63 வயதான அவருக்கு ஆன்ஜியோ பிளாஸ்டி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள பிர்ஸ்பிடேரியன் வைத்தியசாலையில் வியாழக்கிழமை மாலை கிளின்ரன் சேர்க்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது கிளின்ரன் உடல்நிலை சீராக உள்ளது என முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்காலத்துக்குப் பின்னர், கிளின்ரன் தனது அறக்கட்டளை மூலமாகவும் ஐ.நா. உள்ளிட்ட இதர அமைப்புகளின் மூலமாகவும் பல்வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

சமீபத்தில் ஹெய்ட்டி பூகம்ப நிவாரணப் பணிகளுக்காக அவர் ஐ.நாவின் சிறப்புத்தூதராக அனுப்பப்பட்டார். ஏற்கனவே 'பைபாஸ்' சத்திர சிகிச்சை செய்யப்பட்ட கிளின்ரனுக்கு தற்போது அதிக பணிச்சுமை காரண மாக நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது என அவரின் செயலாளர் கூறினார்.

எனினும், அடுத்த சில நாள்களில் ஹெய்ட்டியில் தனது பணியை கிளின்ரன் தொடர்ந்து மேற்கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

## மாணவர் விஸா கட்டுப்பாடுகளால் பிரி. பல்கலைக்கழகங்கள் கவலை

லண்டன், பெப். 13

பிரிட்டனில் வெளிநாட்டு மாணவர்களுக்கான விஸா கட்டுப்பாடுகள் அண்மையில் கடுமையாக்கப்பட்டுள்ளன. இதனால், தங்கள் வருவாய் குறையும் என பிரிட்டிஷ் பல்லைக்கழகங்கள் அச்சம் அடைந்துள்ளன.

மாணவர்களுக்கு விஸா வழங்குவதில் அதிக முறைகேடுகள் நடைபெறுகின்றன எனக் கூறி வட இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு விஸா வழங்குவதை பிரிட்டன் கடந்த வாரம் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது. அத்துடன் அதிகபட்ச ஆங்கில அறிவு உட்பட பலவிதமான கட்டுப்பாடுகள் மார்ச் 3 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும் பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 189 ஆயிரம் கோடி வருவாய் வெளிநாட்டு மாணவர்கள் மூலம் கிடைக்கிறது என அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய யூனியன் மாணவர்களைப் போல மூன்று மடங்கு கட்டணம் இதர நாடுகளைச் சேர்ந்த மாணவர்களிடம் வசூலிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களுக்கு அளிக்கப்பட்டுவரும் மானியங்களும் பெருமளவில் குறைக்கப்படும் என அண்மையில் அந் நாட்டு அரசு அறிவித்தது.

இந்நிலையில், வெளிநாட்டு மாணவர்களுக்கான விஸா கட்டுப்பாடு காரணமாக தங்கள் வருவாய் பெருமளவு பாதிக்கப்படும் என பல்கலைக்கழகங்கள் அச்சம் அடைந்துள்ளன.

இதுகுறித்து பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்புத் தலைமை நிர்வாகி நிகோலா டான்ட்ரிட்ஜ் குறிப்பிடுகையில், ''சர்வதேச மாணவர்கள் மூலம் கல்வி, கலாசார, பொருளாதார நன்மைகளை பிரிட்டன் பெறுகிறது. போட்டி மிகுந்த இன்றைய சூழலில், மற்றவர்கள் எளிதில் அடைய விரும்பும் இடமாக பிரிட்டன் இருக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகளால் வெளிநாட்டு மாணவர்கள் பிரிட்டனுக்கு வருவது பாதிக்கப்படும்'' என்றார்.

''இதனால் அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவை உட்பட இதர நாடுகளின் பல்கலைக்கழகங்கள் லாபம் அடையும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## காஷ்மீர் விவகாரம் குறித்து இந்தியா பேச விரும்பவில்லை;பாக். குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், பெப். 13

காஷ்மீர் பிரச்சினை குறித்து பேச இந்தியா விரும்பவில்லை என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் வியாழக்கிழமை பேசுகையில், ''இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் ஷாஹித் மாலிக்கை இந்திய வெளியுறவுத் துறை செயலர் நிருபமா ராவ் அண்மையில் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் இரு நாட்டு வெளியுறவுத்துறை செயலர்கள் அளவில் பேச்சு நடத்துவது தொடர்பான பணிகள் சூடுபிடித்துள்ளன'' என்றார்.

''காஷ்மீர் பிரச்னை குறித்து பேச இந்தியா விரும்புவதில்லை. எனினும், காஷ்மீர் உட்பட 8 பிரச்சினைகள் குறித்து ஒருங்கிணைந்த பேச்சு நடத்துவதே முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவுடன் பெப்ரவரி 25 இல் பேச்சு நடத்த ஆட்சேபம் இல்லை என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி கூறினார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், ''பேச்சு எந்த கட்டத்தில் நின்றதோ, அதிலிருந்து நாம் தொடர வேண்டும். காஷ்மீர், நதிநீர் பங்கீடு போன்ற எத்தனையோ விடயங்கள் பேசுவதற்கு உள்ளன'' என்றார்.

''தீவிரவாதம் பற்றி மட்டுமல்லாமல் அனைத்து விடயம் குறித்தும் பேசலாம் என ஷாஹித் மாலிக்கிடம் நிருபமா ராவ் குறிப்பிட்டுள்ளார். பேச்சுகளில் எந்த விடயம் குறித்தும் இந்தியா கேள்வி எழுப்பலாம். அதுபோல [illegible] எழுப்புவோம்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''ஆக்கபூர்வமான பேச்சு அமைய வேண்டுமானால் அதற்கு முன் நிபந்தனைகள் எதுவும் இருக்கக் கூடாது. முன் நிபந்தனைகள் விதிப்பதால் எந்தவித பயனும் இருக்காது. பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்படாது'' என்றும் குரேஷி சுட்டிக்காட்டினார்.

''மும்பை சம்பவத்தால் இரு நாடுகள் இடையேயான பேச்சு பாதிக்கப்பட்டது. மும்பை சம்பவம் போன்ற தாக்குதல் பாகிஸ்தானில் தினசரி நிகழ்கிறது. இச்சம்பவங்களில் வெளிநாட்டவர் பலர் ஈடுபடுகின்றனர். அந்த நாடுகளுடன் பாகிஸ்தான் உறவை முறித்துக் கொள்ளவில்லை'' என்றும் அவர் மஹ்மூத் குரேஷி மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சண்முகசுந்தரசர்மா மனோன்மணி

சரவணை கிழக்கு, ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், அராலி மேற்கு, ஞானியார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகசுந்தரசர்மா மனோன்மணி 11.02.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகசுந்தரசர்மாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கரகுகவரதக்குருக்களின் (கொழும்பு) அன்பு மாமியாரும் நாகேஸ்வரியின் (கொழும்பு) பாசமிகு தாயும், ஜகதீஸ்வரன் (கொழும்பு), நளாயினி (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும், சபாபதிசர்மா (ராசப்பா ஐயா, கொழும்பு), சிவசுப்பிர மணியசர்மா (மணி ஐயா), பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.02.2010) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை வேலணை ஐயனார் கோயிலடி கிராமத்தை விட்டு பிரிந்து வாழும் அன்பு உள்ளங்களும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
ஞானியார் கோவிலடி,
வட்டுக்கோட்டை.

(94766)

தகவல்,
க.சிவசுப்பிரமணியசர்மா,
(மணி ஐயா - சகோதரன்)

## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிப.ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதி அதிபர் வே.வில்லவராயரும் கலந்துகொள்வர். (ஒ-6)

* * *

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சட்டத்தரணி வி.விமல்ராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-6)

* * *

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெற வுள்ளது.

அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வேள்ட் விஷன் மாவட்ட அறிக்கைப்படுத்தும் அலுவலர் ஜோசப் பீற்றர் கோல்டன் கொமராபிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். ஒ-6)

# முதலாம் ஆண்டு நினைவுத் துளிகள்

(13.02.2010)

| மண்மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 10 ★ 02 ★ 1963 |  | 13 ★ 02 ★ 2009 |

## சோதிலிங்கம் பஞ்சலிங்கம்

அன்பு நிறை சோதரனே பண்பான கண்மணியே
என்பும் உருக பாசக்கதை பல கூறுவீர்
நன்மையே எமக்கு நாடி நிற்பீர்
உம் பிரிவால் நாம் இங்கே கலங்கித் தவிக்கின்றோம்
கன்னல் மொழி பேசி கலகலப்பாய் இருப்பீர்
அண்ணா என்று பாசமழை பொழிந்திடுவீர்
உம் பிரிவால் நாமிங்கே கலங்கித்தவிக்கின்றோம்
ஆண்டொன்று ஆகின்றது ஆறவில்லை எம் துயரம்
ஆண்டொன்று ஆவதற்குள் அன்னையும் எமைப்பிரிந்து
உமை நாடி வந்தமையால் இத் தினத்தில்
உம் திதியினை செய்யமுடியாது அரற்றுகின்றோம்
அன்னையின் திதியதனில் உம் திதியை நாம் செய்து
உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

2/2, நீராவியடி, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நீங்கா நினைவுடன்
சகோதரர்களும், குடும்பத்தினரும்.

(94772)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை

## பொதுப்பட்டமளிப்பு-மார்ச் 2010

கலாநிதி, முதுமாணி, பட்டப்படிப்பின் டிப்ளோமா, இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 2010 மார்ச் 26,27,28 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 29.08.2007 ஆம் திகதிக்கு பின்பும் 01.07.2009 ஆம் திகதிக்கு முன்பும் சித்தியடைந்து பட்டங்கள் பெறதகுதியுடையவர்கள் 28.02.2010 இற்கு முன்னர் தமது வேண்டுகோளை அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

1. கலாநிதித் தேர்வு
2. முதுதத்துவமாணித் தேர்வு
3. கல்வியியல் முதுமாணித் தேர்வு
4. பிரதேச திட்டமிடல் முது கலைமாணித் தேர்வு
5. குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணித் தேர்வு
6. அபிவிருத்திக் கற்கை முதுகலைமாணித் தேர்வு
7. பண்பாட்டியியல் முதுகலைமாணித் தேர்வு
8. பொதுநிர்வாக முதுகலைமாணித் தேர்வு
9. தமிழ் முதுகலைமாணித் தேர்வு
10. சைவசித்தாந்த முதுகலைமாணித் தேர்வு
11. பட்டப்பின் கல்வி டிப்ளோமாத் தேர்வு
12. பட்டப்பின் பொது நிர்வாக டிப்ளோமாத் தேர்வு
13. பட்டப்பின் நூலகவியல் டிப்ளோமாத் தேர்வு
14. வைத்தியமாணி, சத்திரசிகிச்சை மாணித் தேர்வு
15. சித்தவைத்தியமாணி, சத்திரசிகிச்சை மாணித் தேர்வு
16. தொழில்நிர்வாகமாணித் தேர்வு
17. வணிகமாணித் தேர்வு
18. விவசாய விஞ்ஞானமாணித் தேர்வு
19. விஞ்ஞானமாணித் தேர்வு (பொது/சிறப்பு)
20. கலைமாணித் தேர்வு (பொது/சிறப்பு)
21. நுண்கலைமாணித் (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) தேர்வு
22. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணித்தலும்) வவுனியா வளாகம்
23. விஞ்ஞானமாணி (சுற்றாடல் விஞ்ஞானம்) வவுனியா வளாகம்
24. தொழில்நிர்வாக மாணி (முகாமை கற்கைகள்) வவுனியா வளாகம்
25. தொழில்நிர்வாக மாணி (கணக்கியலும் நிதியும்) வவுனியா வளாகம்
26. விஞ்ஞான டிப்ளோமா தேர்வு (2 வருடம்)
27. உடற்கல்வி டிப்ளோமா தேர்வு (2வருடம்)
28. மீன்பிடி விஞ்ஞான டிப்ளோமா தேர்வு (2வருடம்)

### அறிவுறுத்தல்கள்

**1. வேண்டுகோள்படிவங்கள்**

விண்ணப்பத்தாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**2. கட்டணங்கள்**

அ) வேண்டுகோள்கட்டணம்- Rs.200.00
ஆ) சான்றிதழ் கட்டணம்- Rs.350.00
இ) பட்டதாரி மேலங்கிக் கட்டணம்- Rs.50 .00

**குறிப்பு:** பின்வருவோர் வேண்டுகோள் கட்டணமும், பட்டதாரி மேலங்கிக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.
1. பட்டமளிப்பு வைபவத்திற்கு சமுகமளிக்காது பட்டச்சான்றிதழைப் பெறவிரும்பும் பட்டதாரிகள்.
2. ஒருவருட அல்லது இரண்டு வருட கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்கள்.

**3. கட்டணம் செலுத்தும் முறை**

* யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையின் கணக்கு இல.162-1-62-090501-3 இற்கு சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தை செலுத்த வேண்டும். (வங்கிப் பற்றுச்சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.)
* பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும். மேலதிகமான ஒரு போட்டோப் பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

**4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச் சீட்டும்**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச் சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும்.

**5. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப் படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6. வேண்டுகோள்படிவங்களைச் சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 28.02.2010க்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் பட்டம் பெறும் கற்கை நெறியை குறிப்பிடவும்)

(1) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்
உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை,
யாழ்ப்பாணப் பல்லைக்கழகம், யாழ்ப்பாணம்.

(2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்
சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/தேர்வுகள்
வவுனியா வளாகம், வவுனியா.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி: 28.02.2010**

முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விவரங்களுக்கு உதவிப்பதிவாளர்/ அனுமதிகள் (தொலைபேசி இல.021-222-6714) உடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
12.02.2010


DEVELOP YOUR CAREER PATH THROUGH IMPROVING LANGUAGE SKILLS & COMPUTER LITERECY...

ENGLISH FOR BUSINESS & COMMUNICATION
&
SINHALA LANGUAGE DEVELOPMENT PROGRAMME



அனுபவமிக்க ஆசிரியர்களினால்........

* அடிப்படையில் இருந்து கற்றுக்கொள்ள........
* உங்கள் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ள விசேட பயிற்சிகள்....
* வசதியான நேரத்துக்கு வகுப்புக்களை அமைத்துக்கொள்ள ......
* வகுப்புக்களில் வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர் (10-15பேர்)
* 100 மாணவர்கள் மட்டும் முதல் 6 மாத கால கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவர்.....

COMPUTER COURSE (கீழ்வரும் கற்கைநெறிக்கான சான்றிதழ்கள் யாவும் கொழும்பு I. S.S COMPUTER SYSTEM (AN ACCREDITED ACADEMY OF TRANS ATLANTIC COLLEGE LONDON (UK) நிறுவனத்திடமிருந்து வழங்கப்படும்)

01) MS OFFICE 2250/- 02) D.T.P 2000/-
03) HARDWARE 2000/- 04) INTERNET & E - MAIL 1250/-

அனைத்துக் கற்கைநெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் ரூ 500 மட்டுமே!

பதிவுகளை 25.02.2010 இற்கு முன் மேற்கொள்ளவும்.

ALLIANCE INSTITUTE
NO.25, SOMASUNDARAM AVENUE, CHUNDIKULI, JAFFNA
T.P - 021222 8193 / 0215670350 / 0773296407


# UNIVERSITY OF JAFFNA - SRILANKA

## GENERAL CONVOCATION - MARCH 2010

## SUPPLICATION FORM

**Note:** In writing your name please ensure that spelling of the name confirms what appears in the Birth Certificate. If the Birth Certificate is in Tamil or Sinhala, please give the English spelling of your name as it appears in your Admission Form.

**Registration No :-............................ Index No :-....................**

(1) Name in Full :-
(a) In English :-..................................................
(b) In Tamil :-..................................................
(c) In Sinhala :-..................................................

(2) Name of the Post Graduate Degree/Degree/Diploma to be conferred
:..................................................

(3) Year of passing the above examination and **the effective date of the degree**:..................................................

(4) Whether the Post Graduate Degree/Degree/Diploma to be confereed **"In Person"** or **"In Absentia"** (Please tick as appropriate)

| | |
|---|---|
| In Person | |
| In Abesentia | |

(5) Present Address :-..................................................
..................................................

(6) Telephone No :-.............................. E-mail:......................

(7) Postal Address :-..................................................
..................................................

**(8) Particulars of Payment made:- (Payment Receipt Attached)**

| | Total Fee | Date of Payment |
|---|---|---|
| (a) Supplication Fee (Rs. 200.00) | | |
| (b) Certificate Fee (Rs. 350.00) | | |
| (c) Gown Fee (Rs. 50.00) | | |

I hereby certify that the above information are correct and true to the best of my knowledge.

Date:.............................. ..............................
Signature of Applicant

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் கண்காணிப்புப் பாதுகாப்பு பிரிவு!

## பொலிஸ் தேர்தல் பிரிவு நடவடிக்கை

கொழும்பு,பெப்.13

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதிலும் தேர்தல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவொன்று நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமுள்ள 488 பொலிஸ் நிலையங்களிலும் இந்தப் பிரிவு அமைக்கப்படுகிறது. அத்துடன் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை உள்ளடக்கிய 75 தேர்தல் நடவடிக்கை அலுவலகங்களும் இயங்கும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் பொலிஸ் நிலைய மட்டத்தில் தேர்தல் முறைப்பாட்டுக்கென 413 விசேட பிரிவுகளும் நிறுவப்படவுள்ளன.

மூன்று மட்டத்தில் நிறுவப்படும் விசேட கண்காணிப்பு நிலையத்தின் பணிகள் யாவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம், மாவட்ட பொலிஸ் அலுவலகம், பிரதேச பொலிஸ் நிலையம் என்ற மட்டத்தில் பணிகள் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

# செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 6, தரம் 11 ஆகிய வகுப்புக்களில் வரலாறு பாடத்துக்காக நேற்று நடத்தப்படவிருந்த செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட இந்தச் செயலமர்வு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-1)

# அரசுக்கு ஆதரவாக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப். 13

அரசுக்கு ஆதரவாக நேற்றுப் பிற்பகல் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

ஜனாதிபதியின் வெற்றியை குறைத்து மதிப்பிட்டு ஏளனம் செய்யும் எதிர்க்கட்சியின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையிலுள்ள 80 தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களும் பெருந்தொகையான பொதுமக்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்திலுள்ள ஈழத்தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை

## தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, பெப். 13

தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்று, பின்னர் அங்கு தமிழகப் பிரஜைகளுடன் காதல் திருமணம் செய்துக் கொள்கின்ற இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு இலங்கைக் குடியுரிமை பெற்றுக் கொடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என இந்திய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ளவர்களை, தமிழகத்தில் உள்ளவர்கள் காதல் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் பல வருடங்களாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு காதல் திருமணம் செய்துக் கொள்கின்றவர்களின் குழந்தைகளுக்கு இந்திய, இலங்கை குடியுரிமை இதுவரையில் வழங்கப்பட்டதில்லை.

எனினும், இனிவரும் காலங்களில், காதல் திருமணம் செய்து கொள்கின்ற இலங்கை அகதிகளுக்கு இலங்கைக் குடியுரிமை பெற்றுக் கொடுக்க தமிழ்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் மற்றும், பதிவு நடவடிக்கைகள், சென்னையிலுள்ள இலங்கை உதவித் தூதரகத்தில் மேற்கொள்ளப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கு ரயில் பாதை புனரமைப்புப் பணி மும்முரம்

வடக்கு, கிழக்கின் ரயில்வே பாதைகளின் திருத்த வேலைகளைப் போக்குவரத்து அமைச்சு தற்போது முன்னெடுத்து வருகின்றது. இதற்கான பெருமளவான நிதி உதவி வெளிநாடுகளிடமிருந்து கிடைத்துள்ளது என போக்குவரத்துத் துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஏற்கனவே வடக்குக் கிழக்கு ரயில் பாதைகளைத் திருத்தி அமைக்கும் பணிக்கு இந்தியா மேலதிக உதவிகளை வழங்கியிருக்கிறது எனவும் அவர் தெரி வித்தார்.

30 வருட பயங்கரவாதம் கடந்த வருடம் மே மாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. போர்க்காலத்தில் ரயில் பாதைகள் பாரியளவில் சிதைத்திருந்தன.

தற்போது அரசின் 'கிழக்கின் உதயம்', 'வடக்கின் வசந்தம்' ஆகிய திட்டங்களினூடாக போரினால் பாதிக்கப்பட்ட பல பகுதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்வியியற்கல்லூரி மாணவர்களுக்கு இறுதிப்பரீட்சை

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியில் இரண்டு வருட வதிவிடப்பயிற்சியை முடித்துக் கொண்டு பாடசாலைகளில் உள் ளகப் பயிற்சியில் இணைந்துள்ள 9ஆம் அணியினருக்கான தேசிய டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இதனால் இந்த மாணவர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக் கம்கற்கை விடுமுறை விடப்படுவதாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ஒ-6)

# நேற்றுப்பல ஆலயங்க்ளில் சிவராத்திரி தினப் பூசைகள்

யாழ்ப்பாணம், பெப்.13

மகாசிவராத்திரி விரத தினம் அடுத்த மாதம் (மார்ச்) 13ஆம் திகதியே என்று பல தரப்பினரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்று குடாநாட்டில் பல ஆலயங்களிலும் சிவராத்திரி பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

சிவராத்திரி விரதம் குறித்து குழப்ப நிலையில் இருந்த குடாநாட்டு இந்துக்களில் பலர் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் சிவராத்திரி சிறப்பு பூசைகள் நடைபெற்றதால் நான்கு சாமப் பூசைகளிலும் கலந்து கொண்டனர். பல ஆலயங்களில் வழமை போன்று ஆன்மீக சொற்பொழிவுகள் மற்றும் பிரார்த்தனை நிகழ்வுகளும் நடைபெற்றன.

சிவராத்திரி விரத அனுஷ்டிப்பு குறித்து கடந்த சில தினங்களில் வெளியாகி இருந்த தகவல்களால் சிவனடியார்கள் என்ன முடிவு எடுப்பது என்று புரியாமல் தடுமாற்றம் அடைந்தனர்.

இரு பஞ்சாங்கங்களின் கணிப்புக் குறித்து பலரும் பகிரங்கமாக கடுமையான முறையில் விமர்சித்தமையையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற பிரசித்தி பெற்ற ஆலயங்களில் சிவராத்திரி விரதம் மார்ச் 13ஆம் திகதியே அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் குடாநாட்டில் இந்து பக்தர்கள் பலர் அங்கு பயணமானதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

# பொன்சேகாவின் மருத்துவ உதவி குறித்த கோரிக்கை இராணுவத் தளபதியால் ஏற்பு

கொழும்பு, பெப். 13

சரத் பொன்சேகாவின் மருத்துவ உதவிக்கு இராணுவ வைத்தியசாலையில் இருந்து மருத்துவக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என கோரி அவரது மனைவி விடுத்த வேண்டுகோளுக்கு இராணுவத் தளபதி சாதகமான பதிலளித்துள்ளார்.

இதன்படி, தடுத்து வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் அவசர மருத்துவ உதவிகளுக்காக இராணுவ வைத்திய சாலையில் இருந்து மருத்துவக் குழு ஒன்றை அனுப்ப தாம் உடன்படுகிறார் என இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இராணுவ வைத்தியசாலையின் மருத்துவ ஆலோசகர் மேஜர் ஜெனரல் எஸ்.எச். முனசிங்கவை, தமது கடமைக்கு மேலதிகமாக சரத் பொன்சேகாவோ அல்லது அவரது மனைவியோ கோரினால் மருத்துவ உதவியை வழங்குமாறும் இராணுவத் தளபதி பணித்துள்ளார்.

# காட்டுப்பன்றிகள் அட்டகாசம்

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் காட்டுப்பன்றிகளால் நெற்பயிர்கள் நாசம் செய்யப்பட்டு வருகின்றன.

கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் நெற்கதிர்களை வெட்டி சேதப்படுத்துவதாகவும், வயல்களில் வைக்கப்பட்டுள்ள சூடுகளை கண்டபடி துளைத்து நாசம் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பன்றிகளின் தொல்லையால் நெற்செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# எந்தச் சட்டங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரோலி இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவுடன் பொன்சேகாவின் கைது தொடர்பாக ஆராயப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"வாஷிங்ரனில் உள்ள இலங்கைத் தூதுவருடன் நாங்கள் கலந்தாலோசித்தோம். சரத் பொன்சேகாவிற்கு எதிரான எந்த நடவடிக்கையும் இலங்கைச் சட்டங்களின்படி இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினோம். மேலும் பொன்சேகா என்ன சட்ட அடிப்படையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பதை இலங்கை அரசு தெளிவுபடுத்தவேண்டும் எனக் கோரினோம்." - என்று குரோலி குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேளை, அமெரிக்கா அவருக்கு நிதியுதவி செய்தது என்ற இலங்கைப் பாதுகாப்புச் செயலாளரின் குற்றச்சாட்டையும் குரோலி நிராகரித்துள்ளார்.

இது உண்மையல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட பின்னர் அமெரிக்கா அவரது குடும்பத்தினருடன் இதுவரை தொடர்பு கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ள குரோலி, கொழும்பிலுள்ள தூதரகத்தை அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளும் சாத்தியங்கள் உள்ளன - என்றார். (அ-சி)

# பொன்சேகாவின் அடிப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, கொழும்பின் பாதுகாப்புக்குப் பொறுப்பான இராணுவத் தலைமையகத்தின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சுமித் மானவடுவ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் விஜேசிறி, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு கடந்த புதனன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவேளை, அருகில் கொழும்பு, புதுக்கடைப் பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற எதிரணியினர் மீது குண்டர் குழுவொன்று தாக்குதல் நடத்தியமையும், அதையடுத்து அந்த ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு வீசியும், தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும் கலைத்தமையும் தெரிந்தவையே.

நேற்று இந்த மனு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதும் நீதிமன்ற வளாகத்தில் சுமார் இரண்டாயிரம் பேர் வரை பொதுமக்கள் கூடியிருந்தனர்.

மனு விசாரணை ஆரம்பித்தபோது அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்ஜே ராஜரட்ண பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார்.

சரத் பொன்சேகா சார்பில் அவரது மனைவி இந்த விடயத்தில் மனுத் தாக்கல் செய்யமுடியாது என்றும் -

இரண்டாவது மனுதாரரான சட்டத்தரணி ஜமீலா பெரேரா உரிய சத்தியக் கடதாசிகளை மனுவுடன் இணைக்கவில்லை என்றும் -

அவர் வாதிட்டார். ஆனால், அந்த வாதங்களை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பான விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் வெறுமனே அரசமைப்பில் குறிப்பிடும் அம்சங்களுக்கும் சட்டவிதிகளுக்கும் மட்டும் மட்டுப்பட்டதல்ல. அது விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் கவனிப்பு எல்லை, வரையறையற்றது; விஸ்தீரமானது; விசாலமானது என மேற்படி பூர்வாங்க ஆட்சேபனையை நிராகரித்து உத்தரவு வழங்கிய சமயம் நீதியரசர்கள் குறிப்பிட்டனர்.

இந்த மனுவில் மனுதாரர்கள் சார்பில் கோரப்பட்டுள்ள உடனடி நிவாரணங்கள் குறித்துத் தீர்மானிப்பதற்கான விசாரணையை எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்துவது என்றும் நீதிமன்றம் தீர்மானித்தது.

இதேவேளை, வேட்புமனுப் பத்திரத்திலும், வழக்குகள் தொடர்பான ஆவணத்திலும் சரத் பொன்சேகா ஒப்பமிடுவதற்கு அனுமதி வழங்குமாறும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஷிப்லி அஸீஸ் ஆஜராகி வாதாடினார்.

நேற்று இந்த விசாரணைகளுக்கு சமுகமளித்திருந்த அமைச்சர்கள் மஹிந்த சமரசிங்க, ஜீ.எல்.பீரிஸ் போன்றோர் உயர்நீதிமன்றத்தைவிட்டு வெளியேறிய சமயம் அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் கூக்குரல் எழுப்பிக் கூச்சலிட்டனர்.

அதன் பின்னர், மக்கள் உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து அருகிலுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்க அலுவலகம் வரை அமைதியாக ஊர்வலம் சென்ற பின்னர் கலைந்து சென்றனர். (அ-சி)

# பொன்சேகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரினார்.

பொன்சேகாவின் மனைவியைத் தவிர, வேறு எவருக்கும் இதற்கான அனுமதி வழங்கப்படாதமையை அவர் சுட்டிக்காட்டினார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

பொன்சேகா கைதுசெய்யப்பட்டுள்ளமை சட்ட விரோதமானது என ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டிய ரணில் விக்கிரமசிங்க, கூடிய விரைவில் அவரை விடுதலை செய்யுமாறு கோரினார் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள ஆரம்பக் கட்ட விசாரணைகளும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான நடவடிக்கைகளும் முடிவடைந்த பின்னரே இது தொடர்பான தீர்மானத்தை எடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்கு மக்கள் ஆளும் தரப்பை ஆதரித்தால் பொருத்தமான அரசியல் தீர்வு

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா சொல்கிறார்

கொழும்பு, பெப். 13

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கு மக்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளித்தால் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு பொருத்தமான அரசியல் தீர்வுக்குச் செல்வது இலகுவாக அமையும் - என்று முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் நிலைமை குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டியுள்ளார். எனவே, எதிர்காலத்தில் அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு நாங்கள் செயற்படுவோம்.

அந்த வகையில், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை நாட்டு மக்களிடம் கோருகின்றது. முக்கியமாக, வடக்குக் கிழக்கு மக்கள், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

### எங்களை ஆதரித்தால் தீர்வு இலகுவாக இருக்கும்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்குக் கிழக்கு மக்கள் எங்களுக்கு ஆதரவு வழங்கினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவது இலகுவாக இருக்கும். அப்படியானால் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் விடயமும் இலகுவாக அமையும் என்று நம்புகின்றோம்.

அதாவது வடக்குக் கிழக்கு மக்களின் ஆதரவு எங்களுக்குக் கிடைக்கும் பட்சத்தில் தமிழ் மக்களுக்கு பொருத்தமான தீர்வு ஒன்றுக்கு செல்வது எங்களுக்கு இலகுவாக இருக்கும்.

அத்துடன், வடக்குக் கிழக்கில் அபிவிருத்திகளையும் எந்தத் தடையுமின்றி எம்மால் மேற்கொள்ள முடியும்.

எனவே, அனைத்து விடயங்களையும் பார்க்கும்போது வடக்குக் கிழக்கு மக்கள் அரசுக்கு தேர்தலில் ஆதரவு வழங்குவார்களானால் அது பாரிய பலமாக அமையும் என் பது நிச்சயமாகும். நாங்கள் அதனை எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ-சி)

## யானைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், சில விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய அவசியம் குறித்து ஜே.வி.பியுடன் தாம் உத்தியோகப்பற்ற பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## சரத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் பிரசந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். பொன்சேகாவின் கைதுதொடர்பாக அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீமூன் கரிசனை காட்டியதையடுத்து கொழும்பில் பதற்றம் அதிகரித்துள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. (அ-1)

## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் கைது செய்யப்படுவர் என அரசின் அமைச்சர்கள் சிலர் அண்மைக்காலத்தில் கருத்து வெளியிட்டு வருகின்ற பின்னணியிலேயே இந்த அச்சம் எழுந்திருக்கிறது எனக் கூறப்படுகின்றது.

''ஜெனரல் சரத் பொன்சேகா விடயத்தில் அரசு நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும்போது எமது கட்சியின் மூத்த உறுப்பினர்களை அரசு கைது செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' - என கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

''கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கைது செய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரித்தால், இது குறித்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அறிவிப்போம். அரசின் நடவடிக்கைகளை அவதானித்த பின்னர் எமது பாதுகாப்புக் குறித்து சர்வதேச சமூகத்திற்கு முறையிடுவோம்''- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடியோ மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நேரடிச் சாட்சியங்களின் அடிப்படையில் இந்த விசாரணை நடைபெறவுள்ளது என ஐ.நா. சபை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்த விசாரணையின்போது இலங்கை அரசு போர்க்குற்றங்களில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டால் பாரிய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விசாரணையில் சாட்சியமளிப்பதற்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இணங்கியிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இறுதி யுத்தத்தில் பங்கெடுத்த வேறு இராணுவ அதிகாரிகளை இந்த விசாரணையின்போது அழைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை முனைப்புக் காட்டி வருகின்றது எனவும் கூறப்படுகிறது. (அ-சி)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புகின்றோம்.'' - என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கூற்றை அமெரிக்கா, நோர்வேத் தூதரகங்கள் கடந்த வியாழக்கிழமை உறுதியாக மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், வெளிவிவகார அமைச்சர் வியாழக்கிழமை இலங்கையிலுள்ள இராஜதந்திர சமூகத்திற்கு ஜெனரல் சரத் பொன்சேகா கைதுசெய்யப் பட்ட விடயம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

இராணுவத் தளபதியாகவும், முப்படைகளின் தலைமை அதிகாரியாகவும் பணியாற்றிய வேளை சரத் பொன்சேகா தனது உயர் பதவிக்கு முரணான வகையில் செயற்பட்டுள்ளார். அவரைக் கைதுசெய்வதற்கு உறுதியான ஆதாரங்கள் உள்ளன. - என அமைச்சர் அப்போது தெரிவித்துள்ளார் என அறியவந்தது.


**காணி விற்பனைக்கு**

யாழ்.நகருக்கு சுமார் 6kmதூரத்திலும், நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ளது. இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்: 0776081693

**ஜேர்மன் Deutsch, Dutch, French வகுப்புக்கள்**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் எம்பஸி பரீட்சைகளுக்கான ஜேர்மன் Deutsch, Dutch, மற்றும் French வகுப்புக்கள் இன்று முதல் ஆரம்பம்.

அனுமதிகளுக்கு இலக்கம் 03, 2nd Lane, பலாலி றோட், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு 0774842464

(C/564854)

**IBM Computers for Sale @ UNI - COMPUTER WAREHOUSE**

Original IBM Think Center (Ex-Lease) (With Lock)

Intel Pentium IV 3.20 GHZ, 1 GB Ram 80 GB HD, LCD Monitor DVD Rom

நம்ப முடியாத விலையில் !!!

(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் எமது நிறுவனம் திறந்திருக்கும்)

Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!

System மட்டும் Rs.22000/= இன்றே முந்துங்கள் !!!

IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!! அநேக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விரும்பி பாவிக்கப்படுவது!!! நீடித்த பாவனைக்காலம் மிகக்குறைந்த மின்சாரத்தில் இயங்க வல்லது !!!

விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS, No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

**பரபரப்பான விற்பனையில்**

வருகிற சனி, ஞாயிறு 20, 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள

S.L.A.S போட்டிப்பரீட்சைக்கான

வழிகாட்டி நூல் - 01, வழிகாட்டி நூல் - 02 — ஆசிரியர் P.உமாசங்கர்

பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212226693

**BEACON** Clock Tower Road (பெருமாள் கோவில் அருகில்)

**கலைப்பிரிவு**

| | |
|---|---|
| அளவையியல் | S.S.மனோகரன் |
| தமிழ் | K.ஜெசிதன் |
| இந்துநாகரிகம் | K.S.ரமணன் |
| அரசியல் | N.ரஜிதா |
| வரலாறு | V.விக்கி |
| புவியியல் | S.டினேஷ் |
| நாடகமும் அரங்கியலும் | S.R.றமேஷ் |
| பொருளியல் | அருணன் |
| | M.Cசுதாகரன் |

(C/564843)

ஆரம்பம்: 15.02.2010 (திங்கள்) காலை 7மணி

**20, 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள S.L.A.S போட்டிப்பரீட்சை**

விசேட கைநூடு

அண்மைக்கால விடயம், உளச்சார்பு, முகாமைத்துவ உளச்சார்பு.

By.P.கமலதாசன்

கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, கவிதா (வவுனியா).

**புதிய பிரிவுகள் ஆரம்பம் !!**

Diploma in Human Resource Management (HRM) (5 Months)

Diploma in Marketing (Professional) (4 Months)

Diploma in Spoken & Practical English (4 Months)

அரசு, தனியார் மற்றும் NGO களில் தொழில் புரிவோருக்கு மிகவும் பயனுள்ள கற்கைநெறிகள் !!

புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 14/02/2010

விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS, No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup 'அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான Obesity package - 1200/=


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி

(உருத்திரா ரீச்சர் - முன்னாள் ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி)

யாழ்ப்பாணம், அத்தியடியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி நேற்று (12.02.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2010) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்களுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கே. தனபாலசிங்கம் (சகோதரன்).

23, அத்தியடி, புதுவீதி, யாழ்ப்பாணம்.


**SM CONSULTANT SERVICE — UK STUDENT VISA**

2009ம் ஆண்டு யூன் - டிசம்பர் காலப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு லண்டன் student Visa பெற்றுக்கொடுத்துள்ளோம் என்பதை மாணவர்கட்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

★ யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.

★ பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

★ விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு விபரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

★ சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!

தங்குமிட ஒழுங்குகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள் மற்றும் விசா சம்பந்தமான மேலதிக ஆலோசனைகள் என்பன எமது லண்டன் ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்.

அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை7.00 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம். அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

தொடர்புகளிற்கு: 021 222 3818, 021 567 3818, 077 452 8818

இல: 148, கோயில்வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

புதிய வரவுகள் மலிவான விலைகளில்..............

விலைக்கழிவுடன் இலவச இணைப்புக்களும்............

HSDPA Broadband Dongle (DIM Model) - USB Modem Prolink / Dlink Rs. 8,900/= Only

**MWC - P IV 01** — Rs. 49,900.00

Intel 2.60 Ghz Dual Core Processor, Asrock G31 Mother Board, 1 Gb DDR II 800 RAM, 160 Gb SATA Hard Disk, ATX Casing, Hp 24X DVD Writer, Hp 15.6" LCD Monitor, Hp Optical Mouse, Hp Multi Media Speaker, Multi Media Keyboard, 650W UPS

Free Items: Computer Table, Web Camera, Card Reader

**MWC - P IV 02** — Rs. 55,500.00

Intel 2.60 Ghz Dual Core Processor, Asus G31 Mother Board, 2 Gb DDR II 800 RAM, 250 Gb SATA Hard Disk, ATX Casing, SONY 24X DVD Writer, Hp 15.6" LCD Monitor, Hp Optical Mouse, Hp Multi Media Speaker, Multi Media Keyboard, 650W UPS

Free Items: Computer Table, Computer Chair, Card Reader

| | |
|---|---|
| Memory | |
| DDR I 400 512 Mb | 2,400/= |
| DDR I 400 1 Gb | 4,400/= |
| DDR II 800 1 Gb | 2,900/= |
| (Kingston/Trancent) | |
| Hard Disk | |
| 40 Gb SATA | 2,250/= |
| 160 Gb SATA | 4,600/= |
| ADSL Routers | |
| TP Link 1 Port | 3,750/= |
| TP Link 2 Port | 3,900/= |
| TP Link 4 Port | 5,750/= |
| D Link 4 Port | 5,750/= |
| Printers | |
| Hp D 1663 | 4,750/= |
| Epson T 10 | 4,750/= |
| Samsung Laser | 12,500/= |
| Scanners | |
| Mustek USB | 5,250/= |
| Cannon Lide 100 | 5,950/= |
| Hp G 2410 | 7,500/= |
| Pen Drives | |
| Trancent 2 Gb | 1,100/= |
| Kingston 4 Gb | 1,400/= |

Viewsonic Projector Rs. 89,900/= Only

SAMSUNG DIGITAL CAMERA 12.2 Mega Pix Rs. 14,900/= Only

Computer Chair (Wheel) Rs. 2,990/= Only

ASTA Advtg' 0718561250

**MUSIC WORLD & COMPUTERS**

141 B, Post Box Junction, Palaly Road, Thirunelvely, Jaffna. musiccom27@yahoo.com - 021 222 6554


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org